
# கூத்தரங்கம்
KOOHHARANGAM

விலை ரூ. 60
அளிக்கை 18



இந்தியச் சிறப்பிதழ்

சா வீட்டில்

# கட்டைக் கூத்து!

# அனைவரும் இணைவோம்!

இலங்கை இன்று படுபயங்கரமான சூழலுக்குள் சிக்கிக்கொண்டுள்ளது. எவரும் தமது கருத்துக்களை வெளிப்படையாகத் தெரிவிக்க முடியவில்லை. மனிதம் செத்து நீண்ட நாட்களாகிவிட்டது, சமாதானத்திற்காகக் குரல் கொடுப்பவர்களே தேசத் துரோகிகளாக அடையாளம் காட்டப்படும் நிலையில் கலைஞர்கள் எம்மாத்திரம்? சிங்கள திரைப்படக் கலைஞர்கள் இருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளார்கள். யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கில் பல நாடகக் கலைஞர்களும் இலக்கியவாதிகளும் கொல்லப்பட்டுள்ளார்கள். இத்தகைய நிலையில் கலையை எப்படி வளர்க்க முடியும்? அதுவும் நாடகத்தை எப்படி மேடையேற்ற முடியும்? ஆற்றுகையில் இடம்பெறும் எந்த ஒரு வசனமும் தேவைக்கேற்ப அரசியல் சாயம்பூசப்பட்டு, நீதி விசாரணைகள் ஏதுமற்ற நிலையில் மரணதண்டனைக்கு கலைஞன் உள்ளாக்கப்பட்டு விடக்கூடும் என்ற அச்சம் நிலவும் ஒரு தேசத்தில் கலை எப்படி முகிழும்? தலைகளுக்கு மேலே குண்டுகள் விழும் போதும். உயிரைக் காக்க கிடைத்ததைக் கையில் எடுத்துக் கொண்டு அகதி முகாம்கள் நோக்கி ஓடுகையிலும் ஷேக்ஸ்பியர் போன்று நாடகம் எழுதவா தோன்றும்?

இந்த லட்சணத்தில் இந்த ஆண்டை நாடக ஆண்டாகப் பிரகடனப்படுத்தியிருக்கிறது அரசு. தமது கருத்துகளை, உள்ளதை உள்ளபடி சொல்லி விட்டு உயிருடன் இருக்க முடியுமா என்று தமிழ் நாடகக் கலைஞர்கள் அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கும் ஒரு ஆண்டு இலங்கையில் நாடக ஆண்டாக – ஜனாதிபதியின் புண்ணியத்தில் – பரிணமித்திருக்கிறது. இந்த நாடக ஆண்டையொட்டி தமிழ் நாடக விழா ஒன்றை எப்படியாவது நடத்தி விடுவதற்கு அரச திணைக்கள அதிகாரிகள் படாதபாடு பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்றும் கேள்விப்படுகின்றோம். அதிலாவது தமிழ்க் கலைஞர்கள் தமது கருத்துக்களை வெளிப்படையாகச் சொல்ல முடியுமா என்பது தெரியவில்லை. அப்படிச் சொல்ல எவராவது முன்வருவார்களா என்பதும் புரியவில்லை. ஒன்று அல்லது இரண்டு நாடகங்கள் மட்டுமே மேடை ஏறும் போன்று தெரிகின்றது.

கண்ணுக்கு முன்னால் நடக்கும் அநீதிகளைத் தட்டிக்கேட்கத்தான் முடியாவிட்டாலும் அவை குறித்த தம் மன உணர்வுகளை விமர்சனங்களை ஆற்றுகைகளாக வெளிப்படுத்தவும் முடியாத சோகத்தில் ஒவ்வொரு ஆற்றுகையாளர்களும் நொந்து வெந்துபோய்க் கிடக்கிறார்கள். குறிப்பாக வடக்கு–கிழக்கில் கலைஞர்களின் இன்றைய நிலை மிகமிகப் பரிதாபத்துக்குரியது. தொண்டைக்குழி வரை வந்துவிட்ட தமது குரல்களை வெளியே விடமுடியாமல் மென்று விழுங்குகிறார்கள். அப்படியே குரல் கொடுத்தாலும் அந்தக் குரல் இல்லாது செய்யப்பட்டுவிடும் நிலையில் அவர்களாலும்தான் என்ன செய்ய முடியும்?

ஆனாலும் எந்தத் தடையையும் இடரையும் எதிர்த்து நின்று, அதனை ஊடறுத்து, மெல்ல வளர்ந்து பின் வீறுகொண்டு அந்தத் தடையையே உடைக்கும் சக்தி கலைக்கு உண்டு. அதனால் தான் மனிதன் காலத்து வரலாறு முழுவதும் கலை அவனுடனேயே பயணிக்கிறது. வடக்கு–கிழக்கின் இன்றைய பயங்கர நிலை, கலைகளைப் படைப்பதற்குரிய போதிய வெளியைத் தரவில்லைத்தான். அதற்காக எல்லாவற்றையும் அப்படியே விட்டுவிட முடியுமா என்ன? கிடைக்கும் நூலிழை வெளியில் புகுந்து தன் உயிர்ப்பை நிலைநாட்ட கலை துடித்துக்கொண்டே இருக்கிறது. சாவுக்கு மத்தியில் வாழ்ந்து தானே ஆகவேண்டி இருக்கிறது? 'உயிர்த்த மனிதர் கூத்து' நாடகம் சொன்னது போன்று "வாழ்க்கையே எங்கள் ஆயுதம். வாழ்வதே எங்கள் போர்முறை" என்றாகிவிட்ட தமிழனின் வாழ்வில் போரையும் சாதகமற்ற சூழலையும் காரணங்காட்டி ஆற்றுகைகளைப் படைக்காமல் இருந்துவிடப் போகிறோமா?

தமிழ் சினிமா, ஒரு மாய உலகிற்குள் வாழ்ந்து வளர்ந்து கொண்டிருக்கின்ற நிலையில் ஈழத் தமிழர்களின் கதை, பாடுகளைச் சொல்ல இருக்கின்ற ஒரே காண்பிய ஊடகம் நாடகம். அதனையும் நாம் இப்போது பயன்படுத்தாமல் விட்டுவிடலாமா? இத்தனை இடர்களுக்கு மத்தியிலும் யாழ்ப்பாணத்தில் நாடகங்கள் மேடையேற்றப்படுவதாகச் செய்திகள் கிடைக்கின்றன. மனதைத் தளரவிடாது நம்பிக்கையைத் தரும் விடயம் அது. ஆனால் ஒப்பீட்டளவில் அமைதியான நகரமாகக் – பாதுகாப்பான இடமாகக் – கொள்ளப்படத்தக்க கொழும்பில் எந்தத் தமிழ் நாடகத்தையும் காணமுடியவில்லை. வானொலி நாடகங்கள் தனியார் வானொலிகளின் புண்ணியத்தில் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கின்றன. என்றாலும் தமிழர்களின் பிரச்சினைகளை, துன்பங்களை, சொல்லொணாத் துயரங்களை அவை கண்டுகொள்வதாகத் தெரியவில்லை. இத்தனைக்கும் மேற்கு மாகாணத்தில் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் வசிக்கின்றார்கள். இங்கேயும் அவர்கள்படும் துன்ப துயரங்கள் சொல்லி மாளாதவை. ஆனாலும் ஏனோ காத்திரமான படைப்புக்களைக் காணச் சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை. இந்த நிலை இப்படியே தொடராமல் ஊக்கமாக ஏதாவது செய்ய அனைத்துக் கலைஞர்களும் முன்வர வேண்டும். சாத்தியமான அனைத்து வழிகளிலும் தமிழ்க் கலைகளின் விடுதலைக்காகவும் பாடுபட வேண்டியது ஒவ்வொருவரதும் கடமையல்லவா?

**- ரசிகன்**

# கூத்தரங்கம்

ஆரம்பம் - மார்ச் - 2004

மார்ச் 2007 அளிக்கை - 18

திறந்த மனமொன்று வேண்டும்

ஆசிரியர்:
தே.தேவானந்த்

நிர்வாக ஆசிரியர்:
பிரேம்

வடிவமைப்பு:
தேபிந்த்

கணினி எழுத்துரு:
ந.கஜித்தா

வெளியீடு:
கூத்தரங்கம்
Kooth-arangam



தொலைபேசி: 0777286220,
0773151395, 0773245334

மின் அஞ்சல்:
kooth_arangam@yahoo.com
e.mail : kooth_arangam@yahoo.com

தொடர்புகளுக்கு:
யாழ். - அருளகம், ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்,
இலங்கை.
கொழும்பு - 60 3/5, மேபீல்ட் வீதி,
கொழும்பு -13, இலங்கை.






பக்கம் - 03
உள் நின்று ஒளிரும் சக்தி





பக்கம் - 10
சா கீட்டிய
கட்டைச் சுத்து






பக்கம் - 13
நாராய் சொன்ன கதை





பக்கம் - 19
தாய்லாந்தின் பாரம்பரிய அரங்கு


பக்கம் - 22
பாரம்பரிய விளையாட்டுக்களில் அரங்கக் கூறுகள்





பக்கம் - 27
26 நாயகர்களுக்கு ஒரேயொரு நாயகி



பக்கம் - 29
நாடகத்தின் வீழ்ச்சிக்கு ரசிகர்கள்தான் காரணம்
- சண்முகம் புஸ்பராஜன்







பக்கம் - 30
பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்
- நாடக எழுத்தரு


# பதிவுகள்



கொக்குவில் பிரம்படியைச் சேர்ந்த
மறைந்த மாவீரன் வை. முத்துலிங்கம்
அவர்களின்
குடும்ப நிதி உதவிக்காக
கொக்குவில்
"சாக்கடைச் சமுதாயம்"
டிக்கெட்டுகள்- ரூபா. 10, 5, 3, 2, 1.

யாழ்ப்பாணத்தில் நாடகத்திற்குப் பொற்காலம் காணப்பட்டபோது பல்வேறு தேவைகளுக்காவும் நாடகம் மேடையேற்றப்பட்டுள்ளது. கொக்குவில் பிரம்படியைச் சேர்ந்த வ.முத்துலிங்கம் அவர்களின் குடும்ப நிதிஉதவிக்காக 1963ஆம் ஆண்டில் சமூக சீர்திருத்த நாடக மன்றம் 'சாக்கடைச் சமுதாயம்' என்ற சமூக நாடகத்தை தயாரித்தளித்துள்ளது. அந்தக் காலத்திலேயே 10 ரூபா வரைக்கும் ரிக்கெட்டுக்கள் விற்கப்பட்டுள்ளன.

பதிவுகள் பகுதிக்கு நாடகங்கள் தொடர்பான அரிய ஆவணங்கள் (படங்கள் துண்டுப்பிரசுரங்கள் நுழைவுச் சீட்டுக்கள் வெளியீடுகள்) எதிர்பார்க்கப்படுகின்றன. பிரதியாக்கம் செய்யப்பட்ட பின்னர் மூல ஆவணங்கள் மீளக் கையளிக்கப்படும். அதேநேரத்தில் கூத்தரங்கள் இதழுக்கான ஆக்கங்களும் வரவேற்கப்படுகின்றன. Koothharangam, No. 60-3/5 Mayfield road, Colombo -13 என்ற முகவரிக்கு அல்லது யாழ். முகவரிக்கு அவை அனுப்பி வைக்கப்பட வேண்டும். தரமானவை பிரசுரிக்கப்படும்.

## கூத்தரங்கம்

### நம்பிக்கை!

நாடகம் பொழுதுபோக்கு சாதனம் என்ற நிலையில் இருந்து வெளியேறி நீண்ட காலமாகிவிட்டது. தற்போது அது கல்வியின் பிரிக்க முடியாத ஓர் அம்சமாகப் பரிணமித்துக் கொண்டிருக்கின்றது. ஆரம்பக் கல்வி வரைக்கும் வியாபித்திரக்கின்றது. நன்றாகக் கவனிக்கப்படுமிடத்து மிகச் சிறந்த பொற்காலம் ஒன்று நாடகத்திற்குக் காத்திருக்கின்றது என்றே எண்ணத் தோன்றுகின்றது. நாட்டுச் சூழல் அதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

இப்படிப்பட்டதொரு நிலையில் நாடகத்திற்கான வெளியீடுகளின் தேவையை உணர்ந்தே கூத்தரங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இன்று இலங்கையில் இருந்து வெளியாகும் நாடகத்திற்கான ஒரே இதழ் என்ற நிலையை கூத்தரங்கம் எட்டியுள்ளது.

ஒப்பீட்டளவில் அமைதி நிலவியதொரு சூழலிலேயே கூத்தரங்கம் மலர்ந்தது. நம்பிக்கையூட்டிய அந்தக் காலப்பகுதி தந்த தெம்பில்தான் இந்த முயற்சியில் நாம் இறங்கினோம். ஆனால் வெகு விரைவில் காலம் எம்மை ஏமாற்றி விட்டது. நிலைமைகள் இப்போது எமக்குச் சாதகமாக இல்லை. நாடகங்களைப் பிரசவிப்பதோ வெளியீடுகளைக் கொண்டு வருவதோ கனவில் மட்டுமே நடக்கக் கூடியவை என்ற நிலைதான் இன்று.

இத்தகைய இக்கட்டுக்குள்ளும் கூத்தரங்கம் தனது மூன்று ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது. பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இதுவரை 17 இதழ்கள் வெளிவந்துள்ளன. நாடக ஆர்வலர்கள் மத்தியிலும் வெளிநாடுகளிலும் காணப்பட்ட வரவேற்பு ஈழத்து நாடக உலகில் இருந்த தேவை என்பன எந்த இடர்களுக்கு மத்தியிலும் பணியாற்றி இதழ்களை வெளியிட வேண்டும் என்ற உந்துதலைத் தந்து நின்றது.

போதியளவு நிதி வசதியோ ஆதரவோ இன்றி அதுவும் இவ்வாறானதொரு இதழை வெளியிடுவது என்பது கல்லில் நாருரிப்பது போன்றதொரு பணி. இதனாலேயே இதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இத்தகைய முயற்சிகள் குறுகிய காலத்திற்குள் முடங்கிப் போயிருந்தன. ஆனாலும கூத்தரங்கம் நம்பிக்கை தரும் வகையில் தனது நான்காவது ஆண்டில் புதுப் பொலிவுடன் காலடி எடுத்து வைக்கின்றது.

ஆம்! இந்த இதழில் இருந்து வர்ண முகப்பு அட்டையுடன் கூடிய இதழ்களை வெளியிட நாம் தயாராகியுள்ளோம். இது ஒரு மைல் கல். ஆரம்பித்த மூன்று ஆண்டுகள் கடந்து, வரலாறுகள் போன்று கீழ் நிலை நோக்கிச் செல்லாமல் ஒரு படி நாம் முன்னேறியிருக்கின்றோம் என்பது நம்பிக்கை தருவதாக இருக்கின்றது. இந்த நிலையைத் தக்க வைக்கவேண்டும். அதற்கு உங்கள் எல்லோரது ஆதரவும் வேண்டும். நல்குவீர்கள் என்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது. – ஆசிரியர்.

# செய்திகள்

## சிறுவர் அரங்கக் களப்பயிற்சி

இன்றைய கல்வி முறையில் முக்கியத்துவம் பெற்றுவரும் சிறுவர் அரங்கு தொடர்பாக ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு விளக்கும் களப்பயிற்சி ஒன்று கடந்த ஜனவரி மாதம் 27ஆம் திகதி யாழ். மாவட்டத்தின் வடமராட்சி கல்வி வலயத்தில் இடம்பெற்றது. செயல்திறன் அரங்க இயக்கம் இந்தக் களப்பயிற்சியை ஒழுங்கு செய்திருந்தது. வலயக் கல்விப் பணிமனை இதற்கான அனுசரணையை வழங்கியிருந்தது.

ஈழத்து நாடக உலகின் தாய் என அழைக்கப்படும் குழந்தை ம.சண்முகலிங்கமும் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளரான ரதிதரனும் பயிற்சிகளை வழங்கினர். தற்போதைய கல்விச் செயற்பாட்டுக்கு ஏற்ப சிறுவர் அரங்கை எப்படிப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது தொடர்பிலும் சிறுவர் நாடகங்களுக்கான எழுத்துருக்களை உருவாக்குவது தொடர்பிலும் ஆசிரியர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. 42 பேர் இதில் பங்குபெற்றனர். கடந்த இரண்டு ஆண்டுகளாக இத்தகைய களப்பயிற்சிகள் யாழ்ப்பாணத்தில் ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்டு வருகின்றன. □

## சிறுவர் நாடக விழா!

நாடக ஆண்டான 2007ஆம் ஆண்டு, யாழ்ப்பாணத்தில் சிறுவர் நாடக விழாவுடன் ஆரம்பமாகியது. நாவற்குழி பகுதியிலுள்ள 8 கிராமங்களைச் சேர்ந்த சிறுவர்கள் நடித்த நாடகங்கள் 01.01.2007 அன்று மேடையேற்றப்பட்டன.

நாவற்குழி மத்திய மகா வித்தியாலயத்தில் அதன் அதிபர் திருமதி ம.மேகலிங்கம் மற்றும் தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்ள நாடக விழா இனிதே நடந்தேறியது. செயல்திறன் அரங்க இயக்கம் இந்த நாடக விழாவை ஏற்பாடு செய்திருந்தது.

கடந்த ஆண்டின் இறுதி நாளையும் நாடக விழாவுடனேயே நிறைவு செய்தது செயல்திறன் அரங்க இயக்கம். கைதடிப் பகுதியிலுள்ள பின்தங்கிய 7 கிராமங்களைச் சேர்ந்த சிறுவர்கள் நடித்த நாடகங்கள் 31.12.2006 அன்று மேடையேற்றப்பட்டன. மிக இக்கட்டான இறுக்கமான நிலையில் யாழ். குடாநாடு இருந்தபோதும் இந்த நாடக விழாக்கள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சிறுவர்களின் எதிர்காலம் கருதியும் அவர்களின் கல்வி அபிவிருத்தியை நோக்காகக் கொண்டும் இந்த நாடக விழாக்கள் நடத்தப்பட்டதாக செய்திறன் அரங்க இயக்க நிறைவேற்று இயக்குனர் தெரிவித்தார். அச்சம் பதற்றம் இறுக்கம் போன்றவறால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களை அவற்றிலிருந்து வெளியே கொண்டு வந்து சாதாரண வாழ்க்கையில் ஈடுபடுத்துவதில் அரங்கு பெரும் பங்காற்றுகின்றது. அந்த வகையில் இக்கட்டான நேரத்திலும் அவர்கள் தன்னம்பிக்கையுடன் தமது கல்வியைத் தொடர்வதற்கான ஊக்கத்தை வழங்குவதற்கு இந்த நாடக விழாக்கள் பெரிதும் உதவின என்றும் அவர் கூறினார்.

இந்த ஆண்டில் மற்றொரு சிறுவர் நாடக விழாவை நடத்துவதற்கும் செயல்திறன் அரங்க இயக்கம் திட்டமிட்டுள்ளது. சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதை நோக்காகக் கொண்டு இந்த நாடக விழாக்கள் நடத்தப்படும் என்று அலுவலர்கள் தெரிவித்தனர். □

## ஒரு வரலாற்றுப் பதிவு

# உள்நின்று ஒளிரும் சக்தி

## பெண்கள் நாடக விழா



நிழல்தேடும் மரங்கள் மற்றும் இடிகரை மண் நாடகங்களில் இடம்பெற்ற காட்சிகள்

இலங்கையின் வடமுனை யாழ்ப்பாணம். இன்று ஆறு மாதங்களாக நாட்டின் ஏனைய பாகங்களுடன் தொடர் பறுந்து நிற்கிறது. யுத்தமொன்று மூழுமென்ற பயத்தில் உறைந்துள்ளார்கள் யாழ்ப்பாணத்தில் வசிக்கின்ற ஐந்து இலட்சம் 'அப்பாவிப் பொதுமக்கள்'. மனித நேயமற்ற மிருகக் கொடூரத்துக்குள் சிறைப்படுத்தப்பட்டுள்ளார்கள். இனி வரப்போகின்ற மிகப் பெரும் பயங்கரத்தை கோடிகாட்டுவதாக தினமும் படுகொலைகள், ஆட்கடத்தல், சித்திரவதை, களவு, மானபங்கப்படுத்தப் படல் எனப் பலவும் 'பாதுகாப்பு' என்ற போர்வையில் அரங்கேறுகின்றன.

ஒரு யுத்த சூழலில் எப்போதும் பாதிக்கப்படுபவர்கள் நலித்த பகுதியினர். குறிப்பாகப் பெண்கள், சிறுவர்கள் வயோதிபர்கள், நோய் வாய்ப்பட்டோரைக் குறிப்பிடலாம். கெஞ்சுவது, காத்திருப்பது, தவம் கிடப்பது, அழுது புலம்புவது, பயப்பீதியில் கிலிகொண்டிருப்பது, வாயில்லாப் பூச்சியாவது, சுயம் மறப்பது, கூழைக் கும்பிடு போடுவது என்ற பண்புகள் சமூகத்தில் தானே வேரூன்றி வளர்கின்றன. எதிர்காலத்தில் ஓர் ஆரோக்கியமான சமூகம் வளருவதற்கான வாய்ப்புக்கள் அறவே இல்லாது போய் விடுமோ, என்ற பயம், அச்சம் எம்மை ஆட்கொண்டு ஆட்டிப் படைக்கிறது!! ஆகஸ்ட் 11, 2006 இற்குப்பின் உணவுத் தட்டுப்பாடு அல்லது உணவு இல்லாத நிலை சமூகத்தின் அடித் தள மற்றும் மேற்தளக் கட்டுமாணங்களைப் பலமிழக்கச் செய்திருக்கின்றன. இக்காலத்தில் குறிப்பாக ஜனவரி, 2007 வரை பெண்களும் குழந்தைகளும் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**ஐந்து பேர் கூடிநிற்க முடியாத யாழ்ப்பாணத்தின் இராணுவ நெருக்கீட்டுச் சூழலில் மார்ச் 08 பெண்கள் தினத்தைச் சாட்டாக வைத்து முந்நூறு பெண்கள் ஒன்றுகூடி தமது பிரச்சினைகள் பற்றி மேடையேறிப் பேசினர்**

உணவின்மை ஒரு சாதாரண கிராமத்துப் பெண்ணை உணவைத் தவிர்ப்பதற்கு அல்லது குறைப்பதற்கு நிர்பந்தித்திருக்கிறது. இக்காலத்தில் தமது சமயலைறைக்குச் செல்வதற்கு அவர்கள் பயந்திருக்கிறார்கள். பொருள்கள் இல்லை. ஒவ்வொரு பொருளும் நான்கு அல்லது ஐந்து மடங்கு அதிகரித்த விலை. பணத்தைக் கொடுத்தாலும் அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியாதநிலை, மனதுக்கும் உடலுக்கும் வலுச்சேர்க்கின்ற புழுங்கல் அரிசி இல்லையென்பதும் சத்தில்லாத வெள்ளைக் கோரா அரிசியையும் அமெரிக்கன் மாவையும் தினமும் சாப்பிடுகிறோமே என்ற மனப்புழுக்கமும் ஒவ்வொரு பெண்ணின்

உடலையும், உளத்தையும் பாதித்திருக்கிறது. பிள்ளை பசியென்றபோது தம் கையறுநிலை உணர்ந்திருக்கிறார்கள். யாழ். மக்களுக்குப் போஷாக்கில்லை என்று அறிந்ததும் 'சிக்கின் குனியா'வும் அவர்களைத் தாக்கி வலுவைக் குறைத்துச் சென்றது. என்ன கொடுமை? கற்பிணித் தாயும் பாலூட்டும் தாயும் சத்துள்ள உணவின்றி வாடினார்கள். வலுக்குன்றிய குழந்தைகள் பிறக்கப்போகின்றன. வளமான குழந்தைகளை எதிர்காலத்தில் பெற்றுத் தருவதற்கு ஏற்றதாக குழந்தை பெற்ற தாயைப் பராமரிக்க சத்துள்ள எந்த உணவுகளும் இருக்கவில்லை. பெரியவளான பெண் இயற்கை நியதியை கடிதம் மூலம் கிராம சேவகருக்கும் பிரதேச செயலருக்கும் ப.நோ.கூ. சங்க முகாமையாளருக்கும் தெரிவிக்க வேண்டியநிலை. இரகசியமாகப் பேணப்படவேண்டிய இயற்கை நியதி பகிரங்கப்படுத்தப்படுகிறது. இத்தனையும் மன உளச்சலைக் கொடுக்க பெண்கள் ஏது செய்வோமென்று ஏங்கி நின்றார்கள்; நிற்கிறார்கள்!! பால், பால்நிலைச் சமத்துவம், பெண்கள் உரிமைகள், பெண்களுக் கெதிரான வன்முறை ஒழிப்புக் குழு என்று பிழைப்பு நடத்திய ஒருவரையும் இக்காலத்தில் காணமுடியவில்லை.



**நித்திய நிதர்சனமும் நாளைய தரிசனமும் நாடகத்தில் இடம்பெற்ற காட்சி.**

உயிர் துச்சமாய் மதிக்கப்பட்டு வேண்டும்போது வேண்டும் இடத்தில் பறிக்கப்படுகிறது. அந்த உடலுக்கும் உயிருக்கும் வானொலிகள், தொலைக்காட்சி இணையத்தளங்கள் வெவ்வேறு வியாக்கியானங்கள் கொடுக்கின்றன. வீழ்ந்து கிடக்கும் அப்பாவியை ஊதிப்பெருப்பித்து துரோகியென்றும் பயங்கரவாதியென்றும் முத்திரை குத்துகிறன. உயிர் பறிபோய்விடு மென்ற பயத்தில் உயிர்மீது பற்றுவைக்க வேண்டிய நிலை இது மன அழுத்தத்தை அதிகரிக்கிறது.

ஆனால், இந்த இக்கட்டான சூழ்நிலையில் பாதுகாப்பு என்ற பெயரில் நடைபெறுகின்ற கெடுபிடிகளுக்கு மத்தியில் ஓர் அரங்க நிறுவனத்தின் அரங்கச் செயலாளிகள் பதினைந்து கிராமங்களிற்கு வாராந்தம் விஜயம் செய்து 'தைரியமான பெண்களை உருவாக்கும்' பெரும் பணியை ஆற்றினார்கள். ஆற்றுகிறார்கள். வாகனங்களில் செல்லும்போது தினமும் இராணுவத்தினர் மறித்து நீண்ட நேரம் காத்திருக்கச் செய்தபோதும், சுற்றிவளைப்புகளில் தடுத்துவைக்கப்பட்டபோதும், அச்சுறுத்தப்பட்டபோதும், அலுவலகம் அவ்வப்போது சோதனையிடப்பட்ட சந்தர்ப்பங்களிலும்கூட தொடர்ந்து களப்பணி நடக்கிறது. 'தைரியமான பெண்களை' உருவாக்கும் உளசமூகப் பணியை அரங்கு ஊடாகச் செயற்படுத்தினார்கள். செயற்படுத்துகிறார்கள்.

ஆட்கள் அசையவே முடியாது என்ற காலகட்டத்தில், அசையவும், சிந்திக்கவும் முடியும் என்ற சாத்தியப்பாட்டு வெளியை அந்த மக்களுக்கு அரங்கு உருவாக்கிக் கொடுத்தது. இது சிறுவர்களுக்காகவும் பெண்களுக்காகவும் மட்டுமே நடக்கின்ற பிரத்தியேகமான செயற்திட்டம்.

உணவில்லாததொரு சூழலில் எப்படி தைரியமான பெண்ணை உருவாக்குவது? இங்கு உடல் தைரியமல்ல, உளம்/மனத் தைரியமே கருத்தில் கொள்ளப்படுகிறது. ஆடுவது, பாடுவது, கதைப்பது, பாகமாடுவது, விளையாடுவது போன்ற பல்வேறு செயற்பாடுகள் ஊடாகத் தம் பிரச்சினைகளை அறிந்து, அதனை அலசி ஆராய்ந்து, தீர்ப்பதற்கான வழிகளைப் பற்றியும் சிந்தித்தார்கள். தம் சிந்தனையை ஓர் நாடகமாகத் தயாரித்து மார்ச் 08 பெண்கள் தினத்தில் போட்டார்கள். ஒரு ஐந்து பேர் கூடி நிற்க முடியாத யாழ்ப்பாணத்தின் இராணுவ நெருக்கீட்டுச் சூழலில் மார்ச் 08 பெண்கள் தினத்தைச் சாட்டாக வைத்து முந்நூறு பெண்கள் ஒன்று கூடி தமது பிரச்சினைகள் பற்றி மேடையேறிப் பேசினார்கள், சிந்தித்தார்கள். இதில் நூறு பெண்கள், நிகழ்ச்சிகள் மற்றும் ஒழுங்குபடுத்தல்களில் தீவிரமாகச் செயற்பட்டார்கள்/உழைத்தார்கள்.

இது ஒரு வரலாற்றுச் சாதனை. சோதனைச் சாவடிகள் அதிகரித்ததொரு சூழலில் மார்ச் 08, 2007 அன்று தைரியமான பெண்களுக்கான வெளிப்பாட்டுக் களம் என்ற கருப்பொருளில் நடைபெற்ற 'உள் நின்று ஒளிரும் சக்தி' என்ற தலைப்பிலான நிகழ்ச்சி ஓர் சாதனை. இதில் உரைகள், பாடல்கள், நாடகங்கள், கைவினைப் பொருட்களின் கண்காட்சி எனப் பலவும் நடந்தன. ஆனால், இதுவொரு பெண்கள் நாடக விழாவென்றே அறியப்படுகின்றது அல்லது உணரப்படுகிறது எனலாம்.

இதில் நான்கு நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. செயல்திறன் அரங்க இயக்கத்தில் கடந்த பல வருடங்களாக குழந்தை ம.சண்முகலிங்கம் மற்றும் தே.தேவானந்த் ஆகியோரிடம் எழுத்துருவாக்கல், நெறிப்படுத்தல் திறன்களைக் கற்றுக் கொண்ட இளம்



ஆற்றுகைகளில் பங்குபற்றிய பெண்கள்

ஆண், பெண் இருபாலாரும் இதில் புதிதாக எழுத்துருக்களைத் தயாரித்து நாடகங்களை நெறிப்படுத்தியுள்ளார்கள்.

செயல்திறன் அரங்க இயக்கத்தில் மூன்று வருடங்கள் செயல்முறைப் பயிற்சியைப் பெற்றுக்கொண்ட இளவட்டங்கள் தமது முதல் முயற்சியாக நாடகங்களை எழுதி, நெறிப்படுத்தியுள்ளார்கள். இதில் 'இடிகரை மண்' நாடகத்தை சி.நந்தனும், 'நித்திய நிர்சனமும் நாளைய தரிசனமும்' நாடகத்தை த.நித்திகாவும், 'நிழல்தேடும் மரங்கள்' நாடகத்தை க.சீலனும், 'சமதாளம்' ரி.கில்மனும், 'துணிவான பெண்' பாடல் காட்சிகளை ப.விஸ்னுவும் தொகுத்து நெறிப்படுத்தியிருந்தார்கள்.

இங்கு, மேடையேற்றப்பட்ட நாடகங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை சார்ந்தன. பெண்கள் மட்டுமே பங்கு கொண்ட இந்த விழாவில் அரங்கேறிய நாடகங்களில் 18 வயது முதல் 50 வயதுவரையான பெண்கள் அறுபது பேர் மேடையில் ஏறி நடித்திருக்கிறார்கள்.

பொதுவாகத் தமிழ்ச் சமூகத்தில் திருமணம் முடித்த பின்னர் பெண் மேடையேறுவதும் ஆற்றுகைகளில் பங்கெடுப்பதென்பதும் குதிரைக் கொம்பாகவே இருக்கின்றது. படித்தறிந்த மேல்தட்டு மற்றும் நடுத்தர மக்களிடமே இந்த நிலை என்னும்போது, கிராமப் புறங்களில் இருக்கும் பெண்களின் நிலையைச் சொல்லித் தெரியவேண்டு மென்பதில்லை. ஆனாலும் மிகப் பின்தங்கிய கிராமங்களில் இருந்து வந்த இந்த திருமணமான பெண்களும் அச்சமின்றி மேடையேறினார்கள். இதில் நாடகமொன்றை நிகழ்வொன்றுக்காகச் செய்தல் என்ற நோக்கம் தவிர்த்து, பங்குகொள்கின்ற ஒவ்வொரு பெண்ணின் ஆளுமையும் ஆற்றலும் திறனும் விருத்தியாக வேண்டுமென்ற உயரிய நோக்கம் உள்ளது. இதற்காக, ஒரு வருடகாலம் வாராந்தம் சந்தித்து சிறிது சிறிதாக அவர்களின் இறுக்கங்களை, அரங்க விளையாட்டுக்கள், பாடல்கள், ஆடல்கள் ஊடாக விடுவித்து பிரச்சனைகளை அடையாளம் காண்பதற்கும் புரிந்து கொள்வதற்கும், பகுப்பாய்வு செய்து தீர்ப்பதற்குமான வழிகளை நாடுவதற்குமான திறன்கள் விருத்தியாக்கப்பட்டிருக்கின்றன.

ஆம், இங்கு நாடகத்திறனும் நாடக அறிவும் இடர்கள்





இடிகரை மண் நாடகத்தில் ஒரு காட்சி

மத்தியில் வாழ்பவர்களிடம் கையளிக்கப்படுகிறது. ஏனெனில் அவர்களின் பிரச்சனைகளை அறிந்தும் புரிந்தும் கொள்வதற்காகவும் அவற்றை எதிர்கொண்டு தீர்ப்பதற்காகவுமாகும். இதில் நாடகமேடையேற்றம் நடைபெறலாம். ஆனால், அதுவே நோக்கமல்ல.

தயாரிக்கப்பட்ட நாடகங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு படிநிலையிலும் பெண்கள் பங்கு கொண்டிருக்கிறார்கள். நாடகம் எழுதுவதும், தயாரிப்பதும் ஏன் என்று ஒவ்வொருவருக்கும் தெரியும். ஒருவரின் எண்ணத்தில் உதிக்கும் ஒரு கருவை அவரே தன்பாட்டில் எழுதி இன்னொரு குழுவுக்கு தயாரிப்புக்காக சமர்ப்பிக்கின்ற தான ஒரு படிமுறை இங்கு இல்லை. எல்லோரினதும் எண்ணங்கள் எல்லோராலும் எழுத்துருவாக்கப்படுகின்றன. ஒருவர் வழிநடத்துனராக இருக்கிறார். சிலவேளைகளில் நாடகத்தில் சொல்லுகின்ற பிரச்சனைக்குள் ஆட்பட்டவரே அதற்குரிய பாத்திரத்தில் நடிக்கிறார். இங்கு நடிக்கிறார் என்பதை விட தன்னிலையை புறவயமாக நின்று தானே படைக்கிறார் எனலாம்.

கிராமத்துப் பெண்கள் தம்வீட்டு வளவு தாண்டிவருவதற்கே ஆரம்பத்தில் சிரமப்பட்டார்கள். அவர்களின் மனதில் ஆண்டாண்டு காலமாக வரையறுக்கப்பட்டிருந்த வரையறைகள் மற்றும் மட்டுப்பாடுகளைத் தளர்த்தி அல்லது தகர்ந்து பேசுவதற்கும் அசைவதற்கும் தலைமை தாங்குவதற்கும் பலர் முன்னிலையில் எதிர்நின்று உரையாற்கும் மற்றும் பாத்திரம் தாங்கி நடிப்பதற்கான பக்குவநிலைக்கு கொண்டுவருவதற்கும் முதலில் தேவையாக இருந்ததும் இருப்பதும் மனதைத் தைரியப்படுத்துவதாகும். அதை அரங்கு செய்தது. அதாவது, அரங்கைக் கற்றறிந்த திறன்மிக்க அரங்கச் செயலாளியின் ஆற்றலால் இது சாத்தியப்பட்டிருக்கிறது.

இந்தப் பெண்களுக்கு இவ்வாறான நகரத்து பெரு மேடைகளில் ஏறுவதற்கு வாய்ப்பு கிடைப்பதில்லையெனலாம். பல நூறுபேருக்கு முன்னால் நகரத்து மண்டபத்தில் தாம் ஏறிநின்று தாமே கலந்து பேசி உருவாக்கிய நாடகத்தை மேடையேற்றியது மிக மிக சந்தோஷமான விடயமாக அவர்களுக்கு அமைந்திருந்ததை உணரமுடிந்தது. தம்மை ஏனையோர் பாராட்டுவது கண்டு பூரித்துப்போயிருந்தார்கள். மேடை

யேற்றத்தின் பின் தம்மீது தமக்கு நிறைய நம்பிக்கை வந்தது போல் இருந்ததாகக் குறிப்பிட்டார்கள். தம்மிடம் ஆற்றல் உள்ளது, தம்மால் எதையும் செய்ய முடியும் என்ற தற்துணிவு அடைந்தது பற்றி நாடக முடிவின் பின்னான கலந்துரையாடலில் கிட்டத்தட்ட அனைத்துப் பெண்களுமே குறிப்பிட்டார்கள். இங்கு, செயல்திறன் அரங்க இயக்கத்தின் பெண்களுக்கான உளசமூகப்பணி வெற்றி பெற்றிருப்பது வெள்ளிடை மலையாகத் தெரிகிறது.

**தம்மிடம் ஆற்றல் உள்ளது, தம்மால் எதையும் செய்ய முடியும் என்ற நம்பிக்கையை பெண்களிடம் ஏற்படுத்தும் ஒரு நிகழ்வாக இந்த மகளிர் தின நிகழ்வுகள் இருந்தன.**

மேலும், நாடகம் பேசிய பொருள்/ கரு பற்றிப் பேசியாக வேண்டும். 'இடிகரை மண்' நாடகம் போர் நெருக்கீடு, யாழ்ப்பாணத்திற்கான பாதை அறுபட்டது மற்றும் போரின் விளைவாக கணவனைத் தொலைத்து தனி மரமாக நிற்கும் இளம் பெண் எவ்வாறான சமூக நெருக்குவாரங்களை எதிர்நோக்குகிறாள் என்பதைப் பேசியது. குறிப்பாக அவள் எவ்வாறு சமூகத்தால் புறந்தள்ளப்படுகிறாள், இவளுக்காகவும் இவள் போன்ற பெண்களுக்காகவும் உதவுவோர் இவர்களின் ஆழ்மனப் பிரச்சனைகளை கவனியாது தம்மிடமுள்ள நுளம்புவலை விநியோகம் போன்ற வெறும் நிவாரணப் பணிகளை மட்டுமே செய்கின்றன. இது போதாது என்றதான விமர்சனத்துடன் முடிகின்றது. மேடையின் நடுவில் ஒரு வீடு அந்த வீட்டின் களத்தில் ஒரு சமூகத்தின் குறுகத்தறித்த பல விடயங்கள் காட்சியாகின்றன. யதார்த்தப்பாணி முதன்மை பெற்றாலும் அதற்குள் யதார்த்தமல்லா அசைவுகளும் குறியீடுகளும்கூட காட்சியாகின்றன. மேடை ஓர் சீரொழுங்கில் அசைந்து செல்கிறதென்றாலும் மிகமெதுவாக அசைந்து செல்வதான தன்மை இடையிடையே தொய்வைத் தருகிறது. தமிழ் அரங்கில் காணப்படுகின்ற பேச்சு வெளிப்படுத்தலின் நலிவுத் தன்மை இங்கும் காணப்பட்டது. இந்நாடகத்தை கைதடி குமரநகர் பெண்கள் வழங்கியிருந்தார்கள்.

அடுத்து, 'நித்திய நிதர்சனமும் நாளைய தரிசனமும்' நாடகத்தில் மேடையில் எந்தவொரு மேடைப் பொருளையும் பாவிக்காது வெறும் மேடையில் நடிகர்களைக் கொண்டு காட்சிகளை அமைத்திருந்தார்கள். இதில் வயதுமுதிர்ந்த பெண்களும் இளயவயதினரும் பங்கு பற்றியிருந்தனர். மூன்று பெண்கள் பிரச்சனைக்குள் ஆட்பட்டவர்கள் தம்மை மறுத்து புறமுதுகுகாட்டி அமர்ந்திருந்தார்கள். ஒவ்வொருவரினதும் கதை அல்லது பிரச்சனை கோமாளிகளால் உயிர் பெற்று காட்சியாகின்றன. சமூகத்திலும் குடும்பத்திலும் பெண்ணை அங்கீகரிக்காத ஆணாதிக்க எண்ணப் பாங்கை காட்சியாகத் தருகின்றனர். இங்கு பேசப்பட்ட விடயங்கள் மேலும் ஆழமாகப் பார்க்கப்பட வேண்டியவைகள். இதில் நடிப்பு மோடிமைப் பண்பு கொண்டவையாகவும், உணர்ச்சி வெளிப்பாடு கூடியவையாகவும் காணப்பட்டன. இங்கும் பேச்சுமூலமான வெளிப்படுத்தல் நலிவடைந்தே காணப்பட்டது. அரங்கில் புதியவர்கள் இருக்கின்ற போது இந்த நிலை தவிர்க்க முடியாததாகின்றது. நாவற்குழி தச்சன்தோப்பு கிராமத்தின் பெண்கள் இதனை அளிக்கை செய்திருந்தார்கள்.

'நிழல் தேடும் மரங்கள்' என்ற நாடகம் ஒரு வயோதிப மாது தான் பதின்நான்கு வருடங்கள் திருமணமென்ற பெயரில் வனவாசமிருந்தது பற்றியும் தன் சிறகடித்த எண்ணங்கள் எவ்வாறு மெல்ல நசிந்து ஒடுங்கினவென்றும் தன் சுதந்திரம் தேடும் கற்பனை இப்போதும் சிறகடிப்பதாகவும் சுட்டுவதோடு, தன் பேத்தி புது ஆற்றல் பொருந்தியவளாக வருவாள் என்று தன் விருப்பங்களை அவள் மீது ஏற்றி அவளின் வரவுக்காகக் காத்திருக்கிறார்கள். அவள் நிழல் தர ஒரு குடையோடு வருவதாக முடிகிறது. யுத்தத்தில் அகப்பட்ட பெண்ணின் மீட்சியும் இங்கு கோடி காட்டப்படுகிறது. இருப்பினும் முடிவில் தெளிவின்மை நாடகத்திற்கு முழுமை தரமறுக்கின்றது. வெறும் மேடை, அசைவியக்கங்களால் நிறைந்து அவ்வப்போது அழகாகின்றது. இது கைதடி நவபுரம் கிராமத்துப் பெண்களால் ஆற்றுகை செய்யப்பட்டிருந்தது.



சமதாளம் மற்றும் நித்திய நிதர்சனமும் நாளைய தரிசனமும் நாடகங்களில் இடம்பெற்ற காட்சிகளும் உதயநகர் பெண்களின் பாடல் நிகழ்வும்.

இவற்றோடு 'சமதாளம்' என்ற கவிதைகள் மற்றும் பாடல்களுக்கான காட்சிகளின் தொகுப்பும் நிகழ்ந்தது. பெண் சமூகத்தால் ஒடுக்கப்படுவதும் அவள் அதில் இருந்து மீளவேண்டுமென்ற ஆதங்கமும் நிறைந்த ஆற்றுகை. வெறுவெளியில் தீப்பந்தங்கள் தாங்கிய பெண்களோடு கூடிய மேடைக் கோலம் அழகாக இருந்தது. அதுமேலும் மேடையை நிறைத்திருக்கலாம். இதனை நாவற்குழி வீரபத்திரர் கோயில் கிராமப் பெண்கள் நிகழ்த்தினார்கள்.

'உள்நின்று ஒளிரும் சக்தி' நிகழ்வில் பார்வையாளரை மிகவும் கவர்ந்த நிகழ்வு செல்வ நகர் பெண்கள், அவர்கள் அனைவருமே 'அம்மாமார்' மேடையில் வெவ்வேறு களநிலைகளில் இருந்தும் நின்றும் பெண்கள் மேம்பாட்டுக்காகப் பாடிய பாடல் காட்சியாகும். இளவயது அம்மா முதல் நரைவிழுந்த அம்மாவரை அனைவரும் இணைந்து பாடியது ஒரு அழகான காட்சி.


இந்த வகையான அரங்க நிகழ்வுகள் வழமையில் பெண்கள் தின நிகழ்வில் நடைபெறுவதில்லை. சாதாரண கிராமத்துப் பெண்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்படுவது மிகக்குறைவு. நீண்ட நிகழ்ச்சி நிரலில் பலபேர் பெண்கள் தினம் பற்றி மீண்டும் மீண்டும் கூறியது கூறலாக பேசுவதே நடப்பது வழமை. இங்கு அது மிகக் குறைவாக இருந்தது. ஆனால் அதுவும் நடந்தது. ஒரு சிலபேர் பேசினர். அவர்கள் அனைவருமே பெண்களாக இருப்பினும் பெண்களுக்கான தினத்தை ஏன், எதற்கு என்று உணராமல் நுனிநாக்கால் பேசிச் சென்றார்கள்.

இறுதியில் செயல்திறன் அரங்க இயக்கத்தினரின் ஓர் உணர்ச்சி மிகு பெண்கள் பாடலுடன் மண்டபத்தில் கூடியிருந்த அனைவரும் இணைந்து எழுந்து நின்று கைதட்டிப் பாடியதோடு ஓர் நெருக்கீட்டு கால வரலாற்றில் பதியப்பட வேண்டிய பெண்கள் தின நிகழ்வு நிறைவுற்றது. **- நாடோடி**




# மொழி தரும் சொற்கள் பொருளை இழந்தன!

**உ**லக நாடக தினம் மார்ச் 27ஆம் திகதி. அன்றைய தினத்தில் யாழ். பல்கலைக்கழகத்தில் இரண்டு ஆற்றுகைகள் மேடையேற்றப்பட்டன. பேச்சு ஒடுக்கப்பட்டு நிற்கும் யாழ்ப்பாண மக்களின் குறியீடாக, மொழியே இல்லாது இந்த ஆற்றுகைகள் மேடையேற்றப்பட்டன. சுமார் ஒரு மணி நேரம் மட்டுமே நிகழ்வு இடம்பெற்றது.



யாழ். பல்கலைக்கழகத்தின் வெறுவெளி அரங்கக் குழு ஏற்பாடு செய்த இந்த ஆற்றுகைகள் 'மொழி தரும் சொற்கள் பொருளை இழந்தன' என்ற பொருளில் கைலாசபதி அரங்கில் நூற்றுக்கணக்கானவர்கள் மத்தியில் இடம்பெற்றது. இதற்கான அறிவித்தல் பனையோலையால் செய்யப்பட்ட பாயில் எழுதப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் எழுதும் தாளுக்கு நிலவிய கடும் பற்றாக்குறையைச் சுட்டிக்காட்டும் விதத்தில் அந்த அறிவித்தல் வடிவமைக்கப்பட்டதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

நடமாட்டத்திற்கான சுதந்திரம், வெளிப்படுத்தலுக்கான சுதந்திரம், ஊடக சுதந்திரம், சாதாரண வாழ்க்கை என்பவற்றின் மீது ஆயுதப்படையினர் மேற்கொள்ளும் அடக்குமுறைகளை வெளிக்காட்டும் வகையில் முதலாவது ஆற்றுகை அமைந்திருந்தது. 'மூடி' என்று அதற்குப் பெயரிடப்பட்டிருந்தது.

இரண்டாவது ஆற்றுகை '2004-9-0'. சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் துயரப்பட்டுக் கொண்டிருப்பது குறித்துப் பேசியது. அவர்களுக்கு உதவிகளைச் செய்யும் முகவர் அமைப்புக்களால் அந்த நிதி எப்படிக் களவாடப்பட்டது என்பது பற்றியும் அது பேசியது.

ஆயிரம் வார்த்தைகளில் பேசுவதைவிட ஒரு சில காட்சிகள் அதிகம் பேசிவிடக்கூடியவை என்பதற்கிணங்க இந்த ஆற்றுகைகள் இருந்தன என்று அவற்றைப் பார்வையிட்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார். இராணுவத்தினரின், மக்கள் நடமாட்டத்திற்கான கெடுபிடிகளால் நோயாளி ஒருவர்படும் சிரமங்களையும், மாணவி ஒருத்தி தனது அடையாள அட்டையைத் தொலைத்து விட்டதனால் பெறும் தண்டனையையும், இளைஞன் ஒருவன் பலவந்தமாகத் தனது வீட்டில் இருந்து கடத்திச் செல்லப்படுவதையும், சுனாமியால் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் தான் உயிர்வாழ்வதற்காக உணவு தேடி அலைவதையும் வெளிப்படுத்தும் காட்சிகள் இந்த ஆற்றுகைகளில் இடம்பெற்றிருந்தன.

உணவுக்குத் தவிர வேறு எதற்கும் வாயைத் திறக்கப் பயப்படும் இன்றைய காலத்தில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இரண்டாவது ஆற்றுகை நிகழ்வு இதுவாகும். இதற்கு முன்னதாக செயல்திறன் அரங்க இயக்கம் பெண்கள் தினத்தில் ஒரு நாடக விழாவை நடத்தி இருந்தது. □



# சாவீட்டில் கட்டைக் கூத்து

- தேவானந்த் -

செயல்திறன் அரங்க இயக்கமும் கூத்தரங்கமும் இணைந்து 2007, ஜனவரி மாத இறுதிப் பகுதியில் 'திரை நீக்கம்' என்று பெயரிட்டு தமிழகத்திற்கான ஓர் அரங்கப் பயணத்தை ஏற்பாடு செய்திருந்தனர். பத்து நாட்கள் செலவிடப்பட்ட இந்தப் பயணத்தில் தமிழ்நாட்டின் முக்கிய பல நாடகக்காரர்களையும் நாடக ஆர்வலர்களையும் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்ததோடு ஒரு சில நாடகங்களைப் பார்ப்பதற்கும் வாய்ப்புக்கிட்டியது. இதில் ஓர் இரவு முழுக்க நித்திரையின்றி, கிராம மக்களோடு, பனி கொட்டக்கொட்ட விழித்திருந்து கூத்துப் பார்த்த அனுபவம் சற்று வித்தியாசமானதும் இலகுவில் மறந்துவிட முடியாததுமான அற்புதமான அனுபவம்.

நாம் சென்ன தெற்கில் தங்கியிருந்தபோது அரங்கத் துறையில் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் அரங்கச் செயலாளி மங்கை அவர்களைச் சந்தித்து தெருக்கூத்துக்கள் பார்க்கவேண்டும் என்று கேட்டோம். எமது வேண்டுகோளை மிகச்சிரத்தையுடன் தலையில் சுமந்து பலருடனும் தொலைபேசியில் தொடர்புகொண்டு தெருக்கூத்து நடக்கின்ற இடத்தை அறிந்து எமக்கு அறிவித்திருந்தார். வேலூர் மாவட்டத்தின் நெமிலி என்ற கிராமத்தில் கீழ்வாய்க் கால்தெரு என்ற பகுதியில் கூத்துப் பார்ப்பதற்காக ஒரு வாடகைக் காரில் புறப்

- ஓர் இரவு அனுபவம் -

பட்டோம். மூன்று மணித்தியாலங்களுக்கு மேல் பயணித்து இரவு பத்து மணிக்குக் கூத்து ஆரம்பமாகும் நேரம் அந்த இடத்தைச் சென்றடைந்தோம். போகும்வழி நெடுகிலும் கார் ஓட்டுனர் பழனி, இடங்களை அறிமுகஞ் செய்தவாறே வந்துகொண்டிருந்தார். அதில் இரு பெயர்கள் மட்டும் எமது நினைவிலி மனதைத் தட்டி எமது நினைவுகளை சற்றுப் பின்னோக்கி நகர்த்திச் சென்றன. அந்த வேதனையான வரலாறுகள் தற்போதைய வேதனைக்கு மேலும் சுமையேற்ற மிக நீண்ட அமைதியுடன் கூத்தாடும் இடத்தைச் சென்றடைந்தோம். ஆம்! எம் நினைவிலி மனதைப் புரட்டிப்போட்ட அந்த இடங்கள் திருப்பெரும்புதூரும் பூந்தமல்லியும். ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட திருப்பெரும்புதூரும் அது தொடர்பான வழக்கு நடந்த பூந்தமல்லி சிறையும் ஈழத்தவர்களோடு மிக நெருக்கமானதுதானே! அவற்றை இலகுவில் மறந்துவிட முடியுமா?

நிற்க! கட்டைக்கூத்துக்கு வருவோம்! 'தெருக் கூத்து' என்ற பெயர் பாரம்பரியமாக வழக்கில் இருந்து வந்த பெயர். இன்று கட்டைக் கூத்து என்றும் அழைக்கப்படுகின்றது. புஜங்களுக்குக் கட்டைகளால் ஆன புஜகீர்திகளைக் காட்டி ஆடுவதால் கட்டைக் கூத்து என்றும் அழைக்கப்படுவதாகக் கூத்தாடும் கலைஞர் ஒருவர் குறிப்பிட்டார்.

நாம் சென்று இறங்கியது ஒரு சாவீட்டின் 16ஆம் நாள் நிகழ்வுக்





கட்டைக் கூத்தில் கர்ணனும் கிருஷ்ணனும் தோன்றும் காட்சிகள் இவை.

கென்று அறிந்ததும் சற்றுச் சங்கடமாக இருந்தது. ஒரு தபால்காரர் இறந்து அன்று 16ஆம் நாள். அவரது வீட்டுக்கு முன் நான்கு தடிகள் நாட்டப்பட்டுள்ளன. ரியூப்லைற்கள் இரண்டு தடிகளில் கட்டப்பட்டுள்ளன. பின் இரண்டு தடிகளிலும் ஒரு திரைச்சீலை கட்டப்பட்டுள்ளது. அதற்குப் பின் உள்ள பகுதி சேலைகளால் சதுரமாகக் கட்டப்பட்டுள்ளது. அது நடிகர்களின்/ கூத்தர்களின் வேடம் புனையும்/ ஒப்பனை செய்யும் ஓர் தற்காலிக அறை. வீட்டின் முன் உள்ள வீதி இடைமறிக்கப்பட்டு மூன்று பக்கமும் பார்வையாளர்கள் பாய்களிலும் எதிர் வீட்டுத் திண்ணைகளிலும் அமர்ந்திருந்து பார்க்கிறார்கள். சின்னஞ் சிறுசுகள் முதல் பெரியவர்கள்வரை குளிரைத் தாங்கக் கூடிய போர்வையுடன் தலைகளுக்கு முக்காடிட்டு அமர்ந்திருக்கிறார்கள். திரைபோடப்பட்ட பகுதி கூத்தாடும் களத்தின் பின் பகுதி. அதில் திரைச்சீலையுடன் அமர்ந்திருப்பவர்கள் இசை வாத்தியக்காரர்கள். மத்தளம் வாசிப்பவர், ஆர்மோனியம், தாளம், முகவீணை/ சிறிய நாதஸ்வரம் வாசிப்பவர்களும் பக்கப்பாட்டுக்காரர்களும் அமர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு முன் இரண்டு வரிசையில் பலமான சிறிய மேசைகள் போடப்பட்டுள்ளன. அவற்றில் முக்கிய பாத்திரங்கள் தேவைக்கேற்ப ஏறிநின்று ஆடுவர். அது தவிர ஏனைய வேளைகளில், பிற்பகுதியில் நடிக்கும் ஆடும் கூத்தர்கள் அதில் அமர்ந்திருந்து பக்கப்பாட்டுப் பாடுவர். இவர்கள் தவிர ஊரில் முக்கிய பிரமுகர்கள் நிதி கொடுப்போர் மற்றும் நாடக மன்றத்தின் உரிமையாளர்கள் ஆகியோரும் அவ்வப்போது அமர்ந்திருப்பர்.

**நாடக மன்ற உரிமையாளர்**

யார் இந்த கூத்துக் குழுவின் உரிமையாளர்? இவர் கூத்தாடும் வர்க்கத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டியதில்லை. பணவசதியுடைய ஒருவர் கூத்தாடுவதற்குத் தேவையான ஆடைகள், ஆபரணங்கள், திரைகள், வாத்தியங்களில் தனது பணத்தை முதலீடு செய்கிறார். அதனை ஒவ்வொரு ஆற்றுகையின்போதும் வசூலித்துக் கொள்கிறார். இதனைவிட கூத்தாட முடியாமல் வருமானமின்றி இருக்கின்ற காலங்களில் கூத்தர்களின் வாழ்வியல் தேவைக்காக முற்பணம் வழங்குகிறார் இந்த உரிமையாளர். அந்த முற்பணத்தைக் கூத்தாடும் காலங்களில் 40 சதவீத வட்டியுடன் வசூல் செய்கிறார். முற்பணம் நடிகர்களின் தராதரத்திற்கேற்ப வழங்கப்படுகிறது.



**கூத்தின் இறுதியில் பிரதான பாத்திரமான கர்ணனுக்கு முன் நிறைகுடத் தண்ணீரை ஊற்றி கர்பூரம் ஏற்றப்பட்டு பிதிர்கடன் நிறைவேற்றப்படுவதைப் படங்களில் காணலாம்.**

முக்கியமான/ பிரதானமான நடிகன் அதிகம் கடன்வாங்கத் தகுதியுடையவன். இது ஒரு சுழற்சியாக நடைபெறும். கடன் வாங்குவதும் அதனை அடைப்பதும் கூத்தர்களின் வாழ்வாகிற அவலத்தையும் உணர முடிகிறது. கடன் அடைக்கும் வரை ஒரு நடிகன் அந்தக் குழுவில் இருந்து விலகிவிட முடியாது. சில வேளைகளில் இன்னொருவருடன் இணைந்து கொள்ளவேண்டுமாயின் ஏற்கனவே பட்ட கடனை முழுமையாக அதாவது அசலும் வட்டியுமாகத் திருப்பிக் கொடுத்த பின்பே விலகிச் செல்லமுடியும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒரு கூத்தர் இன்னொருவரிடம் அதிக கடன் வாங்கி ஏற்கனவே உள்ள கடனை அடைத்து மேலும் அதிக பணத்திற்குக் கடன்காரனாக ஆகிவிடுகின்ற அவலமும் உண்டு. கடன் பெறும் கூத்தர் அதனைப் பெருமையாகக் கருதிக் கொள்வதுமுண்டு. ஆக மொத்தத்தில் பணம் வைத்திருப்பவன் மேலும் மேலும் தன் பணத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக முதலிடுகின்ற ஒரு களமாகத் தெருக்கூத்துக் காணப்படுகிறது.

உடல் வேர்க்க நித்திரையின்றி உதிரம்சிந்தி உழைக்கும் கூத்தரிடமிருந்து பணம் சம்பாதிக்கும் ஒருவனை உரிமையாளன் என்று அழைக்கின்றார்கள். இந்த உரிமையாளன் - சில சந்தர்ப்பங்களில் முகாமையாளன் - குறிப்பிட்ட ஜாதிக்குரியவன் அல்லன். அவன் ஒரு பொது ஜாதியென்று கட்டைக் கூத்துச் சங்க இயக்குனர் ராஜகோபால் குறிப்பிடுகின்றார். கூத்து நிகழும்போது பாத்திரங்கள் சில களங்களில் உரிமையாளரைக் கிண்டல் செய்வதும் தமது மனக் குறைகளைச் சொல்வதும்கூட நடக்கிறது.

**கூத்தர் குழாம்**

கூத்தாடுபவர்கள் தமது பிரதான தொழிலாகக் கூத்தையே கொண்டிருக்கிறார்கள். வருடத்தில் 155 நாட்கள் கூத்தாடுகிறார்கள். இரவிரவாக ஆடப்படுகின்ற கூத்து, சில வேளைகளில் தினமும் நடப்பதாகக் குறிப்பிட்டார்கள். கூத்துக்கென்று பயிற்சிக் களங்களோ கல்லூரிகளோ இல்லை. சேர்ந்தாடுவதன் மூலம்/ சேர்ந்து திரிவதன் மூலம் கற்றுக் கொள்கிறார்கள். ஒரு தொழில்முறைக் குழுவில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள கூத்தர்கள் காணப்படுகின்றார்கள். கைத்தொலைபேசியில் அறிவித்தல் வழங்கப்பட்டதும் தத்தம் பகுதிகளில் இருந்து பஸ்பிடித்து வந்து விடுவார்கள்.

கிராமங்களில் கூத்தை ஒழுங்கு செய்வதற்கு ஏஜென்சிகள்/ஒப்பந்தக்காரர்களும் உண்டு. ஒரு கூத்தை தாம்பூலம் கொடுத்து ஒழுங்கு செய்வார்கள். இங்கு வெவ்வேறு திக்கிலிருந்து வருபவர்கள் களத்தில் இறங்கி தமக்குள் ஒழுங்குபடுத்திக் கொள்கிறார்கள். ஒவருவருக்கொருவர் கொடுத்து வாங்கி ஒரு பொதுத் தளத்தை உருவாக்கி பார்ப்போரைக் கவர்கிறார்கள். தெருக் கூத்தாடுபவர்கள் மிகுந்த உடல் வலுவுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். நீண்ட நெடு நேரம் நித்திரையின்றி பாதுகாப்பற்ற ஆடுகளத்தில் ஆடுவதற்கும் பாடுவதற்கும் உரமான உடல் வளம் தேவையானது. அதுவே இதன் மூலதனமும் ஆகும்.



**இறந்துகிடக்கும் கர்ணனுக்கு முன்பாகப் பிதிர்க்கடன் நிறைவேற்றும் பணியில் கூத்தை ஏற்பாடு செய்தவர்கள். பின்னணியில் தாளவாத்தியக்காரர்.**

**சடங்கோடு பிணைந்த கூத்து**

கட்டைக் கூத்து அதிகமாகக் கிராமங்களில் நிலத்தோடு பிணைந்த மக்கள் மத்தியில் ஆடப்படுகின்றது. பொதுவாகக் கோயில் திருவிழாக் காலங்களில் ஆடப்படுவதோடு, இதிகாசங்கள் படிக்கப்படுகின்ற காலத்திலும் தொடர்ச்சியாகத் தினமும் ஆடப்பட்டுப் படுகளம் என்ற சடங்கு நடத்தப்படுகின்றது. இதன் இறுதியில் பல லட்சம் ரூபா செலவில் பொம்மை செய்யப்பட்டு இறுதியில் அடித்து உடைக்கப்படுகின்றது. கெட்டது போய் நல்லது வருதல் என்பதான அடிப்படைத் தத்துவத்தை வெளிக்கொணரும் சடங்கு ஆற்றுகையாகவும், ஆற்றுகை சடங்காகவும், சடங்கில் ஆற்றுகையும் ஆற்றுகையில் சடங்கும் இரண்டறக் கலந்து கிடக்கின்ற விநோதமே எளிய தூய்மையான அப்பாவிக் கிராமப் பார்வையாளனை ஈர்த்து வைத்திருக்கின்றது எனலாம்.

இங்கு ஒரு சாவீட்டில் இறந்தவரின் ஆத்மா மோட்சம் அடைவதற்காக 16ஆம் நாள் 'கர்ண மோட்சம்' கூத்து நிகழ்த்தப்பட்டது. எமக்கு முற்றும் புதுமையான ஒன்றாகக் காணப்பட்டது. பாரதப் போரில் கர்ணன் ஒரேயொருநாள் போருக்குத் தலைமை தாங்கிச் சென்று இறந்து விடுகின்றான். இறுதியாகத், தான் செய்த தானத்தையும் தானம் செய்து

> **சடங்கு ஆற்றுகையாகவும், ஆற்றுகை சடங்காகவும், சடங்கில் ஆற்றுகையும் ஆற்றுகையில் சடங்கும் இரண்டறக் கலந்துகிடக்கின்ற விநோதமே எளிய தூய்மையான அப்பாவிக் கிராமப் பார்வையாளனை ஈர்த்து வைத்திருக்கின்றது.**

'மோட்சம்' அடைகின்றான். இந்தக் கூத்தை இரவிரவாக நிகழ்த்தி விடிகாலையில் இறந்து கிடக்கும் கர்ணனுக்கு முன்பாகத் தானம் வழங்கிப் பிதிர்க் கடன் முடிக்கிறார்கள்.

இரவிரவாகக் கூத்தாடும் களத்திற்கு அருகில் இறந்தவரின் திருவுருவப் படம் விளக்கேற்றி வைக்கப்பட்டிருந்தது. கூத்தின் இடையிடையே இறந்தவரின் பெருமையும் அவருக்காகக் கூத்து ஆடப்படுவதும் விருந்தமாக உரைக்கப்பட்டது. அத்தோடு கூத்துக்காகப் பணம் கொடுத்த, இறந்தவரின் பிள்ளைகள் பற்றியும் குறிப்பிடப்படுவதோடு, ஊர்ப் பெருமையும் ஊர் மக்கள் சிறப்பும் சுட்டிக் காட்டப்படுகின்றது. கூத்து நிறைவடையும் போது வீட்டில் வைக்கப்பட்டிருந்த கும்பத்தின் தண்ணீர் இறந்து கிடக்கும் கர்ணன் முன்பாக ஊற்றப்பட்டு வேஷ்டி, பணம் என்பன கூத்தருக்குத் தானமாக வழங்கப்படும்.

இறந்தவரின் திருவுருவப் படத்தை உறவுக்காரர்கள் ஊர்வலமாக எடுத்துச்சென்று வீட்டினுள் வைப்பார்கள். இதன்போது கூத்தர்கள் தேவாரம் பாடுவர். மத்தளம் அறைவோன் மத்தளத்தை இடுப்பில் கட்டி அடித்துச் செல்வார். கிருஷ்ணன் வேடம் தரித்தவர் (அவரே கர்ணனுக்கு மோட்சம் கொடுத்தவர்) அவர்களோடு சென்று இறந்தவரின் திருவுருவப் படத்தை வீட்டினுள் வைப்பார். கலையில் ஒரு இறப்பு வீட்டுக்கான சடங்காசாரங்கள் நடக்கின்றன. சா வீட்டார் தமது தகப்பனார் மோட்சம் அடைவதான நம்பிக்கையில் சடங்கை நிகழ்த்துகிறார்கள். சடங்கில் நாடகம்/கூத்து நடக்கிறது. அல்லது செய்துகாட்டுதல் நிகழ்கிறது. போலியும் நிஜமும் கலந்த ஒரு வகைக் கலவையான சூழல் சற்றுத் தூரத்தே நின்று பார்க்கின்ற எமக்கு வியப்பையும் ஆச்சரியத்தையும் கொடுத்து நின்றது எனலாம்.

**பார்வையாளன்**

கட்டைக்கூத்தின் உயிர்ப்புக்கும்/வாழ்தலுக்கும் எளிய அப்பழுக்கற்ற பார்வையாளன்தான் உயிர் மூச்சு. இரவிரவாக சின்னஞ்சிறுசுகள் முதல் வயது முதிர்ந்த மூதாட்டி வரை கண் மூடாது பனிக் குளிரையும் பொருட்படுத்தாது தெருவிலும் முற்றத்திலும் திண்ணையிலும், இருந்தும் கிடந்தும் பார்த்துக் கொண்டிருந்ததை நோக்கும்போது கூத்து இனியும் செத்துவிடாது என்ற நம்பிக்கை தெரிந்தது. இது தெம்பைக் கொடுத்தது எனலாம்.

கூத்துக்கும் இந்தப் பார்வையாளனுக்கும் இடையில் இடைவெளி குறைவு. பார்வையாளன் தான் விரும்பும் வேளை தனது தேவைக்கா

கக் கூத்துக் களத்திற்குக் குறுக் காக நடந்து செல்வான். சிலவேளை கூத்தர்களின் கேள்விகளுக்கு, பகிடி களிற்குப் பதிலளித்தவாறே செல் வான். மீள வருவான். இது ஆற் றுகையில் எவ்வகையிலும் பாதிப் பாக அமையாது. அதேபோல் கூத் தர்களும் தொடர்ந்து பார்வையாளர் களுக்குள் இடையீடு செய்த வண் ணமே இருப்பார்கள். சிலர் நித்திரை யாகுவது கண்டால் கூத்தர் பார்வை யாளருக்குள் சென்று கலகலப்பாக்கு வார். பிரதான பாத்திரங்களோ, கட் டியக்காரனோ எல்லை மீறிச்செல் கின்றபோது பார்வையாளர் இடை யீடு செய்து தடுத்து விடுவதுமுண்டு. குறிப்பாகப் பெண்களை இழிவாகக் குறிப்பிடுதல் மற்றும் ஆபாசமான வார்த்தைப் பிரயோகங்களின் போது பார்வையாளர் கடிவாளம் போடுவது சுவாரஸியமானது. சிலவேளை களில் ஒரு காட்சி மிக நீண்டு சென் றால் பார்வையாளர் அதனைச் சுட்டிக் காட்டி "நேரம் வந்துவிட்டது, இது போதும், அடுத்ததிற்குப் போங் கள்" என்று குறிப்பிடுவார்.

கூத்து நிகழ்ந்து கொண்டிருக்கும் வேளை பார்வையாளர்கள், தாம் விரும்பும் பாத்திரங்கள் தோன்றி ஆடும்போது அவர்களின் ஆடை யில் பணநோட்டுக்களைக் குற்றி விடுகிறார்கள். அவ்வாறு எத்தனை பேர் வந்தாலும் ஆடுவோன் அவர் களை மதித்து அதற்கு வாய்ப்புக் கொடுக்கிறான். அவ்வாறு பண நோட்டுக் குத்துவதற்கு எடுக்கும் நேரத்திற்குத் தனியாக இசை வழங் கப்படுகின்றது. அதிகமாகப் பிரதான பாத்திரங்களுக்கே அவ்வாறான அன் பளிப்புக்கள் வழங்கப்படுகின்றன. முன்னைய காலங்களில் தமது உற் பத்திப் பொருட்களை மக்கள் சந் தோஷமாக வழங்கி வந்தனர் என வும் பின் பணம் வழங்கும் நடை முறை புழக்கத்திற்கு வந்தது என வும் குறிப்பிட்டார்கள். ஊர்மக்கள் பணம் வழங்கும்போது வழங்குபவரின் குலப்பெருமை குறிப்பிட்டுப் பாடுவது அல்லது விருத்தமாக உரைப்பது போன்ற நடைமுறையும் காணப்படு கின்றது.



இறந்தவரின் படம் கூத்தின் முடிவில் வீட்டிற்குள் எடுத்துச் செல்லப்படுகின்றது. அவர்களுடன் கிருஷ்ணன் வேடம் தாங்கியவரும் காணப்படுகிறார்.

சிலர் தமது தேவைகளுக்காக வீடு களுக்குச் சென்று வேலைகளை முடித்து மீண்டும் வந்து கூத்துப் பார்த்தார்கள். இரவு 10.30 மணிக்கு ஆரம்பமான கூத்து காலை 6.30 மணிக்கே முடிவடைந்தது. அது வரை பார்வையாளர்கள் கூடி யிருந்தது வியப்பாக இருந்தது. எனக்கருகில் இருந்த மூதாட்டி கூத்தில் வரும் பாடல்களையும் உரையாடல்களையும் சமாந்தர மாக வாய்க்குள் முணு முணுத்தபடி பார்த்துக் கொண் டிருந்தார். பார்வையாளனுக் குத் தெரிந்த கதை, ஏற் கனவே பார்த்த கூத்து இருந்தாலும் எந்தச் சலிப்புமின்றி ஆர் வமாகப் பார்க் கிறார்களே? எது



கூத்தில் கர்ணனாகப் பிரதான பாத்திரமேற்றுள்ளவர் கரப்புடுப் போடு ஆட்டத்தில் ஈடுபட்டுள்ள காட்சி.

இவர்களைக் கவர்ந்திழுக்கிறது? ஏன் மீண்டும் மீண்டும் பார்க்கிறார் கள்? என்ற கேள்விகளுக்கு விடை களை ஒவ்வொரு நாடகரும் முயற் சித்தால் 'அரங்கு' காலத்துள் வாழ் வாங்கு வாழும் எனலாம்.

### நெகிழ்வுத் தன்மையுடைய ஆற்றுகை

ஒருவகைக் கட்டுப்பாடுகளும் கோட் பாடுகளும் வரையறைகளும் பாரம் பரிய அரங்குகளில் காணப்படுவது வழமை. இருப்பினும் நவீன நாடகக் கோட்பாட்டாளர்கள் வரையறுத்து வைத்திருக்கின்ற, குறிப்பாக மேற் கின் விழுமியங்களில் தொங்கிக் கொண்டிருக் கின்ற நாடக விமர்சகர் கள் கூறுகின்ற 'கட்டிறுக் கம்' இங்கு இல்லை யென்றே கூறலாம். தெருக்கூத்து தனக்கே யுரித்தான தனித்தன்மை யான கட்டமைப்பைக் கொண்டுள்ளது. இதனை நான் விவாதத்திற்கான வசதி கருதி நெகிழ்வுத் தன்மையுடைய ஆற் றுகையென்று குறிப் பிட்டுக் கொள்கின்றேன். இங்கு 'நெகிழ்வு' என் பது ஏதோவொன்றை அடிப்படையா கக் கொண்டது. எனவே ஒன்றை அடியொற்றி இன்னொன்றைப் பார்க் கின்ற தவறான அணுகுமுறையை வசதி கருதி எடுத்துள்ளேன் என்று குறிப்பிடமுடியும்.

கூத்தில் கட்டியக்காரன் முக்கிய மானவன். கதைகூறுபவன், முன்னறி வித்தல் செய்பவன், பாத்திரங்களு டன் தர்க்கிப்பவன் பாத்திரத்திற்குச் சார்பாகப் பேசுபவன், விமர்சகன், கிண்டல்காரன், நையாண்டிக்காரன் என்று பலவாறான கோலத்தில் நிற் கும் இவன், கூத்து முழுமையிலும் நிற்கின்ற ஒரு பாத்திரம். இங்கு ஒரு வரே இப்பணியைச் செய்வதில்லை, தேவைக்கேற்ப ஆட்கள்/ நபர்கள் மாறுவார்கள். கட்டியக்காரனுக்குரிய வேடஉடையில் அனைவரும் தோன் றாது சாதாரணமான உடையிலும் தோன்றி நடிக்கிறார்கள். ஆஹா, அப்படியா! ஆ!.! என்று உரையிட லுக்கிடையில் குரல் கொடுத்தவாறு நிற்கிறார்கள்.

பாத்திரங்கள் தாம் ஆடும் தளத்தில் இருந்து இறங்கிச் சாதாரண வாழ்

வியல் தளத்துக்கு வருவதற்கும் மீண்டும் பாத்திரத்தின் தளத்திற்குப் போவதற்கும் கட்டியக்காரன் வாய்ப் பேற்படுத்திக் கொடுக்கின்றான். கர்ணன் போர்க் களத்தில் நிற்கும்போது ஊர்ப் பிரச்சினைகள், குடும்பப் பிரச்சினைகள் எனப் பல பிரச்சினைகளும் உரையாடப்படும், விவாதிக்கப்படும், விமர்சிக்கப்படும். பின் அதனைக் கைவிட்டு போர்க் கூத்தின் கதை ஆடப்படும். பாத்திரங்களின் தளநிலைகளை மாற்றியமைப்பதற்குக் கட்டியக்காரன் உதவுகிறான். சிலவேளைகளில் அவனே ஒரு குறித்த பாத்திரமாகவும் சில கணங்கள் நின்றாடுவதும் உண்டு.

ஒவ்வொரு பாத்திரத்தின் வரவுக்கும் இரண்டுபேர் திரை பிடிக்கப் பாத்திரம் உள்நுழையும் திரைச் சீலை ஒவ்வொரு வேளையும் ஒவ்வொன்றாக இருக்கும். சில வேளைகளில் தோளில் கிடக்கும் சால்வைத் துண்டையும் பாத்திர வரவுக்கான திரைச் சீலையாகப் பிடிக்கிறார்கள். ஆனால், எந்த ஒரு பாத்திரமும் தனது முதல் வரவின்போது திரைபிடித்தே உள் நுழைகின்றது. கர்ணன், அர்ச்சுனன், துரியோதனன் பாத்திரங்கள் வரவின் போது வேகமான ஆட்டத்தைக் காட்டி நிற்பார்கள். வேகம் அதிகரித்துச் செல்லும்போது களரியின் பின் பகுதியில் உள்ள சிறிய மேசையில் ஏறி நின்று ஆடும் வழக்கமும் உண்டு.

ஆட்டங்கள் வட்டமாகச் சுற்றியாடுவதாகவே அமைந்திருக்கும். ஈழத்து ஆட்டக் கூத்துக்களில் காணப்படுவது போன்று அதிகமான வெவ்வேறு ஆட்டக் கோலங்கள் தெருக் கூத்தில் இல்லையெனலாம். காலைக் குத்தியும் தட்டியும் ஆடுகின்ற ஆட்ட முறைமையே மேலோங்கிக் காணப்படுகின்றது. பாத்திரம் சுற்றிச் சுழன்றாடும் இலாவகம் தனிச் சிறப்பானது. அது அரங்க வெளியில் ஒரு பெருங் காட்சிப் பண்பைக் கொடுத்து நிற்கிறது. குறிப்பாக இரு பிரதான பாத்திரங்கள் கரப்புடுப்புடன் சுற்றிச் சுழன்றாடுவது பிரமாண்டமான காண்பியத்தினைக் கொடுக்கிறது. கரப்புடுப்பு துரியோதனன், கர்ணன், அர்ச்சுனன் பாத்திரங்களுக்கே அளிக்கப்படுகின்றன.

பெண் பாத்திரங்கள் சாதாரண உடையில் காணப்படுகின்றன. ஆண்களே பெண் வேடமிட்டு ஆடுகிறார்கள். எமது கலாசாரப் பின்புலமும் பெண்களை இரண்டாம் தரத்தில் நோக்குவதும் ஆபாசமாக நோக்குவதுமான நிலைமை கூத்தில் பிரதிபலிக்கின்றது. சாதாரணமான சாறி உடுத்து ஆட்டக் கோலம் போடும்போது ஏனோ கரப்புடுப்போடு ஆட்டம் இணைந்து அழகு கிடைக்கவில்லை. நாடகப் பாடல்களில் போதனைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. ஆடிப் பாடிக் களைப்படைந்த கூத்தர் களரியில் வைத்திருக்கும் இடத்தில் இருந்து தண்ணீர் குடிப்பதும்கூட ஆட்டத்தின் ஒரு கூறாகவே காணப் படுகின்றது.

தெருக்கூத்தில் பல நாடகப் பாடல்கள் காணப்படுகின்றன. பரம்பரை பரம்பரையாக ஆடப்பட்டு வந்த மிக நீண்ட நாடகப் பாடல், நடிகர்களின் அனுபவத்திற்கு ஏற்ப வயது முதிர்வுக்கேற்ப அவர்களின் மனதில் கிடக்கின்ற நாடகபாடல், ஆற்றுகைக் களத்தில் அனைவரும் இணையும் போது பிறக்கின்ற நாடக பாடல் என்று பலதும் ஒன்றாக இணைந்து கிடக்கின்றன. இதனைவிட முக்கியமானது. பார்வையாளனின் மனத்தில் உள்ள நாடகப் பாடல். இவை யெல்லாம் ஒன்றுடன் ஒன்று கலந்து கசிந்து ஒரு முழுமையைக் கொடுத்து நிற்கும்.

ஒரு நடிகர் பல பாத்திரங்களாக வேடம்புனைந்து ஆடுகிறார். நாரதர், கர்ணன், மனைவி, பிராமணன் பாத்திரங்களை ஒருவரே ஆடுகிறார். இது பார்ப்போனுக்குப் பிரச்சினையாக இல்லை. கூத்தில் சில முக்கிய பாத்திரங்களை ஒரு குறிப்பிட்ட நடிகர் ஆடுவதை ஊரார் விரும்புவதையும் காணமுடிகின்றது. வயது முதிர்ந்த பாத்திரம் இளவயதுப் பெண்வேடமிட்டு நடிப்பது இங்கு ஒரு பொருட்டாகக் கருதப்படுவதில்லை. இறக்கும்வரை ஒருவர் தான் தாங்கிய பாத்திரத்தை ஆடுவதற்குப் பார்வையாளரின் விரும்பமே காரணமாக அமைகின்றது எனலாம்.



கூத்தில் பிரதான பாத்திரங்கள் ஏனைய பாத்திரங்களைக் காலால் எட்டியுதைப்பதும் சாட்டையால் அடிப்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமமாக உள்ளது. கர்ணனின் மனைவி போர்க்களம் செல்லவேண்டாம் என்று அவனை வேண்டுகின்ற போது, அவளைக் கர்ணன் ஏசி, சாட்டையால் அடிப்பதும், கட்டியக்காரன் இடையீடு செய்யும்போது சாட்டையால் அடிப்பதும், கூத்திற்குப் பழக்கப்படாத எமக்கு சங்கடத்தை ஏற்படுத்துகின்றது. அதே போல் பெண்கள் மிகமோசமாக இழிவுபடுத்தப்படுவதும் ஏற்றுக் கொள்ள முடியாததாக இருந்ததையும் குறிப்பிட்டாக வேண்டும்.

இசை ஆர்மோனியத்தையும், முக வீணையையும் மத்தளத்தையும் அடிப்படையாகக் கொண்டது. நன்றாகக் கத்திப் பாடுகிறார்கள். அதில் எப்போதும் சுருதி சுத்தம் இருக்காது. தாளப்பிடிப்பு பற்றுக்கோடாக இருக்கும்.

ஒரு ஒன்றரை மணிநேர நாடகத்தைப் பார்ப்பதற்கே பொறுமையில்லாத நாடகப் பண்பாட்டில் இருந்து சென்றிருந்த எமக்கு ஒரு இராத்திரி கூத்தர்களோடும் கூத்தர்களை விரும்பும் மக்களோடும் அமர்ந்திருந்து கூத்துப்பார்த்து ஒரு மறக்க முடியாத அனுபவமாகும். எமது வருகை கூத்தர்களை உற்சாகப்படுத்தியிருந்தமை எமது பாக்கியமென்றே எண்ணத் தோன்றுகின்றது. வாழ்க மக்கள் கலை! வாழ்க கூத்தர் குழாம்!! □

# கூத்துப் பட்டறையின்: நாராய் சொன்ன கதை

- ஆனந்த் -



ந.முத்துசாமி



**செயல்திறன் அரங்க இயக்கத்தின் 'திரை நீக்கம்' என்ற தமிழ் நாட்டுக்கான அரங்கப் பயணத்தின்போது கூத்துப்பட்டறை மேடையேற்றத்தில், காஞ்சனா தாமோதரனின் 'நாராய் சொன்ன கதை' நாடகத்தை 27.01.2007 அன்று மாலை 7.00 மணிக்குப் பார்க்கும் வாய்ப்புக் கிட்டியது. அது பற்றிய சில மனப் பதிவுகள் இவை.**

**கூத்துப்பட்டறை** (Koothu-p-pattarai)

தமிழ் நாட்டின் நவீன அரங்க வரலாற்றில் மிக முக்கியமானதும் காத்திரமானதுமான பங்களிப்பைச் செய்த ஒரு நிறுவனம் கூத்துப்பட்டறை. ஒரு தொழில்முறை அரங்கக் குழுவாகத் தொடர்ச்சியாக இயங்கி வருகின்றது. கூத்துப்பட்டறையென்றால் ந.முத்துசாமி என்றளவிற்கு அவரது பிணைப்பும் பங்களிப்பும் முக்கியமானது. ஒரு இலக்கியவாதியான முத்துசாமி நாடக எழுத்தாளனாகவும் இயக்குனர், தயாரிப்பாளராகவும் உள்ளார். 'நாற்காலிக்காரன்' தொடக்கம் இன்று 'நாராய் சொன்ன கதை'வரை அவர் நாடகத்தோடு இரண்டறக் கலந்துள்ளார். தான் பார்த்த தொழிலைக் கைவிட்டு நாடகத்தோடு மிகச் சிரமப்பட்டு வாழ்ந்திருக்கக்கூடிய ஒரு கலைஞன். இவரது எழுத்து ஆளுமையே அரங்க ஆளுமையைவிட முன்துருத்தி நிற்பதாக அரங்கவியலாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

**எப்போதும் சாண் ஏறி முழம் சறுக்குவது அரங்க வரலாற்றில் சகஜம்தானே! அது இங்கும் நடக்கிறது. இருப்பினும் ஒரு அரங்க நிறுவனம் தொடர்ச்சியாக 30 ஆண்டுகள் இயங்குவது என்பது ஒரு இமாலய சாதனை.**

கூத்துப்பட்டறை (Kooth-p-pattarai) 1977ஆம் ஆண்டு ந.முத்துசாமியால் ஆரம்பிக்கப்பட்டது. சமகாலக் கருப்பொருட்களை பாரம்பரிய அரங்க நுட்பங்கள் ஊடாகக் கையாண்டார்கள். நிறுவனத்தின் பிரதான இலக்காக சிறந்த பயிற்சியுடைய நடிகர்களை உருவாக்குவதாகக் கடந்த காலங்களில் அமைந்துள்ளது. இங்கு பயிற்சி பெறுகின்ற ஒருவர் பாரம்பரிய நாட்டார் கலைகள், யோகா, பொம்மலாட்டம், புத்தாக்கச் செயலாக்கங்களில் பயிற்சி பெறுகிறார்கள். இவர்களது அரங்க மொழி, நாட்டார் அரங்கின் நடனக் கோலங்களோடும், நவீன அரங்க நுட்பங்களோடும் இணைந்ததாகக் காணப்படுகின்றது. உரையாடலுக்கும் நாடக பாடத்திற்கும் கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவத்திற்கும் மேலாக அரங்க அசைவியக்கத்திற்குக் கொடுக்கப்படுவதாகக் குறிப்பிடுகிறார்கள்.

கூத்துப்பட்டறை 1987ஆம் ஆண்டில் இருந்து முழுநேர அரங்கவள நிலையமாக இயங்கி வருகின்றது. UNesco நிறுவனம், அரங்கைக் கற்பதற்கான கல்விக்கூடமாக கூத்துப்பட்டறையை அங்கீகரித்து வருடாந்தம் உலகளாவிய

ரீரியில் இருந்து தெரிவு செய்யப்படும் ஒருவரை மூன்று மாதப் பயிற்சிக்காக கூத்துப்பட்டறைக்கு அனுப்பிவைக்கிறது. மேலும் கூத்துப்பட்டறை உலகளவில் பிரபல்யமான நாடக இயக்குனர்களை அழைத்து நாடகங்களைத் தயாரித்திருப்பதோடு பயிற்சிகளையும் வழங்கியுள்ளது. இந்தியளவில் முக்கியமானவராகக் கருதப்படுகின்ற பேராசிரியர் எஸ். ராமானுஜம் கூத்துப்பட்டறையில் பல நாடகங்களை இயக்கியுள்ளார். இவரைவிட அன்மோல் வேலனி (Anmol vellani), ஜோன் மாட்டின் (John martin), இன்ஜ்போர்ங் மேயர் (Ingeborg Mayer), வின்சன் ரோக்சி (Vinsent Roche), நீலியா வெக்சல் (Nelia Veksel- Germany), கில் அலோன் (Gil Alon – Israel) ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

கூத்துப்பட்டறை தனக்குத் தேவையான நிதிக் கொடையை அரச, அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்கின்றது. போட் பவுண்டேசன் (Ford foundation) மற்றும் இந்திய கலாசார அமைச்சு ஆகியன முக்கியமான நிதிக்கொடை நிறுவனங்கள். 1977 தொடக்கம் இன்றுவரை பல நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றியுள்ளது கூத்துப்பட்டறை. அவற்றில் ஒரு சில வருமாறு. 'படுகளம்' (2002), 'பிரகலாத சரித்திரம்' (2003), 'பாஞ்சாலி சபதம்', 'நாற்காலிக்காரரும் ஐந்து சிறுகதைகளும்' (2004). 'பரமானந்த குரு' (2006), 'தென்னாலிராமன்' (1999).

கூத்துப்பட்டறையில் தற்போது பயிற்சி பெற்றுவருகின்ற இளைஞர்களையும் யுவதிகளையுமே எம்மால் காணமுடிந்தது. ஏற்கனவே பயிற்சிபெற்ற முதிர்ச்சியானவர்களைக் காணமுடியவில்லை. பயிற்சி வழங்கும் நிறுவனம் என்ற வகையில் பழையவர்கள் சென்றுவிட புதியவர்கள் இருப்பார்கள் என்ற விளக்கம் கொடுக்கப்பட்டாலும், கூத்துப்பட்டறையின் நடிகர்களை 'சினிமா' விழுங்கிவிடுகின்ற துயரம் நடக்கிறது என்பது தான் உண்மை. ஒரு சிறந்த நடிகன் தொடர்ந்து கூத்துப்பட்டறையில் நிற்பதற்கு சினிமா விடுவதில்லை எனலாம். "இன்னும் புதிதாகப் பல இளைஞர்கள் சேர்வதற்கு முண்டியடிக்கிறார்கள். காரணம், கூத்துப்பட்டறையில் இணைந்தால் சினிமாவில் நடிக்கலாம் என்ற ஆசை" என்று ஒரு விமர்சகர் குறிப்பிட்டார். எப்போதும் சாண் ஏறி முழம் சறுக்குவது அரங்க வரலாற்றில் சகஜம்தானே! அது இங்கும் நடக்கிறது. இருப்பினும் ஒரு அரங்க நிறுவனம் தொடர்ச்சியாக முப்பது ஆண்டுகள் இயங்குவது என்பது ஒரு இமாலய சாதனை. தமக்கானதொரு இடத்தில் சிறிய தொகைப் பார்வையாளர்கள் பார்ப்பதற்கானதொரு இடவசதியுடனும் அரங்கப் பொருட்களுடனும் ஒரு அரங்க நிறுவனத்தைப் பார்த்தபோது மகிழ்ச்சியாக இருந்தது.

## 'நாராய் சொன்ன கதை'

காஞ்சனா தாமோதரனின் சிறுகதைகள் அதாவது இலக்கிய பாடம் நடிகர்களாலும் நாடகராலும் மேடைபாடமாக்கப்பட்டிருக்கிறது. கூத்துப்பட்டறைக்கு ஏலவே இருந்த அனுபவத்தின் அடிப்படையில் இந்த நாடகத்தையும் தயாரிக்க முற்பட்டதாக இதன் இயக்குனர் ந.முத்துசாமி குறிப்பிடுகிறார். நராய் என்ற பாத்திரத்தின் கதைசொல்லல் அல்லது எடுத்துரைப்பு ஊடாகக் கதை நகர்ந்து செல்கிறது.

பல கதைகள் நாடகக் குழுவாலும் இயக்குனராலும் பல தடவைகள் வாசிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு புத்தாக்கச் செயல் மூலம் மேடைக்கு வருகின்றபோது, பார்வையாளர்களாகிய நாம் அனைத்தையும் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட நேரத்திற்குள் தொடர்புபடுத்திப் புரிந்துகொள்ளவதற்குரிய போதிய விளக்கத்தை அளிக்கை அதாவது நாடக பாடமும் மேடைப் பாடமும் தராததால் விடுபடாத முடிச்சுகள் பல பார்வையாளர்களான எம்மிடம் இன்னமும் இருக் கின்றன.


நாராய் சொன்ன கதை நாடகத்தின் ஒரு காட்சி. (அட்டையில் காணப்படுவதும் இந்தப் படமே)

நாடக ஆரம்பபம் சற்று வித்தியாசமான களத்தில் அமைந்திருந்தது. ஒரு 50 பேர் வரையிலானோர் இருக்கக்கூடிய பார்ப்போர்கூடம் படிகளால் உயர்ந்து சென்றது. பார்வையாளரின் தளத்திலேயே ஆற்றுகைத் தளம் காணப்பட்டது. பார்வையாளனுக்கும் ஆற்றுவோனுக்கும் இடையில் இடைவெளி காணப்படவில்லை. பின் ஆற்றுகைத் தளம் உயரமானதாக அமைக்கப்பட்டிருந்தது. இரண்டு பிரதான களங்கள் அதில் அமைக்கப்பட்டிருந்தன. ஒன்று வயதுமுதிர்ந்த அரசனின் அரண்மனை, மற்றது வாத்து வளர்த்துவரும் கிழவி யொருத்தியின்

குடும்பம். இப்பகுதியில் உரைஞருக்கு உரைசேர்க்கும் உரைஞர் குழாம். முன்இடதில் இசைஞர் குழு அமர்ந் திருந்தது.

இங்கு முக்கோண ஊடாட்டம் நடைபெற்றது. அரங் கிற்குரிய வியாபகமான காண்பியல் பெறுமானம் இந்த மூன்று புள்ளிகளுக்குள் முடங்கிக் கிடந்ததால் ஆற்றுகையின் காண்பிய வீச் செல்லை மட்டுப்பட்டுக் கிடந்தது எனலாம்.

சிறுகதை இலக்கியம் தனது இஷ்ரப்படி தளங் களை மாற்றிக் கொள்வதும் மீண்டும் தான் நின்ற தளத்திற்கு வருவதுமான சிக்கல் நிறைந்த அசைவியக்கத்தைத் தன்னகத்தே கொண்டுள் ளது. இது இலக்கிய வடிவத்திற்கு உள்ள வாய்ப்பு. இதையே நாடகத்தில் சொல்கின்ற போது அதற்கான ஆயத்தமும் படிமுறையும் அவசியமாகிறது. ஒரு கதையில் இருந்து இன் னொரு கதைக்குத் தாவும்போது அந்தந்தக் கதைகளுக்குரிய பின்புலமும் கொண்டு செல் லப்படவேண்டும். அது கடினமான பணி. அவ் வாறு நடைபெறாவிட்டால் பார்வையாளன் நாட கத்தைப் புரிந்துகொள்வது கடினமாகும். நேர்த் தியான அசைவியக்கம், நன்கு திட்டமிடப்பட்ட நடிப் பொழுங்கு, நாடக மோடிமைக்கேற்ற உரை யாடல்கள், நேர்த்தியான ஒளி வடிவமைப்பு, ஆடைகள் என்பன நாடகத்தின் சிறப்பம்சங்களாகும்.

நடிகர்கள் நன்கு பயிற்சி பெற்றவர்கள் என்பதை அவர் கள் ஒவ்வொருவரும் தாம் தாங்கிய பாத்திரத்தில் வாழ்ந்ததன் ஊடாக நிரூபித்து நின்றார்கள். வாத்துக் காரக் கிழவி தன்னிலை தவறாது கூன் விழுந்த பாத் திரத்தை நேர்த்தியாக வழங்கியிருந்தாள். தன் இள வயது நினைவை மீட்டபோது நாணி, வெட் கப்பட்டு நகர்ந்தது நினைவில் நிற்கின்றது. மகள் மற்றும் மருமகன் மூன்று பேரும் யதார்த்தமாக இயல்பாக வெளிப்பட்டார்கள். மகள் தன் இயல்பான பண்பில் இருந்து வேறு பட்ட ஒரு பாத்திரத்தை அற்புதமாக வெளிப் படுத்தியிருந்தார்.

அரசன் பாத்திரம் எவ்வகையான மோடிமை நடிப்புக்குள் நின்றது என்பது தெளிவில்லாமல் இருந்தது. இங்கு ஆடைகள் கழற்றி இள வயதுக்காரனாகும் அரசன் மேடையிலேயே ஆடைகளைக் களைந்து வயது மாற்றத்திற் குள் சென்று மீள்கின்றான். இந்த அரங்க நுட்பம் யதார்த்த மோடிக்குள் அமைந்துவிட முடியாததொன்று. பார்வையாளனுக்கு அனைத் தையும் வெளிப்படையாக்குவது என்ற பிறெ‧. ட்டின் அந்நியமாதல் கோட்பாட்டை அடிப் படையாகக் கொண்டது. யதார்த்தம் எப்போதும் 'புனைவு மெய்மை' பற்றியே அக்கறைகொள்ளும் இந்த மோடிமை மாற்றத்திற்கும் ஒரு இயல்பான படிமுறை தேவையாகப் பட்டது எனலாம். இந்த இருமை நிலைச் சிக்கல் பாத் திரத்தின் நடிப்பில் துலங்கியது.

இந்த மேடையில் இருந்த உரைஞர்களின் தேவை மேலும் வலுப்படுத்தப்படிருக்கலாம். 8 பேர் கொண்ட வட்டமேடை உரையாடல் ஏன் நடைபெறுகிறது? ஒவ் வொருவரதும் தேவை ஏன்? என்ற வினாக்கள் எழுந்து நின்றன. அடுத்து நாடக அளிக்கையில் தேவை கருதி பின்னணியாக இசைந்து இசைத்த இசை அருகில் இருந்த எம்மை நாடகத்துடன் இசைவுற உதவியது. இசைக் கலைஞர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.



**நாடகத்தின் ஒரு காட்சியில் வாத்துக்காரக் கிழவியும் மற்றையவர்கள்.**

நாடகக் காட்சிகளுக்கு ஒரு கலைத்துவப் பெறு மானத்தை வழங்கியது ஒளி வடிவமைப்பு. ஒளியமைப் பைச் செய்தவர் திரு ரவீந்திரன். பாண்டிச்சேரி பல் கலைக்கழகத்தின் நாடகத்துறை விரிவுரையாளர். கூத் துப்பட்டறையுடன் நீண்டகாலமாக இணைந்து பணி புரிபவர். டில்லியிலும் மற்றும் பல இடங்களிலும் நாடக மேடையேற்றங்களில் ஒளியமைப்புச் செய்துள் ளார். இவரின் கைநேர்த்தி இந்த ஒளியமைப்பில் தெரிந்தது. சில களங்களில் இவரது நேரக்கட்டுப்



**நாடகத்தின் ஆரம்பத்தில் பார்வையாளர்களுக்கு வாத்து முட்டை கொடுக்கப்படுகின்றது.**

பாட்டுக்கு நடிகர்கள் ஈடுகொடுக்க முடியாமல் திண் டாடினார்கள். நிறக்கலப்பும் ஒளிக்கலப்பும் இலாவக மாக மேற்கொள்ளப்படுகின்றபோது கிடைக்கின்ற அழகை இங்கு தரிசிக்க முடிந்தது.

நாடகம், வறிய பெண்ணொருத்தியின் வாழ்வையும் அந்தப்புரத்தில் திளைத்திருந்த மன்னனையும் விவா

திக்கிறது. குறிப்பாக மன்னனை விமர்சிக்கிறது. சில கணங்களில் பார்ப்போரையும்கூட விமர்சிக்கிறது. ஒரு விடயத்திற்கு ஒரு பார்வையல்ல, பல பார்வைகள் இருக்கின்றன. பல கோணங்கள் இருக்கின்றன. அதை அங்கீகரித்தாக வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவதாக அந்தப்புறப் பெண்கள் எப்படி இருப்பார்கள் என்பதை முகமூடிகள் ஊடாகக் குறியீடாகக்காட்ட முனைகிறார்கள். பெண்களின் முகமூடிகள் மேடையில் தொங்க விடப்படுகின்றன. பின் நாராயின் கதை சொல்லலில் ஏற்பட்ட வெறுப்பில் நாராயைத் தாக்குவதற்கு அதே பெண்களின் முகமூடிகள் பயன்படுத்தப்படுகின்றன. மறுக்கப்பட்ட பெண்களின் முகங்களால் இன்னொருவன் மறுக்கப்படுதல் என்பதன் அர்த்தம் தெளிவாக இல்லை. இருப்பினும் முகமூடிகளால் வெருட்டப்படுகின்ற அந்தக் காட்சித் துண்டம் தனியாகப் பார்ப்போரைக் கவர்ந்திருந்தது எனலாம்.

நாடகத்தில் பார்வையாளன் பங்குகொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஆற்றுகையாளர்களிடம் இருந்ததாக நாடக ஆரம்பத்தில் தோன்றியது. பார்வையாளர்களிடம் வாத்து முட்டையை உண்ணுவதற்காக நீட்டியபோது பார்வையாளன் ஆற்றுகையில் பங்குகொள்வதற்கு வாய்ப்புள்ளதாகவே கருதமுடிந்தது. ஆனால் அதற்கான சூழல் பின்னர் வளர்த்தெடுக்கப்படவில்லை. ஆற்றுகையின் இயங்கு நிலையில் அதற்கான தேவையும் இருக்கவில்லை. அப்படியாயின் நாடக ஆரம்பத்தில் நடிகர்கள் முட்டையுடன் பார்வையாளர் பகுதிக்கு வருவதன் நோக்கம் என்ன? என்ற கேள்வி உண்டு. அது ஒரு அரங்கநுட்பமாகத் தனித்துத் துருத்திக்கொண்டு நின்றது எனலாம். தெரு வெளி அரங்கிற்குரிய நெருக்கமாகப் பார்வையாளன் ஆற்றுவோனுக் கருகில் நின்றான். யதார்த்த மோடி நாடகத்திற்கு ஆற்றுகை வெளிக்கும் பார்வையாளனுக்கும் இடையில் சற்று இடைவெளி தேவை என்பதையும் உணர முடிந்தது.

**அரங்கிற்குரிய வியாபகமான காண்பியல் பெறுமானம் இந்த மூன்று புள்ளிகளுக்குள் முடங்கிக் கிடந்ததால் ஆற்று கையின் காண்பிய வீச்செல்லை மட்டுப்பட்டுக் கிடந்தது எனலாம்.**

நாடகத்தில் இரண்டு இடங்களில் விளம்பரத் தொனிகள் காணப்பட்டன. ஒன்று, முற்பாயிரத்தில் எழுத்தாளர் காஞ்சனா தாமோதரன் பற்றிய அதிகப்படியான விளக்கம் தேவையா என்பது. ஒரு படைப்பாளி படைப்பில் வெளிப்படுதலே படைப்பாளியின் ஆளுமை பற்றிய நன்மதிப்பை அதிகரிக்கும். இரண்டாவது, நாடக இறுதியில் ஒரு நடிகை, கூத்துப்பட்டறையில் நடத்தப்பட்ட நடிகருக்கான பயிற்சிகள் சிலவற்றைச் செய்து காட்ட, இன்னொருவரால் விளக்கம் கூறப்பட்டது. கூத்துப்பட்டறையின் அரங்க ஆளுமை நாடகத்தில் வெளிப்பட்டுப் பிரமிப்பை ஏற்படுத்தி நின்றவேளை இந்த விளம்பரப்படுத்தல் தேவையானதாகப்படவில்லை. ஆக நாடகத்தின் முன்னும் பின்னுமான துண்டுகள் மூலத்துடன் இணையாது தனித்து நின்றனவெனலாம்.

தமிழ் நாட்டில் நவீன அரங்காற்றுகைகளுக்குப் பார்வையாளர்கள் இல்லையென்ற குறை இருந்தாலும் 'நாராய் சொன்ன கதை' தொடர்ந்து பத்து நாட்கள் நிகழ்த்தப்பட்டது. சில நாட்கள் மிகக் குறைந்த பார்வையாளர்களுக்கும் நாடகம் நிகழ்த்தப்பட்டிருக்கின்றது. நாம் சென்ற அன்று அதிகமான பார்வை யாளர்கள் வந்திருந்தனர் என்று குறிப்பிட்டார்கள். 50-60 பேர் வந்திருந்தார்கள்.

தமிழ்நாட்டின் நவீன அரங்கில் முக்கியமானதும் குறிப்பிடக்கூடியதுமான ஒரு நிறுவனத்தின் படைப்பைப் பார்த்த அனுபவம் எமது குழுவினருக்கு மகிழ்ச்சி நிறைந்த அனுபவமே! இவ்வாறான அனுபவங்கள் எம்மை மேலும் வலுப்படுத்தும். □

## இரு நாடக நூல்கள் வெளியீடு!

இந்தியாவின் பிரபல நிறுவனமான மணிமேகலை பதிப்பகத்தின் பிரசுரங்களாக இரு நாடக நூல்கள் வெளிவந்துள்ளன. கொழும்பு கம்பன் கழகத்தில் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி இந்த நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன. கௌரவ கலாநிதி முல்லை மணி வே. சுப்பிரமணியம் எழுதிய 'பண்டார வன்னியன்' என்ற வரலாற்று நூலும் லண்டனில் வசிக்கும் கீர்த்தி (குமரேஸ்வரன் கீர்த்திசிங்கம்) எழுதிய 'தாய் மண்ணே வணக்கம்' என்ற நூலுமே வெளிவந்துள்ளன.

'பண்டாரவன்னியன்' வரலாற்று நாடகம். 1964இல் இலங்கை கலைக்கழக நாடக எழுத்துப் போட்டியில் பரிசு பெற்ற நாடகம். இப்போது தான் நூலுருப் பெற்றுள்ளது. இதன் இலங்கை விலை 150 ரூபா.



'தாய் மண்ணே வணக்கம்' 7 நாடகங்களின் தொகுப்பு நூல். லண்டனில் அரங்கேற்றப்பட்ட நாடகங்கள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நாடகத்தின் ஆரம்பத்திலும் அதன் கதைச் சுருக்கம் தரப்பட்டுள்ளமை இதில் குறிப்பிடத்தக்க அம்சம். 'யாருக்கு யார் சொந்தம்', 'அதோ வானம் விடிகிறது', 'காத்திருப்பு', 'அடுத்த வாரிசு', 'இவள் ஒரு தமிழிச்சி', 'ஒருமைப்பாடு', 'தாய் மண்ணே வணக்கம்' ஆகிய நாடகங்கள் இதில் இடம்பெற்றுள்ளன. இதன் விலை இந்திய ரூபாயில் 75 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. □

# Traditional Thai Puppet Theatre

# தாய்லாந்தின் பாரம்பரிய பொம்மலாட்ட அரங்கு

- தேவா



**உலகின் சுற்றுலா மையங்களில் ஒன்றான தாய்லாந்தில் இன்னும் பாரம்பரிய பொம்மலாட்டம் மிகச் சிறப்பாகப் பேணப்படுகின்றது. தாய்லாந்து புத்த மதத்தைப் பின்பற்றுகின்ற நாடு. இந்தியப் பண்பாட்டின் செல்வாக்கும் அதிகமாகக் காணப்படுகின்றது. பொம்மலாட்டத்தின் கதையும் இந்தியப் பண்பாட்டையொட்டியே எழுந்ததாக அறிய முடிகிறது. தேவர்களும் அசுரர்களும் இணைந்து பாற்கடலைக் கடைந்த இந்து புராணக் கதையே பொம்மலாட்டத்தின் அடிநாதம்.**

புன்னகை தேசம் (Land of smile) என்று அழைக்கப்படுகின்ற தாய்லாந்து நாட்டின் தலைநகர் பாங்கொக்கில் உல்லாசப் பயணிகளுக்காக தினமும் ஆற்றுகை செய்யப்படுகின்ற பாரம்பரிய பொம்மலாட்ட அரங்கை அங்கு தங்கியிருந்தபோது (செப்ரெம்பர், 2006) பார்கின்ற வாய்ப்புக் கிடைத்தது. அது ஒரு அற்புதமான அனுபவம்.

அதியுயர் வசதிகொண்ட தியேட்டரில் நடைபெற்ற ஆற்றுகைக்கான ரிக்கற் பெறுமதி 900 பாத். இலங்கை ரூபாவில் கிட்டத்தட்ட 2750. ஒரு பரம்பரையினர் தொழில் முறையாக தினமும் மாலைவேளையில் இவ்வாற்றுகையை நிகழ்த்தி வருகிறார்கள். இதுவொரு அற்புதமான அழகு செறிந்த ஆற்றுகை. இதற்கு Joe Louis Theatre என்று பெயர் சூட்டியுள்ளனர்.

Mr. Sakorn Yangkeawsot என்பவர் இந்த அரங்கை எதிர்கால சந்ததியினருக்காக வழங்கியவராக குறிப்பிடப்படுகிறார். இவரை Joe louis என்று செல்லமாக அழைக்கிறார்கள்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின், கிட்டத்தட்ட ஐம்பது ஆண்டுகள் பாரம்பரிய பொம்மலாட்ட அரங்கு தாய்லாந்தின் பண்பாட்டில் இருந்து மறைந்து போயிருந்ததாகவும் சக்கோர்ன் (sakorn) அதனை மீளக்கண்டுபிடித்து புத்தாக்கம் செய்து இன்றைய வடிவில் பேணி வருகிறார் எனவும் கூறப்பட்டது. 1924ஆம் ஆண்டு பிறந்த இவர் ஒரு நகைச்சுவை நடிகர். இவரது பெற்றோர் மேடை நடிகர்கள்.



1985ம் ஆண்டு இக்கலையை மீள்படைப்பு செய்வதற்காக தாய்லாந்தின் சுற்றுலாத்துறை சர்க்கோனுக்கு ஆதரவையும் ஊக்கத்தையும் வழங்கியுள்ளது. இன்று தாய்லாந்தின் தேசிய கலை வடிவமாக மன்னரால் அங்கீகரிக்கப்பட்டு உலக நாடுகள் முழுவதும் ஆற்றுகை செய்யப்பட்டு வருகிறது.

1996 ஆண்டு தேசிய கலைஞர் விருது சர்க்கோனுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர் தனது வாழ்க்கையை இக்கலைக்கு அர்ப்பணித்துள்ளதோடு தனது குடும்பத்தினரையும் முழுமையாக இதில் ஈடுபடுத்தியுள்ளார். தனது அறிவையும் அனுபவத்தையும் தனது ஒன்பது பிள்ளைகளுக்கும் வழங்கியுள்ளதோடு பத்து பேரப்பிள்ளைகளுக்கும் கையளித்துள்ளார். பொம்மலாட்டக் கலையைப் பாதுகாப்பதற்காக இவரது குடும்பத்தில் ஒவ்வொருவரும் இக்கலையைப் பயில வேண்டும் என்ற எழுதப்படாத சட்டம் வழக்கில் உள்ளது. பொம்மலாட்டத்தைப் பாதுகாப்பதற்கும் கற்பதற்குமான கல்விக்கூடம் ஒன்றை உருவாக்குவது இக்கலைக் குடும்பத்தின் கனவாக உள்ளது. இங்கு பொம்மைகளும் பொம்மைகளை ஆட்டுவோரும் முக்கியம் பெறுகிறார்கள்.

பொம்மைகள் ஒரு மீற்றர் உயரம் கொண்டவை. மரத்தாலும் கொலோ பேப்பராலும் செய்யப்பட்டன. அலுமினியக்கொயில் அசைவியக்கத்திற்கு வசதியாக பொம்மைகளில் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றின் கண்கள் அசைவதில்லை. ஆனால், நகைச்சுவைப் பாத்திரத்தின் வாய் திறந்து மூடக்கூடியதாக இருக்கும். ஏனையவை கைகள், தலை என்பவற்றை அசைக்கக் கூடியதாக அமைக்கப்பட்டிருக்கும்.

இந்த ஆற்றுகையின் உயிர்ப்பும் வேகமும் ஆட்டுவிப்போனில் தங்கியுள்ளது. பிர

தான பாத்திரங்களான Phra, Yak (giant), Ling (monkey) ஆகியவற்றை இயக்குவதற்கு மூன்று பேர் தேவை. பெண்பாத்திரத்திற்கு இரண்டு பேர் தேவை. நகைச் சுவைப் பாத்திரத்தை இயக்குவதற்கு இரண்டு பேர் தேவை. மிகக் கடினமானதும் சிக்கலானதுமான அசை வைக்கொண்ட பொம்மைகளாக monkey, gaint என்பன காணப்படுகின்றன.

இங்கு பொம்மலாட்ட அரங்கு பல்வேறு உப கூறு களை உள்ளடக்கியுள்ளது. 1) பொம்மைகளை உரு வாக்குதல், 2) ஆடைகள் தயாரித்தல், 3) இசை, 4) மேடைக் காண்பியங்கள். 5) பொம்மைகளின் அசைவியக்கம். இவை ஒவ்வொன்றும் தனித்தனிக் கூறுகளாகக் கருதப்பட்டாலும் அனைத்தும் இணைந்த முழுமையின் அழகே பொம்மலாட்ட அரங்காகும்.



**ஆற்றுகை**

மேடையில் முன் வலதில் இசைவாத்தியக்காரர் அமர்ந் திருக்கிறார்கள். அங்கு அனைத்தும் பாரம்பரிய இசைக் கருவிகளே காணப்படுகின்றன. முன் இடதில் இரண்டு பேர் கதாகலாட்சேபப் பாணியில் மற்சொல்லாகவும் விபரிப்பாகவும் கதையை ஒரு தொனியில் அல்லது இராகத்தில் சொல்பவர்களாகக் காணப்படுகிறார்கள். திரைக்கு முன் உள்ள பகுதியில் பொம்மைகளுடன் அதனை ஆட்டுவோர் அவ்வப்போது தோன்றி மறை கிறார்கள்.

இங்கு பொம்மைகளின் அசைவும், தோற்றமும் முக் கியமானவை. நேர்த்தியாகவும் நுட்பமாகவும் அழகா கவும் அவை அமைக்கப்பட்டுள்ளன. ஆட்டுவோரும் மேடையில் ஏறி ஆடுகின்ற வகைப்பாட்டைக் கொண்ட அரங்காக இவ்வரங்கு காணப்படுகின்றது.

பொம்மைகளை ஆட்டுவோர் கறுப்பு உடையணிந்துள் ளார்கள். பொம்மை எவ்வாறு அசைகிறதோ அதற் கேற்ப தாமும் அசைகிறார்கள். அவர்களின் கண்கள் கை கால்கள் அனைத்தும் பொம்மைகளோடு இயைந்து அசைந்து செல்கின்றன. இந்த அசைவு எந்த ஒரு கட்டத்திலும் பொம்மைகள் மீது பார்ப்போருக்குள்ள கவனத்தைக் குலைக்கவில்லை என்பது இதன் சிறப் பம்சமாகும். ஆட்டுவிப்போர் மிகச் சிறப்பாகத் தாய் லாந்தின் பாரம்பரிய நடனத்தை ஆடுகிறார்கள். இங்கு மூன்று பேர் ஒரு பொம்மையை ஆட்டுவிக்கிறார்கள். இவர்களே பொம்மைகளுக்கு உயிர் கொடுக்கிறார் கள். இவர்களால்தான் பொம்மைகள் வெவ்வேறு பாத்திரங்களாக வெளிப்படுகின்றன. அதற்கு உரு வமைப்பும் அசைவியக்கமும் துணைநிற்கின்றன.

இங்கு ஒரு கதை நிகழ்த்திக் காட்டப்படுகின்றது. தாய் லாந்து புத்த மதத்தைப் பின்பற்றுகின்ற நாடு. இந் தியப் பண்பாட்டின் செல்வாக்கும் அதிக மாகக் காணப்படுகின்றது. தாய்லாந்தின் புராதன தலைநகரான அயோத்தியாவில் உள்ள பௌத்த கோயில்களின் கட்டட அமைப்பு மற்றும் சிற்பங்களில் இதனைக் காண லாம். பொம்மலாட்டத்தின் கதையும் இந்தியப் பண்பாட்டின் அடியொட்டிப் பிறந்ததாகவே அறிய முடிகிறது. தேவர்களும் அசுரர்களும் அமுதம் பெறுவதற்காக பாற்கடலை, பாம்பைக் கயிறா கக்கொண்டு கடைகிறார்கள். பாம்பு வலி தாங்க முடியாமல் விஷத்தைக் கக்கி விடுகிறது. அதனைக் கண்டு அஞ்சிய தேவர்கள் சிவனிடம் ஓடிச்சென்று முறையிடுவதுமான கதை நிகழ்த்திக்காட்டப்படு கிறது.

பாரம்பரிய இசை ஊடு அசைந்து செல் லும் ஆற்றுகை, நவீன ஒளியமைப் புக் கருவிகளின் ஒளி விதானிப்பால் மேலும் செழுமை பெறுகின்றது. நேரக்கட்டுப்பாடும் நேர்த்தியும் தொழில்முறைத் தன்மையும் ஆட்டத்திற்கு மேலும் அழகு சேர்க்கும் கூறுகளாகின்றன.

பொம்மைகளோடு ஆட்டுவோர் மட்டுமே வெறும் மேடை யில் அசைகின்றபோது கிடைக்கின்ற காண்பிய ஆழம் (Visual depth) மேடைக் காண்பியங்களோடு அசை கின்றபோது கிடைக்கவில்லை எனலாம். மலைப் பாம்பு, முகில்கள் என்பன மேடையில் தோன்றும்போது பொம்மைகளின் அசைவை அவை விழுங்கிவிடுகின் றன. இவை தனித்த பெறுமானத்தில் பிரமிப்பை ஏற் படுத்தினாலும் பொம்மைகளோடு இணைந்து ஒரு ஒட்டுமொத்தமான காணபியப் பெறுமானங்களை கொடுக்கத் தவறிவிடுகின்றன. இதனைவிட தாய்லாந்து மொழி தெரியாதவர்களுக்காக தொலைக்காட்சி களில் தரப்படுகின்ற ஆங்கில மொழி விபரிப்புக்கள் ஆற்றுகையைக் குழப்புபவையாகக் காணப்படுகின்றன. சிலவேளைகளில் பின்திரைகளில் காட்சிகள் விழுத் தப்படுகின்றன. இதன்போதும் பொம்மைகள் நிராகரிக் கப்படுகின்றன. மனதைத்தொடும் காட்சிகளாக வெறும் மேடையின் காட்சிகளே காணப்படுகின்றன. இக் காட்சிகளுக்கே அரங்கு நிறைந்து வியாபிக்கிறதை உணர முடிகின்றது. பாரம்பரியத்தோடு அதி நவீன

## கவனத்திற்குச் சிலது மட்டும்....!

ஒரு தாயின் வயிற்றில் கருவாகி உருவாகி மண்ணில் அவதரிக்கிறது குழந்தை. பிறந்தவுடன் அழுகிறது. அந்த அழுகையின் சப்தம் தேனோடு கலந்த அமிர்தமாய் கேட்கறது. இசையோடு கலைகள் யாவற்றையும் உள்ளடக்கி அழுகிறது குழந்தை. அவ்வாறு அவதரித்து குழந்தைகள்தான் பின்னர் கலைகளோடு ஒன்றித்து இசைகளோடு உறவாடி நாடகம் நாட்டுக்கூத்துக்குத் தங்களை முழுமையாக அர்ப்பணித்த அண்ணாவிமார்களாகின. அவ்வாறான அண்ணாவிமார்கள், இயக்குனர்கள், இசை அமைப்பாளர்கள், நடிகர்கள் இன்று எம்மத்தியில் இல்லை. பாரம்பரிய அரிய கலைகள் அழியும் நிலையில் இருப்பதை அவதானிக்க முடிகிறது. இக்கலைகள் வளர்ச்சிபெற நாம் முன்னோடியாகச் செயற்படவேண்டும். நாடகம் நாட்டுக்கூத்து (தென் மோடி, வடமோடி) கலைஞர்கள் யாவரும் ஒரு கூட்டுக் குடும்பம். நடிகர்கள் மட்டும் கலைஞர்களல்லர். ஒலி, ஒளி, ஒப்பனை, காட்சி அமைப்பு இவற்றைச் செய்பவர்கள் எல்லோருமே கலைஞர்கள்தான்.

ஒரு நடிகனின் உணர்ச்சிவசப்பட்ட நடிப்பிற்கு ஒப்பனையும் மூல காரணமாகும். மேடை நடிப்புகளில் போட்டி இருக்கலாம். ஆனால் அது பொறமையாக மாறக்கூடாது. எந்த ஒரு கலைஞனுக்கும் குடும்ப ஆதரவு வரவேற்பு நிச்சயம் இருக்கவேண்டும். அவனின் உயர்ச்சியின் வளர்ச்சிக்கு இது ஒரு மூல காரணமாகும். கலைஞன் தேடிபடிக்கவேண்டும். இதில் வெட்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. நாடக ஒத்திகைகளில் கட்டுப்பாடின்மை, தர்க்கம், கூச்சல், குழப்பம் என்பன ஏற்படலாம். அவை களை முழு மனதோடு சமாளிக்கும் திறன் நெறிப்படுத்துபவருக்கோ அண்ணாவியாருக்கோ இருக்கவேண்டும். அத்தனையையும் தாண்டி ஒற்றுமையாக ஒன்றுபட்டு ஆக்குவதே நாடகம். எத்தகைய நிலைவரினும் நாம் அதனைக் கைவிடாது காப்போம் என்று ஒவ்வொரு கலைஞனும் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக எமது பாரம்பரியக் கலைகள் அழிந்துவிடாது பாதுகாத்துக்கொள்ள நாம் திடசங்கறபம் பூணவேண்டும். □

நடிக கலாமணி
அ.யேசுரட்ணம் ருவ
ஆனையூர்

மும் கலந்த தால் விளைந்த விலங்கம் முழுமை உணர்வைப்பெற தடையாக இருந்தது எனலாம்.

ஆற்றுகை முடிவில் பார்வையாளர் கூடத்திற்குள் வருகின்ற பிரதான பொம்மை ஒவ்வொரு பார்வையாளரையும் சந்தித்துக் கட்டி அணைத்து முத்தம் கொடுத்து விடைபெறுகின்ற காட்சி அற்புதமானது. ஒரு மனிதனுக்குரிய துலங்கலை பொம்மை கொடுத்து நிற்கிறது. பொம்மைகளுடன் ஆட்டுவோரும் சேர்ந்து முழுந்தாழிட்டு நன்றி சொல்லிச் செல்வது பண்பாட்டை விளக்குவதாக அமைந்திருந்தது. பொம்மை மேடையை விட்டு இறங்கும்போது இசை வாத்தியக்காரரைப் பார்த்து நிறுத்துமாறு சைகை செய்வது ஒரு ஹாஷியமான, விநோதமான காட்சியாகும்.

ஆற்றுகை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அரங்கினுள்ளே வீடியோ படங்களோ புகைப்படங்களோ எடுப்பது கண்டிப்பாகத் தடுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஆற்றுகை முடிந்து மண்டபத்தை விட்டு வெளியேறும்போது பொம்மைகளோடு பொம்மலாட்டக்காரர்கள் வாசலில் நின்று வழியனுப்புகிறார்கள். பார்வையாளர்கள் விரும்பினால் அந்த நேரத்தில் பொம்மைகளோடு நின்று புகைப்படங்கள் எடுத்துக்கொள்ள முடியும்.

மொத்தத்தில் ஒரு கலைக்குடும்பத்தின் கலை வடிவம் பிரபல்யம் பெற்று தேசியக் கலையாகவும் தொழில்முறைக் கலையாகவும் மிளர்ந்திருப்பது கண்டு பிரமிக்காமல் இருக்க முடியாது. □






இடது – பாங்கொக்கிலுள்ள பொம்மலாட்ட அரங்கு, நடு – அரங்கினுள் பொம்மைகளுடன் ஆட்டுவிப்போர் ஆற்றுகையில் ஈடுபட்டிருக்கின்றனர், வலது – ஆற்றுகையின் சில காட்சிகள்.

# பாரம்பரிய விளையாட்டுக்களில் அரங்கக் கூறுகள்!

'அரங்கு வாழ்வைப் பிரதிநிதித்துவப்படுத்துவதோடு தான் வாழும் உலகினைக் குறுகத்தறித்ததாக வெளிப்படுத்துகிறது. அரங்கும் விளையாட்டைப் போன்று 'செயலை' (Action) அடிப்படையாகக் கொண்டது. விளையாட்டுக்களும் அரங்கும் மனித முரண் நிலைகளின் பயனாக விளைந்தவைகள். விளையாட்டிலும், அரங்கிலும் ஈடுபடுவோர் வாழ்வின் சம்பவிப்புக்களை மீள நிகழ்த்தி தாம் விரும்பும் வாழ்வை சிருஷ்டித்து ஒரு வகையான 'விடுதலை' உணர்வைத் தரிசிக்கிறார்கள்.


பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான குலை குலையாய் முந்திரிக்காய விளையாடும் சிறுவர்கள்.

அரங்கும் விளையாட்டுக்களும் பண்பாட்டு உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளன. சமூகத்தின் கட்டமைப்பு (Social Stratification), உருவம், உள்ளடக்கம் ஆகியவற்றிற்கிடையிலான மோதல்கள் பண்பாட்டுக்கமைய வேறுபடுகின்றன. மனித விருப்புக்கள், தேவைகள் காரணமாகவே மோதல்கள் ஏற்படுகின்றன. இம் மோதலானது பலதரப்பட்டதாகவுள்ளது.

i. மனிதனோடு மனிதன் மோதுதல்
ii. மனிதன் தன்னுடன் மோதுதல்
iii. மனிதன் தன் சுற்றாடலுடன் மோதுதல்
iv. மனிதன் சமூகத்துடன் மோதுதல்
v. மனிதன் இயற்கையுடன் மோதுதல்

மேற்சொல்லப்பட்ட மோதல்கள் மனிதனால் மீளச்செய்யப்பட்டபோது அவை விளையாட்டாகவும், அரங்காகவும் பரிணமித்தன எனலாம். இரண்டிலும் நிகழ்த்துபவர்களும் பார்ப்பவர்களும் இருக்கிறார்கள். நிகழ்த்துபவனுக்குத் தான் செயற்படுவதால் எழுகின்ற மனக் கிளர்ச்சி நிலை, தனக்குக் கிடைக்கும் பார்ப்போனின் பாராட்டால் அகமகிழ்வாக பரிணமிக்கிறது எனலாம். விளையாட்டிலும் அரங்கிலும் பார்ப்போனின் ஈடுபாடும் திருப்தியும்கூட அற்புதமானது. பார்ப்பவர்களைக் கவரும் தன்மை இரண்டிலும் உண்டு. மனிதனது இயல்பான தன்னார்வ ஈடுபாட்டை உண்டு பண்ணுவதால் இரண்டிலும் மனவெழுச்சிக்கான வடிகால்கள் இருப்பதை இனங்காணலாம். இவை இரண்டும் வாழ்வை அவ்வாறே மீளப்படைக்காது கற்பனையைச் சேர்த்து புதியதொரு கதையைப் புனைந்து புனைவு மெய்மையான ஒன்றை சிருஷ்டிக்கின்றன.

வெறும் வெளி அசைவால் பல்வகைக் கோலங்களைப் பெற்றுக் கொள்கின்றன. ஒரு கரு அல்லது செய்தி அழகாகச் சட்டகமிடப்பட்டு நிபந்தனைகளுடன் கோர்க்கப்படுகிறது. இந்தக் கோர்வை ஒரு உச்சத்தை நோக்கி நகர்த்தப்படுகிறது. அதுவே வெற்றிக்கனியாகக் கருதப்படுகிறது. வெற்றிக் கனி கையில் கிடைத்ததும் மனம் துள்ள உடலும் துள்ளிக் குதித்து குதூகளிக்கிறது.

அரங்கு நான்கு பிரதான மூலங்களைக் கொண்டுள்ளது எனலாம்.

i. வெளி (Space)
ii. ஒலி (Sound)
iii. அசைவு (Action)
iv. மொழி (Language)

மிக அடிப்படையில் ஒரு சாதாரண செயல் பார்ப்போனுக்காக மீள நிகழ்த்தப்படுகின்ற போது அது ஆற்றுகையாகின்றது. இதற்குள் மீள நிகழ்த்தப்படுகின்ற ஒரு கதை, அதில் ஊடாடும் பாத்திரங்கள், பாத்திர ஊடாட்டத்திற்கான நிபந்தனைகள், பாடல்கள், உரையாடல்கள், கற்பனைச் சிருஷ்டிப்புக்கள், நிஜமும் புனைவும் கலந்த நிலைகள், வாழ்வோடு மிக நெருங்கி நின்று புரிந்து கொள்ளக் கூடியதான துலங்குதல் போன்ற பல பண்பு நிலைகளை ஆற்றுகையில் (Performance) காணமுடியும். மேற்சொன்ன அடிப்படைகளைக் கருத்தில் கொண்டு விளையாட்டுக்கள் எவ்வாறு ஒரு ஆற்றுகையாகின்றன, அதற்காக அவை கொண்டுள்ள அரங்கக் கூறுகள் எவை? அதனையே இங்கு பார்க்க விளைகின்றேன்.

யாழ். மாவட்டத்தில் கிட்டத்தட்ட எண்பது பாரம்பரிய விளையாட்டுக்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றை குழந்தைப் பருவ விளையாட்டுக்கள், சிறுவர் விளையாட்டுக்கள், வளர்ந்தோர் விளையாட்டுக்கள் என்று பிரதானமாக வகைப்படுத்திக் கொள்ள முடியும். இவற்றில் சிறுவர் விளையாட்டுக்களே அதிகமாகக் காணப்படுகின்றன. இந்த விளையாட்டுக்களை தனித்தனியாக விபரித்து ஆராய வேண்டும். விரிவஞ்சி பொதுப்படையாக ஆராய முற்படுகின்றேன்.

## விளையாட்டுக்களின் நாடகப் பாங்கான பெயர்கள்

சிறுவர்களின் விளையாட்டுக்களிலும் பெரியவர்களின் விளையாட்டுக்களிலும் அவற்றில் வரும் பிரதான பாத்திரங்களையும் செயல் அல்லது அசைவையும் அடிப்படையாகக் கொண்டு பெயர்கள் அமைந்திருப்பதைக் காணலாம். இங்கு சார்புநிலைப் பாத்திரங்கள் அதாவது நல்ல பண்புடைய பாத்திரங்கள், மனிதன் தான் விரும்பும் அல்லது தன்னை அதனுடன் அடையாளப்படுத்தும் பாத்திரம், இதனை நேர் பாத்திரமென்றும் குறிப்பிடலாம் (Positive Charactor) முக்கியம்பெறும். இந்தப் பாத்திரமே விளையாட்டின் இறுதியில் வெற்றி பெறும், அல்லது வெற்றி பெறவேண்டுமென்று பார்வையாளர்களால் விரும்பப்படும்.

அடுத்தது எதிர்நிலைப் பாத்திரங்கள். நல்ல பாத்திரங்களுக்கு எதிராக உள்ளவை. குறிப்பாக கூடாத/ கெட்ட பண்புகளைக் கொண்ட பாத்திரங்கள். இவை தோல்வியடைய வேண்டும் அல்லது அழிந்து போகவேண்டுமென்று விரும்பப்படும். எதிரிடையான பாத்திரங்களாக (Nagative Charactor) இதனைச் சுட்டுவர். இதன் ஆற்றலைவிடக் குறைந்த ஆற்றலுடைய நேர்ப்பாத்திரம் ஏய்ப்புக்காட்டி அல்லது தன் புத்திசாதுரியத்தால் கெட்ட பாத்திரத்தை வெல்வதாகக் காட்டப்படும். பலத்தால் வெல்வதாக அமைகின்ற பாத்திரங்களும் உண்டு.

1. கோழியும் பருந்தும்
2. பசுவும் புலியும்
3. கள்ளன் - பொலிஸ் போன்ற விளையாட்டுக்களை இவற்றுக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

அசைவுகளை அடிப்படையாகக் கொண்டும் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. விளையாட்டின் விளைவுகள்கூடப் பெயராகக் குறிப்பிடப்பட்டுள்ளன. போல்/பந்து எறிந்து பிடித்து எதிர் அணியில் உள்ளவரின் முதுகில் எறிகின்ற விளையாட்டுக்குப் பெயர் 'புளிச்சல்'. முதுகில் போல்/பந்து பட்டால் முதுகு 'புளிக்கும்'. அதனைச் சுட்டுவதாக இந்தப் பெயர் அமைந்துள்ளது. செயலை அடிப்படையாகக் கொண்டு பல விளையாட்டுக்கள் அமைந்துள்ளன. கோழி பற பற, எவடம் எவடம் புளியடி புளியடி, அடிச்சுப் பிடிச்சு, கிலுக்குப் பேணி, உருளைக் கிழங்குப் பிரட்டல், பூப்பறிக்க வருகின்றோம், நுள்ளுப் பிராண்டி கிள்ளுப்பிராண்டி, தாள தாள மயிலடிக்க, கருவாடு காயப்போடல், உப்பு விற்றல், ஆனை ஆனை, கைவீசம்மா, ஒருகுடம் தண்ணீர் வார்த்து என்பவற்றை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இதேபோல் விளையாட்டின் ஓசைப் பெறுமானத்தை அடிப்படையாகக் கொண்டும் விளையாட்டின் பெயர்கள் காணப்படுகின்றன. கொக்கரக்கோ, டிக் டிக், கீச்சு மாச்சு தம்பளம் என்பன அப்படிப்பட்டன.

கேள்வி கேட்டு விளையாடுகின்ற விளையாட்டுக்களில் கேள்வியே விளையாட்டின் பெயராக அமைந்திருப்பதைக் காணலாம். எது விளையாட்டில் பிரதானமாக அமைகிறதோ அதுவே பெயராகின்றது. ஆற்றுகையென்ற அடிப்படையில் நோக்கினால் பிரதான விடயம் (Main Subject) அல்லது கரு (Theme) தலைப்பாகின்றது. தலைப்பே விளையாட்டை விளக்கி விடுகின்றமையையும் நோக்கலாம். உதாரணமாக எங்கிருந்து வாரீ?, எவடம் எவடம்?, கப்பின் கப்பின் யார் கையில், என்ன குடம்?, ஆச்சி ஆச்சி என்னெனை தேடுறாய்?, டிக் டிக் யார் வந்தார்?

பிரதான பாத்திரங்கள் ஓசை நயத்துடன் இணைந்து விளையாட்டில் பெயராகி விடுகின்றன. இங்கு இப்பாத்திரங்கள் சம அந்தஸ்து நிலையுடையன. முன்பு குறிப்பிட்டது போல எதிர் பாத்திரம், நேர் பாத்திரம் என்ற அந்தஸ்து நிலை இல்லையெனலாம். உதாரணமாக கோழி கோட்டான், நாயும் இறைச்சியும், பழமும் பூவும் போன்ற விளையாட்டுக்களைக் குறிப்பிடலாம். மேற்குறிப்பிட்ட பெயர்கள் பாத்திரங்களாகி நின்று விளையாடும் விளையாட்டுக்களை அடிப்படையாகக் கொண்டமைகின்றன. இதனைவிட சடப்பொருட்களோடு தொடர்புபட்டு காணப்படும் விளையாட்டுக்கள் அதன் பெயர்களையும் கோடு கீறி விளையாடும் விளையாட்டுக்கள் கோட்டமைப்பையும் அடிப்படையாகக் கொண்டமைகின்றன.

## குழந்தைப் பருவ விளையாட்டுக்களில் காணப்படும் பாவனை செய்யும் பண்பு

குழந்தை பிறப்பில் இருந்து அதன் ஒவ்வொரு கட்ட வளர்ச்சிக்கும் துணை நிற்பதாக விளையாட்டுக்களை பண்பாடு உருவாக்கி ஊடுகடத்தி வருகின்றது. தாய், தந்தை, மாமன், பேரன், பேத்தி என்று பலரும் பச்சிளம் பாலகனுடன் விளையாடுகிறார்கள். அவ்வாறு விளையாடும்போது குழந்தையை வெவ்வேறு பொருளாக, மிருகங்களாக, பெரியவர்களாகக் கருதி அவ்வாறு பாவனை செய்து குழந்தையை அசையச் செய்கிறார்கள். குழந்தை தன்னை அந்தப் பாத்திரமாகக் கருதுவதில்லை. பிள்ளையின் அசைவு ஒவ்வொன்றையும் வேறொரு பாத்திரத்தில் (Charactor) ஏற்றி அதனைப் பார்த்து பெரியவர்கள் மகிழ்கின்றார்கள். இந்த மாயை (Ilusion) முக்கியமானது. வேடப்புனைவு, காட்சியமைப்பு எதுவும் இல்லாது ஒரு புனைவுக்களம் உருவாக்கப்படுவதை இங்கு அவதானிக்க முடிகிறது. உதாரணமாக, பிள்ளையை யானையாகக் கருதி யானை அசைவது போல பிள்ளை அசைவதற்காக ஒரு பாடலைப் பாடி யானையொன்றை அசைந்து வரச் செய்கின்றதை இங்கு சுட்டிக் காட்டலாம். தாய் அல்லது பேத்தியார் பிள்ளையை நிலத்தில் இருத்தி,

"ஆனையலையிது அலையிது அலையிது
வாழைப்பழத்துக்கும் பிட்டுக்கும் அலையிது
ஆனையலையிது அலையிது அலையிது
ஆனையலையிது அலையிது அலையிது!"

"ஆனை ஆனை அசைந்தாடும் ஆனை
ஐந்தாறு வீதிக்குப் போய்வரும் ஆனை
உன்னானை என்னானை நான்
விளையாடும் எங்க வீட்டு மதயானை!" என்று

பாட பிள்ளை இருந்தபடி முன்னும் பின்னும் உடம்பை அசைக்கும். இவ்வாறு பல உதாரணங்களைக் குறிப்பிடமுடியும். பிள்ளையை உப்பு மூட்டையாகக் கருதி

முதுகில் சுமந்து சென்று உப்பு விக்கின்றபோது பிள்ளையும் பெற்றோரும் உளம் பூரித்து மகிழ்கிறார் கள். இங்கு பிள்ளை உப்பு மூட்டையாகப் பாவனை செய்யப்படுகிறது. பிள்ளையைப் பெரியவனாக, கடைக் குப் போபவனாகப் பாவனை செய்து பாடுகின்ற பாட்டு

"கைவீசம்மா, கைவீசு
கடைக்குப் போகலாம் கைவீசு,
மிட்டாய் வாங்கலாம் கைவீசு,
வடிவாய்த் தின்னலாம் கைவீசு"

என்று காணப்படுகிறது. இதேபோல் தண்ணீர் இறைக் கும் பட்டையை குழந்தையாகப் பாவனை செய்து குழந்தையின் கைகளையும் கால்களையும் இருவர் பிடித்து பட்டையில் தண்ணீர் அள்ளி கீரைக்கு இறைப் பதாகப் பாவனை செய்கிறார்கள். இப்போதும் ஒரு பாடல்.

"கீரைக்குத் தண்ணி இறைக்கிறம் இறைக்கிறம்
கீரைக்கு தண்ணி இறை தண்ணி இறைக்கிறம்"

குழந்தை விளையாட்டுக்கள் அனைத்தும் ஒரே வகை யான தாள அமைவுப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. தாளத்திற்கு அசைதல் என்பது உடலையும் மனத்தையும் சீரான ஒருங்கிணைவான அசைவியக்கத்துக்கு கொண்டு வருவதாகும். இதனால் இந்த வகையான அசைவுகளும் பாடல்களும் பிள்ளை யின் சீர் இயக்க நிலைக்கு உதவிபுரிகின்றன.

பிள்ளைக்கு வாழ்க்கைத் தத்துவத்தை விளக்குவதாக பிள்ளை நடக்க ஆரம்பிக்கின்றபோது அதனது ஒவ் வொரு பருவங்களுக்கும் ஏற்ற மாற்றத்தை குறிப்பிட்டு அவற்றைப் பிள்ளை பாவனை செய்வதாகக் கருது கிறார்கள். இதன்போதும்கூட பாடல் காணப்படுகிறது.

"தத்தக்க பித்தக்க நாலு கால்
தான் நடந்தால் இரண்டு கால்
முற்றிப் பழுத்தால் மூன்று கால்
நடந்து போக ஆறு கால்
தான் அறிந்தால் பத்துக்கால்"

பிள்ளையின் கையை பூவாகப் பாவனை செய்து, பூ அசைவது போல பிள்ளை கையை அசைப்பதைக் கண்டு மகிழ்கிறார்கள்.

"தா பூ தாமரைப் பூ
தாயார் வீட்டு மல்லிகைப் பூ
இது என்ன பூ? சிரிப்பு பூ"

பிள்ளையின் உள்ளங்கையில் கீரை கடைவதும் விரல் கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு கறிகளாக கருதிக் கொள்வதும் நண்டு ஊருவதாகப் பாவனை செய்து பிள்ளைக்கு சிரிப்பு மூட்டுவதும்கூட ஒருவகையில் பாவனை பண்ணும் முறையாகவே காணப்படுகிறது.

"சின்னான் சின்னிவிரல்
சித்தரிப்பு மாலை விரல்
வாழை நெடுங்காற்று
ஒன்றும் தெரியாத ஊமைப்
பிள்ளைக்கு
கீரை கடைந்து
நண்டுருது நரியூருது"

## பாத்திரமேற்று விளையாடுதல்

பாரம்பரிய விளையாட்டுக்களிலும் பாத்திரம் ஏற்று ஆடுகிறார்கள். ஆனால் இங்கு ஏற்றுக் கொள்ளப்படும் பாத்திரங்கள், அந்தப் பாத்திரங்களின் பண்பு நிலைக்கு ஏற்ற உடல் அசைவு, குரல், வேடப்புனைவுகளை மேற்கொள்வதில்லை. நாடகப்பாங்கான பாத்திரங் களை (Dramatic Charactors) காணமுடிவதில்லை. மாறாக மனிதர்களாகவே நிற்கிறார்கள். அவர்களுக்கு விளை யாடும் களங்களில் மட்டும் புலி, நரி, பசு, கோழி, பருந்து, கோட்டான் என்று பெயர் சூட்டப்படுகின்றது. இந்தப் பெயர்களில் மனித இயல்போடு நிற்கிறார்கள். சூட்டப்படும் பெயர்களின் பண்புகளை உள்வாங்கிக் கொண்டால் இந்த விளையாட்டுக்கள் நாடக ஆற்றுகை களாக மாற்றம் பெற்றுவிடும். இங்கு அவ்வாறு நடப்ப தில்லை.

பசுவும் புலியும், கோழியும் கோட்டானும், கோழியும் பருந்தும், கள்ளன் பொலிஸ், கோழி பற பற, பழமும் பூவும், உருளைக்கிழங்குப் பிரட்டல், கருவாடு காயப் போடுதல் போன்ற பல விளையாட்டுக்களை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இங்கு பசுவும் புலியும் விளையாட்டை எடுத்து நோக்குவோம்.

சிறுவர்கள் வட்டமாகக் கைகோர்த்து நிற்பர். இவர் களை வேலியென்று கருதிக் கொள்வார்கள். வட்ட மாகவுள்ள வேலிக்குள் பசு நிற்கும் இதற்காக ஒரு சிறுவன் விடப்படுவான். வேலிக்கு வெளியில் புலியாக ஒரு சிறுவன் நிற்பான். புலி பசு நிற்பதை முகர்ந்து அறிந்து கொள்ளும். வேலியைச் சுற்றிச் சுற்றி வந்து பசுவைத் தேடும். வேலிக்குள்ளால் செல்ல முடியாத தால் வேலியைக் கேட்டுப் பார்க்கும், பசு நிற்குதோ? என்று. வேலி இல்லையென்று மறுக்க, வேலிக்குள் புல்லுக்கட்டொன்றை போடுவதாகப் புலி பாவனை செய்யும் புல்லைக் கண்டு மாடு ஓடிவர புலி பாயும். வேலிவிடாது இவ்வாறாக விளையாட்டு நகர்கிறது. இதில் ஒரு முரண்நிலையும் பாத்திரங்களும் உரை யாடல்களும் தெளிவாகக் காணப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| புலி | : | சங்கிலி புங்கிலி கதவத் திற |
| வேலி | : | நான் மாட்டன் தேங்காய்ப் புலி |
| புலி | : | பசு மாட்டைக் கண்டீங்களா? |
| வேலி | : | இல்லை! |
| புலி | : | பால் மணக்குது |
| வேலி | : | பக்கத்து வீட்டில் |

புலி, பசு, வேலி பாத்திரங்கள் ஒரு முரண் நிலைச் சூழலைப் படைத்துவிடுகின்றன. இது சிறந்ததொரு நாடகப் பாங்கான விளையாட்டாகும். இதேபோன்று பாரம்பரிய விளையாட்டுக்கள் பலவற்றில் முரண் விருத்திக்கான உரையாடல்களும் பாத்திர ஊடாட்

டங்களும் அசைவியக்கங்களும் காணப்படுகின்றன. உரையாடல்கள், பாடல்களாக, பாடல் தர்க்கங்களாக அமைந்திருக்கின்றன. பாடல்கள் தாள அமைவுக்கு ஏற்ற சொற்கட்டுக்களைக் கொண்டமைவதையும் காணமுடிகின்றது. பாடல்களே விளையாட்டின் தாள கதியையும் நிர்ணயிக்கின்றன.

### புனைவு வெளியை சிருஷ்டித்தல்

அரங்கில் வெறும் வெளி ஆற்றுகை வெளியாக்கப்படுகின்றது. குறிப்பாக கற்பனை சார்ந்த அசைவியக்கங்கள், செயல்கள் ஊடாக, புனைவு வெளியை தரிசிக்க முடியும். குளக்கரை விளையாட்டை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். சிறுவர்கள் வட்டமாக நிற்கிறார்கள். வட்டத்தின் உட்பகுதி குளம் என்றும் வெளிப்பகுதி கரையென்றும் கற்பனை பண்ணப்பட்டு ஒருவர் குளம் - கரை, குளம் - கரை என்று கட்டளையிட பிள்ளைகள் அதற்கேற்ப அசைவதாக விளையாட்டு அமைகிறது. இங்கு வெறும் வெளி குளமாகவும் அதன் கரையாகவும் ஆகிவிடுவதை உணரமுடியும். இதேபோல உருளைக்கிழங்குப் பிரட்டல் விளையாட்டில் வெறும் வெளி கறிவைக்கும் சட்டியாகவும் உருளைக் கிழங்குகளாக விளையாடுவோரும் உருவகிக்கப்படுகின்றனர். உருளைக் கிழங்கு அடிப்பிடித்து விடாமல் மிரட்டுவதாகவும் விளையாட்டு அமைகின்றன.

### ஒரு பொருள் இன்னொரு பொருளாக பாவனை பண்ணப்படுதல்

விளையாட்டில் சடப்பொருட்களும், உடல் உறுப்புக்களும் மனிதர்களும் வெவ்வேறு பொருட்களாகப் பாவனை செய்யப்படுகின்றன. இங்கு ஒன்று இன்னொன்றாகுதல் என்ற பண்பு வருகிறது. இது அரங்கிற்கேகுரிய விசேடமான பண்பாகும். மனத்திரையில் உருவங்களைப் படைத்து அவற்றை ஊடாட விடுகின்ற அரங்கப் பண்பையும் இங்கு காணமுடிகின்றது. நாயும் இறைச்சியும் விளையாட்டில் ஒரு குழைக் கொப்பு, இறைச்சித் துண்டாகக் கருதப்படுகிறது. அதனை எடுக்க நாய்கள் சண்டையிடுவதாகக் கற்பனை செய்யப்படுவதால் அந்த விளையாட்டு விறுவிறுப்பாக நடைபெறுகின்றது எனலாம்.

கருவாடு விளையாட்டில் நீட்டியிருக்கும் கால்களை கருவாடாகக் கருதுகிறார்கள். கால்களை மடக்கினால் அவை ஒவ்வொன்றும் காணாமல் போவதாகக் கருதிக்கொள்கிறார்கள். அழுகல் பூசனிக்காய், விளையாட்டில் விளையாடுவோர் சப்பாணி கட்டி இருந்து தமது கால் பெருவிரல்களைப் பிடித்திருப்பர். அவ்வாறு பிடித்திருக்கும் போது முற்றிய பூசணியாகவும் தூக்கிச் செல்லும்போது கைப்பிடி விலகினால் அழுகிய பூசனியாகவும் குறிப்பிடப்படுகின்றது.

பூப்பறிக்க வருகிறோம் விளையாட்டில் பிள்ளைகள் எதிர்எதிர் நிற்பவர்கள் பூக்களாகக் கருதப்படுகிறார்கள். பூக்களைப் பறிப்பதற்கு வருவதாகவும் பறித்தெடுப்பதாகவும் செயல்கள் அமைகின்றன. என்ன குடம் விளையாட்டில் பொத்திய கை குடமாகக் கருதப்பட்டு என்ன குடம் என்று கேட்கப்படும். மோர்க்குடம், பால் குடம், தயிர்க்குடமென்று பாவனை பண்ணப்படுகிறது. மாங்கொட்டை விளையாட்டில் பொத்திய கை மாங்கொட்டையாக கொழுக்கட்டையாகப் பாவனை பண்ணப்பட்டு விளையாடப்படுகிறது. இதேபோல் ஒரு குடம் தண்ணீர் வார்த்து விளையாட்டிலும் அவ்வாறே கருதப்படுவதை காணலாம். கோழிக்காய் விளையாட்டில் ஒரு சிரட்டைத் துண்டு கோழிக்காயாகவும் கொத்தாளங்காயாகவும் கருதப்பட்டு எறிந்து ஏந்தி விளையாடப்படுகிறது. விளையாடும் போது ஒரு பொருளை வேறொன்றாக கற்பனை அல்லது பாவனை பண்ணுதல், விளையாட்டு முடிவில் வெறும் பொருளாகுதல் என்பன அரங்கிற்குரிய பண்புகளாகும்.

### உரையாடல்கள்

பாத்திரங்கள் நிர்ணயம் செய்யப்படுதலும் சூழ்நிலை உருவாக்கப்படுதலும் நடைபெற்ற பின் பாத்திரங்களுக்கிடையில் உரையாடல்கள் நடைபெறுகின்றன. உரையாடல்கள் ஒரு முரண்நிலைக்கு இட்டுச் சென்று பின் செயலுக்கு சென்று செயலில் இருந்து வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்பட்டு முடிவடைகிறது. இது விளையாட்டில் மீள மீள நிகழ்கிறது. இதுவே மகிழ்ச்சியை ஊட்டுவதாகவும் வேகத்தையும் ஆர்வத்தையும் தூண்டுவதாகவும் அமைகின்றது. இந்த உரையாடல்கள் பாடல்களுக்குள் அடங்கிவிடுவதும் உண்டு.

கூத்துக்களில் காணப்படும் தர்க்கப்பாடல் அமைப்பு அல்லது வினாவிடை அமைப்பிலான பாடல்கள், பாத்திரங்களுக்கிடையிலான உரையாடலாகக் காணப்படுகின்றன. பசுவும் புலியும் விளையாட்டில், புலிக்கும் வேலிக்கும் இடையில் உரையாடல் காணப்படுகின்றது. பூப்பறிக்க வருகிறோமில் ஒருவகை பாடல் சார்ந்த உரையாடல் காணப்படுகின்றது. ஆச்சி ஆச்சி என்னெனை தேடுறாய் விளையாட்டில் வினா விடைப் பாங்கிலான உரையாடலைக் காணமுடியும். 'டிக் டிக் யார் வந்தான்?' அரசன் வந்தான் விளையாட்டிலும் வினா விடைப்பாங்கான உரையாடல்கள் காணப்படுகின்றன. எவடம் எவடம், சங்கிலி புங்கிலி கதவத்திற, கருவாடு, எங்கிருந்து வாரீர்கள் விளையாட்டுக்களிலும் கேள்வியும் பதிலுமான உரையாடல் காணப்படுகின்றன. இங்கு, ஒரு பாத்திரத்திற்கும் குழுவுக்குமிடையிலான உரையாடல்களையே அதிகம் உணரலாம்.

### அசைவியக்கம்

அரங்கில் குறிப்பிடப்படும் அரிஸ்ரோட்டலின் வரைவிலக்கணத்திற்கு அமைவாக, நாடகக் கட்டமைப்புக்கு ஏற்ப பாரம்பரிய விளையாட்டுக்களின் அசைவியக்கத்தையும் உணர முடியும். ஆரம்பம், முரண்நிலை, முரண்நிலையில் இருந்து உச்சத்தை நோக்கி வளர்ந்து செல்லுதல், முடிவு, வீழ்ச்சி என்ற பண்பை விளையாட்டுக்களிலும் காணமுடியும். ஓடுதல், துரத்திப்பிடித்தல் என்பன உச்சமான செயல் இயக்கமாகக் காணப்படுவதோடு மீள மீளச் செய்தலும் இதன் பிரதானமான செயல் இயக்கமாகவுள்ளது. இது கூத்தின் பிரதானமான அறிக்கை முறைமையாகும்.

**- தே.தேவானந்த் -**

அரங்க வரலாற்றில் மறைந்து கிடப்பவர்கள் 6

# 26 நாயகர்களுக்கு ஒரேயொரு நாயகி!

- மகா -

எல்லோராலும் கலைஞனாகமுடியாது. ஆனால் எல்லோராலும் கலையை ரசிக்க முடியும். அதனால் தான் ஒரு பாத்திரத்தை ஏற்கும் கலைஞன் அப்பாத்திரத்தை விரும்புகிறானோ இல்லையோ பார்வையாளர்களும் இரசிகர்களும் அதனை விரும்பிவிடும் சந்தர்ப்பங்கள் பலவுண்டு. ''இதுதான் நல்ல பொருத்தம், உன்னை விட வேற எவராலயும் இதைச் செய்ய முடியாது'' என்று ரசிகர்கள் முத்திரை குத்திவிடுவார்கள். அவர்களது பாத்திரத்திற்கேற்ற பட்டமும் வைத்து விடுவார்கள். இதனால் அக்கலைஞனுக்கும் பாத்திரத் தின் மேல் தீராக் காதல் வந்துவிடும்.

சில கலைஞர்கள் தாமாகவே விரும்பி சில பாத்திரங்களை ஏற்பதுமுண்டு. இருப்பினும் எல்லாப் பாத்திரங்களையும் ஏற்றுச் செய்யக்கூடிய வல்லமை பெற்ற கலைஞர்கள் ஒரு சிலர்தான். சில கலைஞர்கள் ஒரு வகைப் பாத்திரத்தையே தொடர்ந்து செய்து தமது திறமையை வெளிப்படுத்தி நிற்பர். அந்த ஒரு பாத்திரத்தையே மென்மேலும் வளர்த்துச் செல்வர். எவரும் அந்த இடத்தைப் பிடிக்க முடியாத வகையில் தமக்கென ஒரு பாணியை அமைத்து மக்கள் மனங்களில் நீங்கா இடம் பிடித்து விடுவார்கள். எந்த நாடகங்கள் என்றாலும் அவர்களுக்காக அந்த ஒரு இடம் காத்திருக்கும்.

அவ்வாறான ஒரு கலைஞர்தான் வடிவேலு செல்வரட்ணம் (செல்வம்). இவர் நடிகமணி வி.வைரமுத்துவுடன் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு, வவுனியா, கொழும்பு, கண்டி, கம்பகா போன்ற இலங்கையின் பல பாகங்களிலும் பெண் பாத்திரத்திரம் ஏற்று நடித்து தனக்கென ஒரு இடத்தைப் பிடித்த சாதனையாளர்.

ஈழத்திலே நாடகக் கலைஞர்கள் செறிந்து வாழ்கின்ற அரியாலைக் கிராமத்தில் 26.01.1947 அன்று பிறந்த வர். 1954 ஆம் ஆண்டு கன்னிக் கோட்டை எனும் நாடகத்தில் மணி மாறன் என்னும் குழந்தையாக நடித் தமையே இவரது முதல் அனுபவம். இவர் கல்வி கற்ற காலத்திலேயே யா. அரியாலை ஆனந்தா மகாவித்தியாலயம், யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயம் என்பன இவரது இசை வளர்ச்சிக்குப் பெரும். ஊக்கமளித்தன.



அரிச்சந்திர மயானகாண்டத்தில் செல்வம் தோன்றும் காட்சி

இவர் பாடசாலையில் 'உழவர்' என்ற சமூக நாடகத்தில் பெண் பாத்திரம் ஏற்று நடித்தமை பெரும் வரவேற்பைப் பெற்றது. அதிலிருந்து கலைமகள் நாடக சபாவில் இணைந்து பெண் பாத்திரங்கள் ஏற்றார். அந்த நடிப்பு நீண்டு கொண்டே சென்றது. இவர் பெண் வேடமிட்டால் குரலாலும் நளினத்தாலும் உணர்வாலும் நடிப்பாலும் ஒரு பெண்ணாக மாறிய பின்தான் மேடையில் ஏறுவார். அசல் பெண்ணாகவே மேடை யில் தோன்றுவார். ''செல்வத்தைப் போல் ஒரு நாடகக் கலைஞன் இருக்க ஏலாது. பெண் பாத்திரம் எண்டால் செல்வம்தான். முந்திப் பொம்பிளைக்கு நடிச்ச ஆக்களைப் பாத்திருக்கிறன். நாடகம் முடிஞ்சாப்பிறகும் நடக்கேக்க அசையேக்க பொம்பிளைக்குரிய நளினங்களோட தான் இருப் பினம். ஆனா செல்வம் அப்பிடியில்லை. நாடகம் முடிஞ்சாப்பிறகு எல்லாத்தையும் மறந்திடுவான்'' என்று அவரது உறவுக்காரரான கனகரட்ணம் குறிப்பிட்டார்.



செல்வம்

பெண்கள் மேடையேறி நடிப்பதை சமூகம் அனுமதிக்காத காலம் அது. பெண் பாத்திரத்தில் திறமை பெற்ற செல்வரட்ணம் அரிச்சந்திர மயான காண்டத்தில் மட் டும் 26 கதாநாயகர்களுடன் கதாநாயகியாக நடித்துச் சாதனை படைத்துள்ளார்.

அரங்க பாவாற்றில் மறைந்து கிடப்பவர்கள்: நடிகர் செல்வம் பற்றி...

இவர் தனது கலை ஆர்வத்தை கூடுதலாக இசை நாடகத்திலேயே காட்டி வந்துள்ளார். அரிச்சந்திராவில் சந்திரமதியாக, நல்லதங்காளில் நல்லதங் காளாக, ஞான சௌவுந்தரியில் ஞான சௌந்தரியாக, ஸ்ரீ வள்ளியில் வள்ளியாக, பவளக் கொடியில் பவளக் கொடி யாக, கண்ணகியில் கண்ணகியாக என 16 இசை நாடகங்களில் நடித்துள்ளார். இதைவிடப் பாண்டியன் வீழ்ச்சி, சகோதர விரோதி, கிருஷ்ணா அர்ச்சுனா, பதவி மோகம், அலாவுதீன், பாண்டிய மகுடம், கொஞ்சும் குமரி முதலிய நாடகங்களிலும் பங்குகொண்டு தமது கலை அனுபவத்தைப் பெருக்கிக் கொண்டார். நடிகமணி வைரமுத்துவின் காலத்திலே தொடங்கிய இவரது கலையார்வம் இசை நாடக வளர்ச்சிக்குப் பெரும் உறுதுணையாக இருந்தது.

இவரது கலையாற்றல் இவரை ஒரு தொழில்முறைக்

கலைஞனாக்கியது. மக்கள் செல்வாக்கு நிரம்பி வழிந்தது. ஒரு மாதத்தில் 23 தடவைகள் மேடையேறி நிறைந்த வருமானத்தைப் பெற்ற ஒரு ஒப்பற்ற கலைஞர் இவர். இது பற்றி அவரது உறவினர் ஒருவர் தெரிவிக்கும்போது. "செல்வத்துக்கு ஒரு மேடைக்கு 2000, 3000 எண்டு ரேற், நல்ல உழைப்பு. ஒரே நித்திரை முழிப்பு. இசை நாடகம் செய்யிறது கொஞ்சம் கஷ்ரம். நிறையப் பாட்டுப் படிக்க வேணும். அடுத்தடுத்து நாடகம் செய்யத் தொண்டை அடைக்கும். ஆனால் செல்வத்துக்கு ஒருநாளும் தொண்டை அடைக்காது. கதைக்கேக்க அடைச்சாலும் பாடேக்க நல்லா குரல் எடுத்துப் பாடுவான். அதால எப்ப ஆர் கேட்டாலும் ஓமெண்டு நடிப்பான்" –என்றார்.



ஸ்ரீ வள்ளி நாடகத்தில் வள்ளியாகத் தோன்றும் செல்வம்.

செல்வம் நடிகனாக மட்டுமல்லாமல் ஒரு நெறியாளனாகவும் இருந்து வந்துள்ளார். இவர் பாடசாலை நிகழ்வுகளுக்காக ஆசிரியர், மாணவர்களுக்கு சத்தியவான் சாவித்திரி, பூம்புகார், ஞானசௌந்தரி முதலிய இசை நாடகங்களைப் பழக்கியிருக்கிறார். தனியார் கல்வி நிறுவனங்களின் விழாக்களுக்காகவும் இவர் சில நாடகங்களைத் தயாரித்திருக்கிறார்.

இவர் இலங்கையில் தயாரிக்கப்பட்ட நிர்மலா என்ற திரைப்படத்திலும் நடிகமணி வி.வைரமுத்துவுடன் இணைந்து 25 நிமிடக் காட்சியில் நடித்துள்ளார். இவரது கலைச் சேவையைப் பாராட்டி பட்டங்கள் பரிசில்கள், கௌரவிப்புக்கள், சான்றிதழ்கள் என ஏராளமாக வழங்கப்பட்டுள்ளன. 1969 இல் இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனமும் 1991இல் கம்பன் கழகமும் இவரைக் கௌரவித்துள்ளன. 1976இல் அகில இலங்கை ரீதியிலும் 1994இல் அரியாலை சுதேச பவள விழாவிலும் பெண் பாத்திரம் ஏற்று நடித்தமையால் பாராட்டுச் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 1980இல் கரவெட்டி. காரையம்பதிக் கலைக் கூடம் இவரைப் பாராட்டி நடிகக் கலாமணி என்னும் பட்டத்தையும் வழங்கிக் கௌரவித்தது.

பெண் பாத்திரமேற்பதில் அழியாப் புகழ்பெற்ற செல்வரட்ணம், கலைக்காக் கடுமையாக உழைத்து தன் வாழ்க்கையையே அர்பணித்துள்ளார். நோய் அவரைத் தாக்கி வாட வைத்துவிட்டது. அதனால் சிகிச்சை பெற ஜேர்மன் சென்றவர் நாடக உலகத்தை ஏமாற்றிவிட்டு அப்படியே சென்றுவிட்டார். மீண்டும் திரும்பி வரவேயில்லை. அவரது இழப்பு ஈழ நாடக உலகில் என்றும் ஈடுசெய்ய முடியாதது. பெண்கள் மேடையேறாத காலத்தில் மேடையில் பெண் பாத்திரங்களுக்கு உயிர்கொடுத்து முடிசூடாச் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்த செல்வம் இன்று எம்மத்தியில் இல்லை என்றாலும் அவர் விட்டுச்சென்ற போற்றற்குரிய கலையை கலையுலகம் என்றும் நினைவுகூரும். ஈழத் தமிழ் நாடக உலகில் அவருக்கு என்றும் அழியாப் புகழ் நிரந்தரமாயிருக்கும். □

# கற்றலை நாடகம் மூலம் மகிழ்ச்சிகரமாக்க முடியும்

## கல்வியியல் கல்லூரி பீடாதிபதி உரை

கற்றலை நாடகம் மூலம் மகிழ்ச்சிகரமாக்க முடியும் என்று தெரிவித்தார் யாழ். தேசிய கல்வியல் கல்லூரி பீடாதிபதி திரு. யோகநாதன். கல்லூரியில் இடம்பெற்ற சிறுவர் நாடக விழாவில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-


நாடக ஆற்றுகை உலகலாவிய ரீதியில் பழைமையானதும் உயர்வானதுமாக உள்ளது. சிறுவர் கல்வித்துறையில் இன்று மிகவும் வலிமைமிக்க சாதனமாக சிறுவர் நாடகங்கள் விளங்குகின்றன. நாடகங்களின் வாயிலாகத் தூண்டப் பெறும் மன எழுச்சிகளையும் நாடக அசைவுகளினூடாகக் கிடைக்கும் உள அசைவுகளையும் சிறார்கள் அனுபவிக்கிறார்கள். பாத்திரங்களுடன் ஒன்றிணைந்து கற்பனை இன்பத்தையும் எளிமையான சீராக்கங்களையும் அனுபவிக்கின்றார்கள் சமூகமயமாக்கல் செயற்பாட்டிலும் அறிக்கைக் கோலங்களின் வளர்ச்சியிலும் சிறுவர் நாடகங்கள் நேர்விசைகளை ஏற்படுத்துகின்றன.

சிறுவர் நாடகக் கதைப்புலத்தில் நிகழும் சிறிய சிறிய நிகழ்வுகள்கூட சிறுவர்களிடத்தே பெரிய குதூகலத்தைத் தூண்டும். சிறிய உள்ளீடுகளுடன் பெரிய துலங்கலை ஏற்படுத்தும் உள நடவடிக்கையாக நாடகங்கள் அமைகின்றன. மேலும் இந்நாடகங்களில் காணும் மிகப்பலம் பொருந்திய பரிமாணம் விலங்குகளும் பறவைகளும் மரங்களும் செடிகளும் கொடி களும் பேசுவதாகும். தமது இயல்புகளைக் கொண்டே சிறுவர்கள் சூழலை மதிப்பிடமுயலும் செயற்பாடுகளில் இப்பேச்சு ஆழ்ந்த உளஈடுபாட்டை ஏற்படுத்துகின்றது.

நாடகக் கலையின் சிறப்பியல்புகளில் முக்கியமானது அது பார்வையாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதாகும். பார்வையாளர் இல்லாவிடின் நாடகம் இல்லை. அது அவைக் காற்றுகைக் கலை அல்லது ஆற்றுகைக் கலை (Performing art) என அழைக்கப்படுகின்றது. நடிகர் பார்வையாளர் சந்திப்புத்தான் இக்கலை உருவாகுவதற்கான மையப்புள்ளி. நாடகக் கலை ஏனைய கலைகளைவிட வித்தியாசமான ஒன்று. சுவைபடவருவனவற்றையெல்லாம் ஓரிடத்துத் தொகுத்துக் கூறும் கலை இது. அத்தோடு ஓவியம், சிற்பம், இசை, நடனம், ஒப்பனை, வேடஉடை என அனைத்துக் கலைகளும் சங்கமமாகும் எல்லையாகவும் இது உள்ளதால் மிகவும் சக்தி வாய்ந்த கலையாகவுள்ளது.

உலகமே நாடக மேடை. ஆண்களும் பெண்களும் அதில் நடிக்கும் நடிகர்கள் என்றுரைத்தார் உலக நாடகவியல் அறிஞர் வில்லியம் ஷேக்ஸ்பியர். நாடகத்தைப் பார்க்க விரும்பாதவர் எவரும் இல்லை. அதில் பங்குகொள்ள பார்வையாளராக இருக்க ஒவ்வொருவரும் விரும்புவர். நாடகத்தில் பங்குகொள்ளக் கிடைக்கும் அனுபவம் மனிதர்களின் மன இறுக்கங்களைக் குறைத்து அவர்களைத் தளர் நிலைக்குக் கொண்டு வருகின்றது. கண நேரத்துள் கோபம், பயம், இரக்கம், அழுகை, சிரிப்பு, அருவருப்பு எனப் பல்வேறு உணர்வுகளை அக்கலை ஏற்படுத்திவிடுகின்றது. அது காட் டும் காட்சிகளில் நாம் நம்மைக் காண்கின்றோம். ஒரு சக்திமிக்க இயங்கும் கலையாக (Dynamic art) நாடகக் கலை மிளிர்கின்றது. எனவே இதனைக் கொண்டு இயல்பாகக் கற்றலை இளம் சிறார்களிடையே ஏற்படுத்த முடியும். கற்றலை நாடகம் மூலம் மகிழ்ச்சிகரமாக்க முடியும். அதற்கான மேலும் பல புதிய நுட்பங்களையும் சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்த வேண்டியுள்ளது – என்றார். □

# நாடகத்தின் வீழ்ச்சிக்கு ரசிகர்கள்தான் காரணம்!



சண்முகம் புஷ்பராஜன்

யாழ்ப்பாணத்தில் ஏட்டிக்குப் போட்டியாக நாடகங்கள் நடந்து கொண்டிருந்த காலத்தில் நாடகம் செய்ய ஆரம்பித்த வர்தான் சண்முகம் புஸ்பராஜன். 1950இல் பிறந்த அவருக்கு இப்போது வயது 57. கலைக்குப் பேர்போன அரியாலை அவரது சொந்த ஊர். 1978இல் சிறந்த கதாசிரியருக்கான விருதைப் பெற்றிருக்கிறார். அவர் ஒரு இலக்கிய கர்த்தாவும் கூட. சிறந்த காசிரியராக மட்டும் இல்லாமல் நெறியாளராகவும் நடிகராகவும் தன்னை வெளிப்படுத்தியுள்ளார். சமூக நாடகங்களில்தான் இவரது ஈடுபாடு அதிகமாக இருந்திருக்கின்றது. கூத்தரங்கத்திற்காக அவரைச் சந்திகக் கேட்டபோது மகிழ்ச்சியுடன் ஒத்துக்கொண்டு உரையாடினார்.

***கேள்வி:*** நாடகத்துறையில் நீண்டகாலமாகப் பணியாற்றி வரும் நீங்கள் எப்படி அத்துறைக்குள் குறிப்பாக கதாசிரியராக உள்வாங்கப்பட்டீர்கள்?

***பதில்:*** இசை நாடகங்கள் இசையோடு கூடிய கதைகள் கலையம்சம் பொருந்திய படங்கள் நிறையப் பார்ப்பேன். அவற்றால் கவரப்பட்டு சின்ன வயதிலிருந்தே அதுபோன்ற நாடகங்கள் எழுதவேண்டும் என்று விரும்பினேன். அரியாலை பொதுவாக நாடகக் கலைஞர்கள் வாழ்கிற இடம். என்றாலும் நாங்கள் இருப்பது ஒரு தனித்த பகுதி. எங்களுக்கும் கலைஞர்களுக்கும் இடையில் அவ்வளவு நெருக்கம் இருந்ததில்லை.

**சண்முகம் புஸ்பராஜனுடன் ஒரு சந்திப்பு**

அவர்கள் தங்களுடைய ஆட்கள் என்று சொல்லி மரபு வழியாகத் தாங்கள் மட்டுமே நாடகம் பழகிறதும் செய்யிறதுமா இருந்தினம். நாங்கள் விரும்பிப் போனாலும் சேர்க்கமாட்டினம். அதால என்னுடைய மனதில ஒரு வைராக்கியம் வந்தது. நானும் நாடகம் செய்ய வேணும் எண்டு. அப்பிடித்தான் ஆரம்பிச்சன். எங்களாலையும் முடியும் என்று நிரூபிச்சுக் காட்டினன். நானே நாடகம் எழுதி நானே தயாரிச்சன். நிறைய நாடகங்கள் செய்தன். யாழ்ப்பாணத்தில பின்தங்கிய நிலையில் இருக்கிற சமூதாயத்தில் இருந்தும் கலைஞர்கள் பிறப்பெடுக்க முடியும் என்று காட்டினன். முதலல்ல பத்திரிகைகளுக்கு கதை எழுதினன். அதற்குப் பிறகுதான் நாடகத்திற்குள்ளே வந்தேன்.

***கேள்வி:*** நாடகம் போடும்போது நிறையத் தடைகள் சவால்கள் வந்திருக்குமே! எப்பிடிச் சமாளித்தீர்கள்?

***பதில்:*** அப்ப நாடகத்தில் பெரியளவில் வளர்ந்திருந்தவை என்னைக் கிண்டலடிச்சினம். இவை இப்ப வந்தவை என்னத்தைச் செய்யப் போகினம் என்று சொல்லிச்சினம். இந்த மாதிரியான கதைகளால் தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டது. அது என்னைச் சிரியாகப் பாதிச்சது. மனசொடிஞ்சு போயிட்டன். சில நண்பர்களின் வரவேற்பும் ஒத்திகை பார்க்க வந்தவர்களின் ஆறுதல் வார்த்தைகளும்தான் என்னை மீண்டும் தூக்கி நிறுத்தின. எனக்கு ஒரு தெம்மைபயும் உற்சாகத்தையும் கொடுத்தவர்கள் அவர்கள்தான்.

நாடகத்தை மேடையேறும் போது மக்கள் காட்சிகளைப் பார்த்து கைதட்டி ஆரவாரம் செய்து வரவேற்றவுடனேயே எனக்கு இருந்த கவலைகள் தாழ்வு மனப்பான்மை எல்லாம் பறந்திட்டுது. நாடகத்தை மேடையேற்றும் வரை இருந்த மன உழைச்சல் மேடையேறினாப் பிறகு அடியோடை ஒழிஞ்சு போச்சுது.

***கேள்வி:*** நீங்கள் நிறைய சமூக நாடகங்கள் எழுதியுள்ளீர்கள். அவற்றில் மக்களின் வரவேற்பை அதிகம் பெற்றது எது? வேறு ஏதாவது நாடக முயற்சியிலும் நீங்கள் ஈடுபட்டிருக்கிறீர்களா?

***பதில்:*** நான் முதலில் எழுதிய நாடகம் 'கண்ணாடி'. அதன் பிறகு 'தலை தீபாவளி', 'சகோதர விரோதி', 'வசந்த வாழ்வு', 'பதவி மோகம்', 'ஏழையின் காதல்' போன்ற நாடகங்களை எழுதித் தயாரித்திருக்கிறேன். வரலாற்று நாடகங்களும் எழுதியிருக்கிறேன்.

சமூக நாடகங்களுள் பெரும் வரவேற்பைப் பெற்றுத்தந்தது வசந்த வாழ்வு. முஸ்லிம் கலாசாரத்திற்கும் இந்துக் கலாசாரத்திற்கும் இடையில் உள்ள வேறுபாட்டையும் சீதனம் இல்லாமல் திருமணம் செய்த ஒரு பெண்ணின் சாபக்கேடான வாழ்க்கை நிலையையும் அதில் வெளிப்படுத்தியிருந்தேன். இத்தகைய நிலைமையை மாற்றியமைக்க முடியாதா என்று கேள்வியெழுப்பி இருந்தேன். அந்தக் காலச் சூழலில் இதற்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது.

***கேள்வி:*** சமூக நாடகங்களின்பால் நீங்கள் அதிகம் கவரப்பட்டதன் நோக்கம் என்ன?

***பதில்:*** மற்றவர்களின் உணர்ச்சிகளைத் தூண்டவேண்டும் என்றோ மற்றவர்கள் என்னைப் பாராட்ட வேண்டும் என்றோ நான் கதை எழுதவில்லை. சமூகத்தில் நாட்டில் நடக்கிற சீர்கேடுகளை யதார்த்தமாகச் சமுதாயம் சிந்திக்க வேண்டும் என்பதற்காகத்தான் நாடகங்கள் எழுதினனான்.

சீதனப் பிரச்சினையால் எத்தனை பெண்கள் வாழாவெட்டியாக இருக்கிறார்கள்? வெளித் தோற்றத்தில் அழகில்லாத பெண் படும் அவலங்கள், சமூகத்தில் கேட்கிற இழிவுச் சொற்கள் எல்லாவற்றையும் நாளாந்தம் பார்த்துக் கொண்டும் கேட்டுக்கொண்டும்தானே இருக்கின்றோம். என்னுடைய நாடகங்கள் எனது வாழ்க்கையில்கூட மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றன.

***கேள்வி:*** உங்களுடைய கருத்துக்களை மக்கள் ஏற்றுக்கொண்டார்களா? அதனால் ஏதாவது சமூக மாற்றங்கள் வந்தனவா?

***பதில்:*** நிச்சயமாக. எனக்குச் சரி என்று பட்டவற்றை நான் சுட்டிக்காட்டியபோது அவர்களும் அதனை ஏற்றுக் கொண்டார்கள். சில சமயங்களில் முரண்பட்டும் இருக்கிறார்கள். அதற்குச் சாட்சியாக சில விமர்சனக் கடிதங்கள் வரும். கல்லால் எறிஞ்சால் என்ன என்பது மாதியான கடிதங்கள் கூட வந்திருக்கு. எல்லாவற்றுக்கும் பொறுமையாகப் பதில் எழுதியிருக்கின்றேன்.

மற்றையது, எனது நாடகங்கள் பல மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது என்றே நினைக்கின்றேன். சீதனத்தால்தான் ஒரு பெண் வாழமுடியும் என்ற நிலை இன்று குறைந்திருக்கிறது. பெண்களைப் படிப்பிக்க வேண்டும் என்ற சிந்தனை வளர்ந்திருக்கிறது. சீதனக் கிறுக்கர்களைத் திருத்த இயலாது. ஆனால் பல இளைஞர்களிடம் மாற்றம் வந்திருக்கிறது. பொருளாதாரத்தை சீதனத்தால் மட்டும்தான் ஈடுசெய்ய முடியுமா? என்பதை அவர்கள் சிந்தித்திருக்கிறார்கள். சில இடங்களில் அது பெற்றோருக்கு எதிரான வெளிபாடாகவும் இருந்திருக்கிறது.

நேர்கண்டவர் : மகாதிலக்ஷ்மி

***கேள்வி:*** உங்களுடைய நாடகங்களில் திரைப்படப் பாடல்களின் செல்வாக்கு அதிகம் இருப்பதாக உணரப்படுகிறதே அது ஏன்?

***பதில்:*** நாங்கள் ஒரு பாட்டை எழுதி இசை அமைத்து அதை மக்கள் மத்தியில் கொஞ்ச நாள் ஓடவிட்டால்தான் அது அவர்களின் மனதில் பதியும். நாடகமும் புதிது பாடல்களும் புதிது என்றால் மக்கள் அதனை விருப்போடு பார்க்கும் தன்மை குறைவு. இப்ப எல்லோரும் சினிமாப் பாடல்களைத்தான் பாடிக்கொண்டு திரியினம். அதானால தான் அவற்றை வைத்து நாடகங்களைச் செய்தோம். அப் போது இலகுவாக மக்களைக் கவர முடிந்தது. அது ஒரு உத்தி.

***கேள்வி:*** சினிமாப் பாடல்களை மக்கள் ஏற்றுக்கொள்கின்ற போதிலும் தனித்துவமான கலை என்ற ரீதியில் நாடகக் கலைஞர்களால் அதனை ஏற்றுக்கொள்ள முடியுமா?

***பதில்:*** நான் இலக்கியக் கோட்பாட்டுக்குள்ளேயோ நாடகக் கோட்பாட்டுக்குள்ளேயோ இருந்து கதாசிரியனாக தயாரிப்பாளனாக வளரவில்லை நான் எப்போதும் என்னை ஒரு வளர்ந்த கலைஞன் என்றும் சொல்லிக்கொண்டதுமில்லை. மக்களை எவ்வாறு இலகுவில் கவரலாம் என்பதற்கான உத்தியாகத்தான் சினிமாப் பாடல்களை நான் எனது நாடகங்களில் பயன்படுத்தினேன். அது தவிர வேறு நோக்கங்கள் அதற்கு இருந்ததில்லை.

***கேள்வி:*** அன்றிருந்த நாடகச் சூழலில் இருந்து இன்றுள்ள நாடகச் சூழல் முற்றிலும் வேறுபட்டிருக்கிறது. பல மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. இது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

***பதில்:*** இரசிகர்களின் மனமாற்றம்தான் இதற்குக் காரணம் என்று நினைக்கின்றேன். அன்று ரிவி மினிசினிமா என்று பெரிதாக ஒன்றும் இல்லை. அன்று வந்த சினிமாவில் வெளிக்காட்டப்பட்ட உணர்வுகளை மொழியை இரசிக்கக் கூடிய அளவிற்கு மக்கள் பக்குவப்பட்டிருக்கவுமில்லை. அதனால் நாடகங்களிற்கு பெருமளவில் வரவேற்பு இருந்தது. அத்தோட வருடத்திற்கு ஒன்றிரண்டு படங்கள்தான் அன்று வெளிவந்தன.

இன்று நிலைமை அப்படியே தலைகீழாகிவிட்டது. மக்கள் கவர்ச்சிகளைப் பார்த்துப் பழக்கப்பட்டுவிட்டார்கள். ரிவியை விட்டு விலகுகிறார்களே இல்லை. அதனால் நாடகங்கள் விழுந்து போய்விட்டன.

***கேள்வி:*** மக்களை தொலைக்காட்சி சினிமா ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிக்க என்ன வழி?

***பதில்:*** இப்ப சண்டை போர் என்று வன்முறைதான் மலிஞ்சு போய்க் கிடக்கிறது. தொலைக்காட்சி நாடகங்களும் வன்முறையைத்தான் தூண்டி விடுகின்றன. அதனாலதான் இப்ப உள்ள சமுதாயம் அத்தகைய படங்களையும் தொடர்களையும் விரும்புது. மீட்கிறதென்றால் அவர்களின் வழியில் போய்த்தான் வரவேண்டும். அதாவது அவர்கள் எதை விரும்புகிறார்களோ அதை நாடகங்களூடாகவும் கொடுத்து அவர்களை வெளியே கொண்டு வரவேண்டும். நேரடியாக மோதுவது பயனளிக்காது.

***கேள்வி:*** நீங்கள் ஒரு நாடகக் கலைஞர் என்பதற்கு மேல் இலக்கிய கர்த்தா. உங்கள் எழுத்துத் துறைக்கும் வாழ்க்கைச் சூழலுக்கும் நெருங்கிய தொடர்புகள் ஏதாவது உண்டா?

***பதில்:*** நான் தொழில்நுட்பக் கல்லூரியில படித்த காலங்களில் எனது குடும்பத்திற்கு சரியான பொருளாதாரக் கஷ்டம். அப்ப எங்களுக்கு இருந்தது கொட்டில் வீடுதான். அம்மா வீட்டில சமைச்சால் மேலால புகை வரும். மத்தியானம் சாப்பிட எண்டு நான் வீட்டை போவன். தூரத்தே இருந்து பார்க்கும்போது குடிசைக்கு மேல புகை தெரிஞ்சா சாப்பாடு இருக்கும். இல்லையெண்டால் நல்லூர்க் கந்தசாமி கோயிலுக்குப் போய் வயிறுமுட்ட தண்ணீர் குடிச்சிட்டு லேஞ்சியை ஈரத்துணியிலை நனைச்சு வயிற்றில கட்டிக்கொள்ளுவன். அப்பிடித்தான் படிச்சன்.

பொருளாதாரத் தேவைக்காக பத்திரிகைகளில கதை எழுதினன். 20 ரூபா தருவினம். நான் ஈரலேஞ்சிய வயித்தில கட்டிக்கொண்டு படித்ததைக்கூட கதையா எழுதினன். பத்திரிகையில அது தொடரா வந்தது. அதுக்கு மட்டும் 40 ரூபா தந்தினம். அந்தக் கதை எனக்கு நல்ல வரவேற்பைப் பெற்றுத் தந்தது. நான் வாழ்ந்த சூழலும் கதை எழுதிய அனுபவமும்தான் நான் நாடகம் எழுதவும் தயாரிச்சு மேடையேற்றவும் உதவின. □

# பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்







**தமிழர்களின் நிகழ்கால அவலங்களை விளக்கும் நாடகம் - 2003**

நாடக ஆசிரியர்:
**தே.தேவானந்த்**

*மேடை மெல்லத் திறந்து கொள்கிறது. யாழ்ப்பாணக் குடும்பமொன்றின் படம் மெல்லத் தெரிய ஆரம்பிக்கிறது. கறுப்பு சட்டகமிடப்பட்ட குடும்பப் படத்தில் அப்பா, அம்மா, பாட்டா, பாட்டி, தம்பி, அண்ணா, அக்கா, தங்கை ஆகியோர் நிற்கிறார்கள். ஒரு மகிழ்வான சூழலில் நிறைந்து நிற்கும் குடும்பப் படம் போலும்.*

அப்பா: இது எங்கட குடும்பப்படம்!

*படத்தில் இருந்த பாட்டி மெல்ல எழுந்து முன் மேடைக்குச் செல்கிறார். தம்பி, தங்கை ஆகியோரும் அவர் பின்னே செல்கிறார்கள். பாட்டி சுவையாக உணவு பிசைந்து அவர்களுக்கு ஊட்டுகிறாள்.*

தம்பி: பாட்டி, அங்க மரத்தில காகம்

பாட்டி:
காக்காச்சி கருப்பாச்சி
கரும்புள்ளத் தாச்சி
காக்கா பழம் தின்னி
வேப்பம் பழம் தின்னி
எங்காக்கள் வந்தா
பறந்து காட்டு
கடதாசி வந்தா
நடந்து காட்டு
ஊரார் வந்தா ஓடிவா!
உற்றார் வந்தா பறந்துவா!

*குடும்பப் படத்தில் நின்ற ஏனையவர்களும் ஒவ்வொருவராகச் சட்டகத்தில் இருந்து வெளிப்பட்டு தம் நிலை உணர்ந்து உழைப்பவராக பாவனை செய்கிறார். அண்ணாவும் அக்காவும் படிக்கிறார்கள். அம்மா அவர்களுக்கு அருகில் இருந்து கவனிக்கிறார், படிப்பை ஊக்கப்படுத்துகிறார்.*

அம்மா: தம்பி நல்லாப் படி. நீ படிச்சு நல்லா வந்துதான் அக்காவை கரைசேர்க்க வேணும்.

அப்பா: எல்லோரும் வாங்கோ குடும்பப்படம் எடுக்க!

*எல்லோரும் சேர்ந்து நின்று குடும்பப்படம் எடுக்கிறார்கள். குடும்பம் வளர்ந்து பெருத்துச் செல்லும்போது அவ்வப்போது வந்து போகின்ற கொண்டாட்ட மனநிலையில் குடும்பப்படம் எடுப்பது வழமை. இந்தக் குடும்பமும் தான் நிறைந்திருக்கும்போது கிடைத்தபோதெல்லாம் குடும்பப்படம் எடுக்கிறது போலும்.*

புகைப்படம் எடுப்பவர்: எங்க, சிரியுங்கோ!

எங்க சிரியுங்கோ!

*இவ்வேளை பின்வரும் பாடல் அசைகிறது. எல்லோரும் சிரிக்கிறார்கள். படம் எடுக்கப்படுகிறது.*

பாடல்: பால் போல் நிலவெறிக்க
பச்சை வயல் முகம் சிரிக்க
தாயே உன் மடியில் அன்று
தவழ்ந்த பெரும் நினைவெமக்குள்
நோய் நொடிகள் ஏதுமில்லை
நொந்த மனம் தானுமில்லை
வாய் வயிறு மனம் குளிர
வளர்ந்த பெரும் குடும்பமென

*பாடல் முடியும்போது படத்தின் பின் பகுதியில் இருந்து வெடி குண்டொன்று வெடிக்கிறது. படச்சட்டம் பிய்ந்து சிதறு கிறது. அப்பாவும் பாட்டாவும் வீழ்ந்து இறந்துபோகிறார்கள். தாய் சிலுவையில் அறைந்தவளாகிறாள். தங்கை இதனைப் பார்த்து பொங்கியெழுந்து ஆயுதம் ஏந்தி போராடச் சென்று விடுகிறாள். அண்ணா பயத்தாலும் குடும்பத்திற் காக உழைப்பதற்காகவும் நாட்டைவிட்டுச் செல்கிறான்.*

தங்கை: எங்களப் பாதுகாக்க நான் போறன்!

அண்ணா: குடும்பத்தையும் என்னையும் பாதுகாக்க படிப்ப இடையில விட்டுட்டு நாட்டை விட்டுப் போறன்.

*அண்ணா வெளிநாடு ஒன்றுக்கு சென்றுவிட்டான். சிறிது காலத்தின் பின் அவன் ரெலிபோனில் தொடர்பு கொள்கிறான். அம்மா ஆவலாய் ரெலிபோனுக்கு பதிலளிக்கிறாள். அவனுக்கு முன்பு எடுத்த குடும்பப்படமும் அண்மையில் எடுத்த குடும்பப் படமும் தேவைப்படுகிறது. முன்பு எடுத்த படம் இப்போது நிலைமாறிவிட்டது. அவன் ஆழ்மனதை அது வாட்டுகின்ற துயர்.*

அம்மா: ஹலோ....! ஹலோ....!

தம்பியே......? எப்பிடி இருக்கிறாய்?
என்ன......! தெளிவா இல்லை!

குடும்பப் படமோ? ஆ....! ஆ....!

எடுத்து அனுப்பிறன்.

*ரெலிபோனை வைக்கிறாள். குடும்பப் படம் எடுக்க ஒழுங்கு செய்கிறாள். புகைப்படம் எடுப்பவர் வருகிறார். எல்லோரும் படம் எடுப்பதற்காக நிற்கிறார்கள். முன்னம் எடுத்த குடும்பப் படத்தில் இருந்த நான்கு பேர் இப்போது இல்லை. முன்பிருந்த மகிழ்ச்சியும் இப்போது இல்லை; கவலை தோய்ந்த முகத்தோடு நிற்கிறார்கள்.*

படப்பிடிப்பாளர்: எங்க சிரியுங்கோ! சிரியுங்கோ!!

*குடும்ப அங்கத்தவரால் சிரிக்க முடியவில்லை. இது இன்றைய யாழ்ப்பாணக் குடும்பங்கள் ஒவ்வொன்றினதும் நிலை. ஒருமுறை எடுத்த குடும்பப் படத்தை காப்பாற்றி வைத்திருப்பது, மீண்டும் அதே ஆட்களுடன் குடும்பப்படம் எடுப்பது என்பவை சாத்தியமே இல்லாதவை. குடும்ப அங்கத்தவர்களின் பிரிவு அல்லது இழப்பு குடும்பப்படத்தை மாற்றியமைக் கிறது. போர் தந்த பரிசு இது. இந்தப் பொதுவான குடும்பபட வெளிப்பாட்டில் இருந்து, அண்மையில் கணவனை இழந்து சுமைதாங்கி நிற்கின்ற பெண்ணொருத்தியின் கதை மெல்ல விரிய ஆரம்பிக்கிறது.*

*சோக இசையொன்று மெல்ல அசைந்து வர, இப்போது ஒரு பெண் மட்டும் மேடையில் விரித்த தலையுடன் நிக்கிறாள். இவளது கணவன் இராணுவத்தால் அநியாயமாகக் கொல்லப்பட்டான். அந்த இழப்பைத் தாங்க முடியாமல் சுமை தாங்கி வாழ்ந்து வருபவள். இப்போது அந்தக் குடும்பப் படச் சட்டகத்திற்குள் கணவனை இழந்த பெண்ணும் அவளது இரு குழந்தைகளும் காணப்படுகிறார்கள்.*

பாடல்: ஈரச் சுவராக..
இடி கரையில் மண்ணாக

பாரச் சிலுவையொடும்
பயணம் எது நாள் வரையில்
வாச மலர் போல உங்கள்
வழி நெடுகப் பார்த்திருக்கும்
தாயும் குழந்தைகளும்
தனிய எது நாள் வரையில்

- நா.சிவசிதம்பரம்

பிள்ளை 1: அம்மா, நீ ஏன் அப்பா போனதில இருந்து ஒவ்வொரு நாளும் கடற்கரைக்கு வந்து கடல வெளிச்சுப் பார்த்துக்கொண்டிருக்கிறாய்?

பிள்ளை 2: நீயும் எங்களவிட்டுப் போயிடுவியோ எண்டு பயமாக் கிடக்கு.

அவள்: அப்பான்ர இரத்தம் கலந்து கிடக்கிற இந்தக் கடல்ல *(மேடையின் பின் பகுதியில் கடல் இருக்கிறது போலும்)* நாற்பத்தியோராம் நாள் நான் மூழ்கி எழும்ப வேணும். அதுக்குப் பிறகு நான் புது மனிசியா உங்களோட உங்களுக்காக இருப்பன்.

*அப்பாவுக்கு என்ன நடந்தது என்பதை அறிய பார்வையாளர்கள் ஆர்வமாக இருப்பார்கள். இப்போ மகள் அப்பாவின் இழப்பும் அம்மாவின் துயரும் கண்டு அழுதபடி பார்ப்போரைப் பார்த்து!*

பிள்ளை 2: அப்பா இறந்ததில இருந்து அம்மா இப்பிடித்தான். ஒவ்வொருநாளும் கடலை வெளிச்சுப் பார்த்தபடி இருக்கிறா. எங்களுக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேல்லை.

*அவள் வெறித்த பார்வையுடன் உள்ளாள். அவளின் இனிய மனப்பதிவுகள் மேடையினை நிரப்புகின்றன. அவளுக்கு கலியாணப் பெண் வேடமிடப்படுகிறது. அவளது நீண்டநெடு நாட்களுக்கு முன் நடந்த திருமண வைபவம் அவள் நினைவில் நின்றாடுகின்றது. சோக இசையொன்று மெல்ல பின்னணியாக அசைகிறது. தன் குங்குமப் பொட்டு அழிந்து போனதும் நினைவில் வந்து வாட்டுகிறது. அவள் தன்னை அடக்கி அழுகிறாள். பின், அவன் கடைசியாக விடைபெற்றுச் சென்றது நினைவுக்கு வருகிறது. மிக அண்மைய இழப்பில் அவளது சித்தம் குழம்பி நிற்கிறாள்.*

அவள்: கொஞ்சம் பொறுங்கோப்பா சமைச்சு முடியுது.

கணவன்: உன்ரை சாப்பாட்டை பார்த்துக்கொண்டிருந்தா அவங்களிட்ட அடிதான் வாங்கவேணும்.

அவள்: *(ஓடிச்சென்று)* இந்தாங்கோ.

கணவன்: சரி நான் போறன்

*மேடையின் பின்பகுதியில் உள்ள கடலுக்குச் செல்வதற்காக பல ஆண்கள் மேடைக்குள் நுழைகிறார்கள். கடலுக்கு போவதற்கு முன் சோதனைச் சாவடி ஒன்றில் அடையாள அட்டை கொடுக்கிறார்கள். இராணுவத்தினர் சோதனை செய்கிறார்கள். உடுத்திருந்த சாரத்தை கழற்றி முள்ளுக்கம்பி வேலியில் போடுமாறு பணிக்கிறார்கள். எல்லோரும் அவ்வாறே செய்கிறார்கள். பின் கடலுக்குள் சென்று வள்ளங்களை எடுத்து துடுப்பு வலித்து செல்கிறார்கள். அவசர அவசரமாகத் திரும்பி வருகிறார்கள். கணவன் சிறிது நேரம் பிந்தி வருகிறான். இராணுவத்தினர் அவனை, பிந்தி வந்ததற்காகப் பிடித்து வைத்து கடுமையாக அடிக்கிறார்கள். அதில் கணவன் இறந்து போகிறான். கணவனைப் பிடித்து அடிக்கின்ற செய்தியை ஓடிச்சென்று வீட்டில் அவளுக்கு சொல்கிறார்கள். செய்திகேட்டு அவள் கடற்கரை நோக்கி ஓடிவருகிறாள். அவ்வேளை கணவன் சடலம் தூக்கி வரப்படுவதைக் காணுகிறாள்.*

அவள்: உங்களை ஏன் சாக்காட்டினவங்கள்? எங்கட கடலுக்கு நாங்கள் போய் பிந்திவாரது குற்றமாமோ?

என்ர ராசா, எழும்பி வாங்கோ!

எழும்பி வாங்கோ! என்ர மன ஆறுதலுக்காக எழும்பி வாங்கோ! எழும்புங்கோ...!

*இறந்து கிடந்த உடல் மெல்ல எழுந்து இவளை நோக்கி வருகிறது. இவளின் நினைவு அது. இவள் கண்வெட்டாது பார்த்துக் கொண்டிருக்கிறாள்.*

உடல்: என்னோட வா!

*மகிழ்ச்சியாக ஓர் ஊர்வலம் போகிறார்கள். குடும்பப் படம் ஒன்று எடுக்கிறார்கள்.*

குரல்: ரெடி, சிரியுங்கோ! *(இருவரும் சிரிப்பார்கள்)*

*இருவரும் நீண்ட பயணமொன்றை மேற்கொள்கிறார்கள். அதில் அவர்களது அந்நியோன்யம் தெரிகிறது. பயணத்தின் இடையில் உடல் நின்று கொள்ள அவள் தனித்துச் செல்கிறாள்.*

அவள்: ஏன் நிண்டிட்டீங்கள்?

உடல்: இனி, நான் வரமாட்டன். நீதான் தனியப் பயணிக்க வேணும்.

அவள்: என்னால தனியப் பயணிக்க ஏலாது. நானும் உங்களோட சேர்ந்து வாரன்.

உடல்: நீ வரவேண்டாம், பிள்ளைகளுக்காக நீ வரவேண்டாம்.

*உடல் மீண்டும் பழைய நிலைக்குச் செல்கிறது. அவள் பின்னால் ஓடிவருகிறாள்.*

உடல்: நீ வரவேண்டாம், பிள்ளைகளுக்காக நீ தனிய பயணித்தாக வேணும்.

அவள்: நான் தனிய பயணிக்கிறதுக்கான மனத் தைரியத்தை நான் பெறுகிறதுக்கு வழியொண்டு சொல்லீட்டுப் போங்கோ.

ஊடல்: என்ர நாற்பத்தியோராம் நாள் சடங்கு நடக்கிற அன்றைக்கு, என்ர இரத்தம் கலந்து கிடக்கிற அந்தக் கடலுக்க நீ மூன்று தரம் மூழ்கி எழும்பு. உனக்கு தைரியம் கிடைக்கும். நான் போறன்.

*உடல் தனது பழைய நிலைக்குச் சென்றுவிடுகிறது. கடலில் கணவனை இழந்த பல விதவைப் பெண்கள் கழற்றிய தாலியை கையில் கொண்டு தலைவிரி கோலமாக மேடைக்கு வருகிறார்கள். உடலைச் சுற்றி வைக்கப்பட்டிருக்கும் நெருப்புப் பந்தத்தில் அந்தத் தாலிகளைக் கட்டுகிறார்கள். கழற்றிய தாலியையும் கொடியையும் நெருப்பில் இட்டு உருக்குவதுதானே வழமை. பின், நெருப்புப் பந்தத்துடன் சேர்ந்து தாலியைத் தூக்கிச் செல்கிறார்கள். வேறு சிலர் மேடைக்கு வந்து உடலை எடுத்துச் செல்கிறார்கள். இப்ப அவள் மேடையில் தனியாக இருக்கிறாள். அவளுக்கு அணியப்பட்டிருந்த கூறைச் சேலைகள், தாலி போன்றன கழற்றப்படுகின்றன.*

பாடல்:
மனதுளே வளரும்
நினைவிலே தினமும்
கனவிலே இவளும்
கடலுமாய் உறவு
வளருமா நிலவு
தொடருமா இனி கரையில்
அலையுமா! இவளின் உயிர் போல்

- நா.சிவசிதம்பரம்

*இவளது மனத்துயர் கேட்டு சமயம் (மதம்) மாற்றுவோர், என்.ஜீ.ஓ. பணியாட்கள் வருகிறார்கள்.*

வந்தவர் 1: உங்கட துன்பத்தைக் கேள்விப்பட்டம். துன்பத்தை தீர்க்க வந்திருக்கிறம். தயவு செய்து நீங்கள் அனுமதிக்கவேணும்.

*மேலும் சிலர் வந்து இவளைச் சுற்றி வட்டமாக இருக்கிறார்கள். கைதட்டி பாட ஆரம்பிக்கிறார்கள். பாடல் சற்று உக்கிரமடைகிறது.*

வந்தவர் 2: நீங்களும் எங்களோட சேர்ந்து கைதட்டிப் பாடுங்கோ, மனசுக்கு ஆறுதலா இருக்கும் பாடுங்கோ!

*மேலும் பாடல் உக்கிரமடைகிறது. அவள் நிலையில் எந்த மாற்றமும் இல்லை. செய்வது அறியாது வந்தவர்கள் தமக்குள் பேசிக்கொள்கிறார்கள். அவளை துருவித்துருவி விசாரித்து தகவல் திரட்ட முற்படுகிறார்கள். அவள் தன்னிலை மாறாது ஒரு நிலையில் நிற்கிறாள். தான் துயிரில் இருந்து மீண்டு வல்லமையும் வழிதேடி அமர்ந்திருக்கிறாள்.*

வந்தவர் 1: உங்களுக்கு என்ன நடந்தது?

வந்தவர் 2: உங்கட புருஷன் எங்க செத்தவர்?

வந்தவர் 3: ஏன் செத்தவர்?

வந்தவர் 4: எதுக்காகச் சாக்காட்டினவங்கள்?

வந்தவர் 5: என்ன சொன்னவை?

வந்தவர் 6: ஏன் பேசாமல் இருக்கிறியள்? ஏதாவது பேசுங்கோ!

வந்தவர் 1: இப்ப, உங்களுக்குள்ள உணர்வு என்ன?

வந்தவர் 2: மனசுக்குள்ள உணர்ச்சிகளை அடக்கி வச்சிருக்காதைங்கோ வெளியில கொட்டுங்கோ?

எல்லோரும்: மனசுக்க அடக்கி வச்சிருக்காதைங்கோ வெளியில கொட்டுங்கோ? தயவு செய்து வெளியில கொட்டுங்கோ?

*அரைவேக்காட்டுத் தனத்துடன் ஆற்றுப்படுத்தல் பணிசெய்வோரின் தொந்தரவு அதிகரிக்கிறது. எல்லோரும் சேர்ந்து அவளை மிக நெருங்கிக் கத்துகிறார்கள். அவளில் எந்த மாற்றமும் இல்லை.*

வந்தவர் 1: வாயத்திறந்து ஏதாவது சொல்லுங்கோ! உங்கட விருப்பமேதுமிருந்தாச் சொல்லுங்கோ? நாங்கள் தீர்த்து வைக்கிறம்.

அவள்: என்ர புருஷன்ட நாற்பத்தியோராம் நாள் சடங்கு நடக்கிற அன்றைக்கு, நான் அவற்ற இரத்தம் கலந்து கிடக்கிற கடல்ல மூழ்கி எழும்ப வேணும். அதற்குள்ள தடைகளை நீக்கி விடுங்கோ?

*வந்தவர்கள் திகைத்து நிற்கிறார்கள். அது அவர்களால் முடியாத காரியம். முடிந்தால் நிவாரணம் கொடுப்பார்கள். என்ன செய்ய? மெல்ல நழுவிச் செல்கிறார்கள்.*

வந்தவர் 1: *(ஒரு அரிக்கன் விளக்கைக் கொடுத்து)* இதைப் பிடியுங்கோ! எங்களால இதுகளைத்தான் தரமுடியும். நீங்கள் கேட்டதுகளைச் செய்யிற சக்தி எங்களிட்ட இல்லை. நாங்கள் போறம்.

*வெளியேறிச் செல்கிறார்கள். பிள்ளைகள் நித்திரை கொள்கிறார்கள். இவள் முழித்திருக்கிறாள். மேடையின் முன் வலதில் கணவனுக்காக எரிக்கப்படுகின்ற நெருப்பெரிகிறது. அந்த நெருப்புக்குள் நின்று ஆவேசமாக ஆடுகிறாள். அது அவள் நினைவு. துர்க்கையின் கோலமெடுத்து ஆடுகிறாள்.*

அவள்: நாற்பத்தியோராம் நாள் சடங்கு செய்யிறதுக்கு கடலுக்குப் போகவேணும். கடலுக்குப் போறதுக்குள்ள தடைகளைத் தாண்டி எப்படி என்ர புருஷன்ர சடங்கைச் செய்யப்போறன்? நினைக்க நெஞ்சு குமுறுது!!

*இவ்வேளை தூரத்தே வெடிச் சத்தங்கள் கேட்கின்றன. பிள்ளைகள் பயத்தில் நித்திரைவிட்டு எழுந்து கொள்கிறார் கள். தாயைப் பார்க்கிறார்கள்.*

பிள்ளை 1: அம்மா அம்மா! பயமா இருக்கு!!

பிள்ளை 2: சத்தங்கள் கேட்குது பக்கத்து வீட்டுக்காரரெல்லாம் வீடுகளை விட்டு வெளிக்கிட்டு ஓடுகினம். நாங் களும் போவம்.

அவள்: அப்பான்ர நாற்பத்தியோராம் நாள் சடங்கு செய்யவேணும்.

*பிள்ளைகள் மௌனமாகிறார்கள். பெரும் சனக் கூட்டமொன்று அல்லோல கல்லோலப்பட்டு அலையென வருகிறது. அந்த அலைக்குள் அவளும் இரண்டு பிள்ளைகளும் ஏதுமற்றவர்களாக அடித்துச் செல்லப்படுகிறார்கள். ஆள் தொலைந்து போகின்ற சனத்திரள் வெள்ளம். அதில் தொலைந்து போனவர்கள் கூவி அழைத்துத் தேடுகிறார்கள். இயலாமைகளும் கூக்குரலாகின்றது.*

இடம்பெயர்ந்து செல்வோர் 1: சேரன் எங்க நிக்கிறாய்? *(பதில் இல்லை)*

இ.செ 2: ராசன் நான் இங்க நிக்கிறன்!

இ.செ 3: நடக்க முடியேல்லையே!

இ.செ 4: என்னால இனி வரமுடியாது. என்ன விட்டுட்டுப் போங்கோ. நான் வீட்டில கிடந்து சாகிறன்.

இ.செ 5: அப்ப நீ இஞ்சகிட நாங்கள் போறம்.

இ.செ 6: பவானி!

இ.செ 7: பிள்ளை!

இ.செ 8: அண்ணா!

இ.செ 9: தம்பி!

இ.செ 10: இராசன்! இராசன்!! இராசன்!!!

இ.செ 11: என்னையும் இழுத்துக் கொண்டு போங்கோ! தயவு செய்து.

இ.செ 12: அப்புவை வீட்ட விட்டிட்டு வந்திட்டம். என்ன நடக்குமோ?

இ.செ 13: நாய இதுக்குள்ள ஏன் கொண்டு வந்தனீ? அங்கால கொண்டு போ!

இ.செ 14: ஏன் இடிக்கிறீங்கள்?

இ.செ 15: தள்ளாதேங்கோ! காலை உளக்காதேங்கோ!

இ.செ 16: மழை பெய்யுது!

இ.செ 17: தண்ணி தாங்கோ?

இ.செ 1: தண்ணி தாங்கோ?

இ.செ 2: இங்க எங்க தண்ணி எடுக்கிறது? அந்த குடையில வாற மழைத் தண்ணிய ஏந்திக் குடி!!!

*மழைத் தண்ணீர் குடையில் ஏந்தி குடிக்கிறார்கள். உறவுகளைத் தேடிக் கூப்பிடும் சத்தங்கள் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கின்றன. அம்மாவும் பிள்ளைகளும் என்.ஜீ.ஓ. வழங்கிய அரிக்கன் விளக்கை எடுத்துக் கொண்டு கூட்டநெரிசலில் செல்கிறார்கள். இவ்வேளை பின்வரும் பாடல் ஒலிக்கும்.*

பாடல்: நித்தம் துயர் முட்டும் விழியொடு
சித்தம் பலதிக்கும் அலைவுறும்
இக்கட்டுக்கள் முற்றும் தலைமுறை எமதாகி

சொத்துக்களை விட்டுத் தினியென
மக்கள் நிலை கெட்டுச் சிறுகுடில்
வைத்துப் பலர் ஒட்டுக் குடியென இழிவாகி

புத்தம் புது ரத்தம் நிலமிசை
சொட்டும், மழை கொட்டும், எரிகணை
அச்சம் தரும் உச்சத்திடரிடை அழிவாகி

மற்றும் வழியற்றும் - தொழில் துறை
கெட்டும் தெருவற்றும் - பசியெழ
வைக்கும் தடைவெட்டும் துணிவினி வரவேணும்

- நா.சிவிசிதம்பரம்

*இடம்பெயர்ந்த மக்கள் மேடையில் ஒரு அகதி முகாமாகிறார்கள். சிறிய குடிசைகள் என்.ஜீ.ஓ. கூடாரங்களால் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் மக்கள் வாழமுடியாது. என்ன செய்ய? இந்த மக்களுக்கு அதற்குள்ளேயே வாழவேண்டிய நிர்ப்பந்தம். அவளும் பிள்ளைகளும் மேடையில் முன் வலதில் உள்ள குடிசையொன்றில் இருக்கிறார்கள். ஒரு பிள்ளைக்கு கடுமையான காய்ச்சல், மருந்து எடுக்க வசதியில்லை. அவள் செய்வதறியாது தவித்து பிள்ளையைக் காப்பாற்ற பலரிடமும் மடிப்பிச்சை எடுக்கிறாள்.*

பிள்ளை: அம்மா என்னால ஏலாமல் இருக்கு!
என்னால ஏலாது!!

அவள்: *(கடவுளிடம் நேர்த்தி வைக்கிறாள்)* தாயே அம்மாளாச்சி என்ர பிள்ளையைக் காப்பாற்று. நான் உனக்கு மடிப்பிச்சை எடுத்து கஞ்சி காய்ச்சி ஊத்துறன்.

*அவளது வேண்டுதல் பலிக்கிறது. நேர்த்தியை நிறைவு செய்ய எல்லோரிடமும் மடிப்பிச்சை கேட்கிறாள்.*

அவள்: என்ர பிள்ளைகளிண்ட உயிரைக் காப்பாத்த மடிப்பிச்சை தாங்கோ? தயவு செய்து!

இடம்பெயர்ந்த மக்கள் 1: இவளென்ன தலைவிரிகோலமாத் திரியிறாள்?

*சிலர் ஒரு சுண்டு அரிசியை அவள் மடியில் கொட்டுகிறார்கள்.*

இ.பெ 2: உடம்பில நோகாமல் தண்டித்திரியிறாள்

இ.பெ 3: கெதியா போட்டுவிடு, முழுவியளத்துக்கு வந்து நிக்கிறாள்.

*சில ஆண்கள் அவளது இளமைத் தோற்றத்தின் மீது கண்களைச் செலுத்துகிறார்கள். அவள் கூனிக் குறுகுகிறாள்.*

பிள்ளை 2: ஏன் அம்மா எங்களுக்காக மடியில இவ்வளவு திட்டுக்களையும் வாங்கிக் கொண்டு வாறாய்!

*தாய் இதனைக் கேட்டதும் மடியில வாங்கி வந்த அரிசியை கைநழுவவிட்டு விடுகிறாள். அரிசி சிதறுகிறது. தாய் வெறித்த பார்வையுடன் நிக்கிறாள்.*

பிள்ளை 1: அம்மா! அம்மா! வாம்மா!!
கொட்டுண்ட அரிசியைப் பொறுக்கிறன்
வாம்மா சமைப்பம்.... அம்மா! அம்மா!!

*பிள்ளை 1 சிதறிய அரிசியைப் பொறுக்குகிறாள். அதை சமைத்து உண்ணுகிறார்கள். பிள்ளைகளின் சித்தப்பா இவர்களைச் சந்திக்க வருகிறார்.*

பிள்ளைகள்: சித்தப்பா வாறார்!
சித்தப்பா! எப்பிடி இருக்கிறீங்கள்..?

சித்தப்பா: நீங்கள் எப்பிடி இருக்கிறீங்கள்?

பிள்ளை 1: தங்கச்சிக்கு கடுமையான வருத்தம். அம்மா, மடிப்பிச்சை எடுத்து கஞ்சி காச்சித் தந்தவ. அம்மா திரும்பத் திரும்ப அப்பான்ர சடங்கு செய்யாமல் ஊரைவிட்டு வந்ததைப் பற்றி கவலைப்படுகிறா! அம்மாவை ஆறுதலா இருக்கச் சொல்லுங்கோ. நாற்பத்தியொரு நாளில முடியவேண்டிய சடங்கு, இப்ப நீண்டு கொண்டு போகுது. எவ்வளவு காலம் நீளுமோ? எப்ப ஊர் மீளுவமோ? எல்லாம் ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

*சித்தப்பா அவளின் அருகில் செல்கிறார். கதைக்கிறார் பணம் கொடுக்கிறார். முகாமில் இருந்த ஏனையவர்கள் புதினமாக (வக்கிரத்துடன்) விடுப்புப் பார்க்கிறார்கள். அவள் சுருங்கிப் போகிறாள்.*

சித்தப்பா: செலவுக்கு இந்தக் காச வைச்சிருங்கோ. பிள்ளைகளுக்காக மனச ஆறுதல்படுத்துங்கோ. பிள்ளையளைக் கவனியுங்கோ. பிள்ளையளைக் கவனியுங்கோ. ஏதும் தேவையென்டா சொல்லி அனுப்புங்கோ! நான் வாறன்.

*சித்தப்பா செல்கிறார். அயலவர்கள் விடுப்பு பார்ப்பது அவளுக்குத் தெரிகிறது. பெருமூச்சுடன் குடிசையில் முடங்குகிறாள்.*

அவள்: இந்த இரண்டு பொம்பிளைப் பிள்ளைகளோட எப்பிடி சீவிக்கப்போறனோ?

*இவ்வேளை கட்டியக்காரன் போல ஒருவன் மேடைக்கு வருகிறான்.*

கட்டியக்காரன்: இத்தால் சகல மக்களுக்கும் அறியத் தருவது என்னவென்றால், இதுவரை காலமும் நடைபெற்ற போர் ஓய்வுக்கு வருகிறது. இனி சமாதானத்திற்கான பயணங்கள், பயிற்சிகள், செயல்முறைகள், விளக்கவுரைகள், பட்டறைகள், பகட்டுக்கள் நடக்கும்.

சமாதானத்திற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் நீங்கள் குடியிருக்கிற இந்த இடத்தில் இருந்து நீங்கள் உடன் வெளியேற வேண்டும். இந்த இடம் அவருக்குத் தேவையாம். அவர் தனக்குத் தேவையென்று அங்க அறிவிக்க. அவை தமக்கு மேல இருக்கிறவைக்கும், அதுக்கும் மேல இருக்கிறவைக்கும் அறிவிக்க, அவை எங்களுக்கு அறிவிச்சிருக்கினம் உங்கள எழுப்பச் சொல்லி. அதனால, இந்த இடத்தில நீங்கள் தொடர்ந்து இருக்க முடியாது. இந்த இடத்தில இருந்து உடன வெளிக்கிடாதவர்களுக்கு அரச உதவிகள், இதர படிகள் நிறுத்தப்படும். இது அரச கட்டளை!

ஆவள்: எங்கட ஊர் இப்பவும் இராணுவத்திடம் சிறைப்பட்டுக் கிடக்கு. இஞ்ச இருந்து எழும்பி நாங்கள் எங்க போறது!

*அரச கட்டியக்காரன் அவளது கேள்விக்குப் பதில் கூறாது சென்றுவிடுகிறான். குடிசைகள் அகற்றப்படுகின்றன. அவளும் பிள்ளைகளும் எங்கு செல்வது என்று தெரியாமல் தடுமாறுகிறார்கள். பல வீடுகளில் ஒண்டுக் குடித்தனம் நடத்துகிறார்கள்.*

பாடல்: நித்தம் துயர் முட்டும் விழியொடு
நித்தம் பலதிக்கும் அலைவுறும்
இக்கட்டுக்கள் முற்றும் தலைமுறை
எமதாகி

சொத்துக்களை விட்டுத் தனியென
மக்கள் நிலை கெட்டுச் சிறுகுடில்
வைத்துப் பலர் ஒட்டுக்குடியென
இழிவாகி

மற்றும் வழியற்றும் - தொழில் தற
கெட்டும் தெருவுற்றும் பசியெழ
வைக்கும் தடைவெட்டும் துணிவினி
வரவேணும்

- நா.சிவசிதம்பரம்

*இவ்வேளை மிக அவசரமாக சமாதானம் தொடர்பான விளக்கவுரை அரங்கு ஒன்றை நடத்த என்.ஜீ.ஓ. ஒன்று ஓடிவருகிறது. மிகப் பகட்டான தோற்றத்துடனும் ஆடம்பரங்களுடனும் என்.ஜீ.ஓ. வருகிறது போலும்.*

என்.ஜீ.ஓ. பணியாளர்: *(பார்வையாளரைப் பார்த்து)* நாங்கள் உங்களுக்கு சமாதானம் தொடர்பான விளக்கவுரை அரங்கு ஒன்றை நடத்த வந்திருக்கிறம். இதில, சமூகத்தில் கிறீம் (cream) போல உள்ள உயர்வானவர்களும், பாதிக்கப்பட்ட சிலரும் பங்குபற்றலாம். போக்குவரத்து உட்பட அனைத்துப் படிகளும் வழங்கப்படும்.

*இதனைக் கேள்விப்பட்டு சமூகத்தின் உயர்தர மனிதர்கள் பலர் ஒன்று கூடுகிறார்கள். அவளும் செல்கிறாள். மேலும் சிலர், பட்டுநொந்த மக்கள் சார்பானவர்களும் பங்குகொள்கிறார்கள். சம்பிரதாயப் பணிகள் நடைபெறுகிறது. விளக்கேற்றல், பொட்டுவைத்தல், கட்டி அணைத்தல், முகமன் கூறல் போன்ற பல பணிகள் நடைபெறுகின்றன.*

ஏன்.ஜீ.ஓ. பணியாளர்: வணக்கம் சமாதானம் என்பதை, 'Peace' என்றும் சொல்லுவார்கள். சமாதானத்திலும் அகம், புறம் என்ற இரண்டு இருக்கு. புறம் நாம் வாழும் சமூகத்தில் உள்ளது. மனதுக்குள் உள்ளது அகம். புறத்தில் வந்தாத்தான் அகத்தில் வரும். இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. சண்டைபிடிச்ச இரண்டு பகுதிகளும் அதாவது அவர்களும் இவர்களும் சமாதானம் பற்றிப் பேசவந்திருக்கிறார்கள். இவர்களுக்கு இடையில நீங்கள் இருக்கிறியள். அதாவது 'மக்கள்'. சமாதானத்தில மக்கள் அபிப்பிராயம், பங்களிப்பு மிக அவசியம். பெரியவை, சிறியவை ஆம்பிளை, பொம்பிளை என்ற பலரும் இதுக்கு அவசியம் (Gender balance) ஜென்ர பலன்ஸ்லேசுடயான சமாதாம்தான் நிலைக்கும்.

*இவரது அதிமேதாவித்தனம் மிக்க விளக்கவுரையைக் கேட்டுக்கொண்டிருந்த பலர் நித்திரையாகி விட்டார்கள். அவர்களைத் தட்டி எழுப்புவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. நித்திரை வராது இருக்க பெப்பமின் (இனிப்பு) வழங்கப்படுகின்றது. சிலர் பெப்பமினை உமிழ்ந்து புரக்கேறி நிக்கிறார்கள். அவர்களின் உச்சியில் உரத்துத் தட்டப் படுகிறது. இப்போ ஆசுவாசமாகி இருக்கிறார்கள்.*

ஏன்.ஜீ.ஓ பணியாளர்: சரி, நீங்கள் எல்லோரும் மிக ஆர்வமாக பங்கு கொள்ளுறீங்கள், நல்லது. நாங்கள் இனி 'சமாதானம்' பற்றி விரிவாப் பார்ப்பம். சுமாதானத்தின்ர தொடக்கம் 'சா'. சமாதானத்தில 'சா' முக்கியம். 'சா' இல்லாமல் சமாதானம் இல்லை.

*'சா' என்ற வசனத்தைக் கேட்டதும் பங்குபற்றியவர்கள் சற்று பீதி அடைகிறார்கள். எழுந்து கூட்டத்தைவிட்டுப் போக முயற்சிக்கிறார்கள். ஒரு பங்குபற்றுனர் ஆவேசமாகக் கத்துகிறார்.*

பங்குபற்றுனர்: இது நாள் ரை செத்ததெல்லாம் காணுமென்று தான் 'சமாதானம்' வேணும் எண்டு நினைக்கிறம். சுமாதானத்திலும் 'சா' எண்டா.... பிறகேன் சமாதானம்? *(வெளியே போகிறார். ஏன்.ஜீ.ஓ. ஆட்கள் ஓடிச் சென்று பிடிக்கிறார்கள்)*

ஏன்.ஜீ.ஓ. பணியாளர்: நீங்கள் பயப்பிடாதேங்கோ! எல்லா காலத்திலையும் உலக நாடுகள் பலவற்றிலும் சமாதானத் துக்கு முன்னம் சா இருந்திருக்கு. இது உலகப்பொதுமையானது. இதொன்றும் புதிதில்லை.

ஏன்.ஜீ.ஓ. பணியாளர்: சரி இனி, நாங்கள் 'சா' பற்றி சற்று விரிவாகப் பார்ப்பம் *(உடல் அசைவு ஊடாக 'சா'வை எழுதிக் காட்டுக்கிறார்)* இது 'சா'. அடுத்தது சமாதானத்தில இரண்டாம் கட்டமா 'மா' இருக்கு. 'மா' சாப் பாட்டுக்குரியது. அதேவேளை மாடு கத்துறதும் 'மா' என்றுதான். ஆகவே, இரண்டாம் கட்டம் முக்கிய மாகிறது. சுமாதானச் செயல் முறையில நீங்கள் எல்லோரும் மாடுகளாகி 'மா' என்று கத்தவேணும். எங்க 'மா' எண்டு கத்துங்கோ பாப்பம். ஆ! ஆ!.

*பங்கு பற்றியோர் மாடுகளாகக் கத்தியபடி நடக்கிறார்கள். ஒரு சிலர் செய்ய மறுக்கிறார்கள். கருத்தரங்கை நடத்து பவர்கள் மீதுள்ள அதிருப்தியால் அவர்கள் அவ்வாறு நடந்து கொள்கிறார்கள் போலும்.*

என்.ஜீ.ஓ. 1: நல்லது, நல்லா பங்களிச்சீங்கள். இதைப் போல சமாதான முன்னெடுப்புக்களிலயும் நீங்கள் பங்களிக்க வேணும்.

என்.ஜீ.ஓ 2: அடுத்து வருவது 'தா' *(அதனை உடலால் எழுதிக்காட்டுகிறார்)*

பங்குபற்றுவோர்: என்ன தருவியள்?

என்.ஜீ.ஓ 2: சமாதானச் செயல்முறையில தாறது, கொடுக்கிறது என்ற செயல்களுக்கு இடமில்லை. எடுக்கிறது, மறுக் கிறது போன்ற செயல்கள்தான் இருக்கும். அதை எப்படி வெல்லுறது எண்டதுதான் முக்கியம். சரி, உங்களுக்கேதும் சந்தேகங்கள், கேள்விகள் இருந்தாக் கேட்கலாம்.

*(பங்குபற்றிய ஒருவர் ஆவேசமாக)*

பங்குபற்றியவர்: நாங்கள் பட்டது போதும் விரைவா சமாதானம் வரவேணும். அதுக்குரிய வழிகளைச் செய்யுங்கோ, சமாதானம் எப்பவரும்?

என்.ஜீ.ஓ: அதுக்கான அட்டவணை போடப்பட்டிருக்கு. ஆனா, திகதிகள் குறிக்கப்படவில்லை.

பங்குபற்றியோர்: எல்லாம் சொன்னியள் சமாதானம் என்ன நிறம் என்ன வடிவம் என்று சொல்லேல்லை?

என்.ஜீ.ஓ: வடிவங்கள் பலது உண்டு. சதுரம், நீள் சதுரம், வட்டம், நீள்வட்டம், முக்கோணம், நட்சத்திரம் போன் றன. சுமாதானச் செயல்முறை தான் போற போக்கில ஏதோவொரு வடிவத்தை தன்பாட்டில எடுத் துக்கொள்ளும்.

நிறங்களைப் பொறுத்தவரையில நீலம், சிவப்பு, மஞ்சள் என்ற அடிப்படை நிறங்கள் இருக்கு, துணை நிறங்களும் காணப்படுகின்றன. நீங்கள்தான் அவற்றைத் தீர்மானிக்க வேணும். நாங்கள், அதுகளைத் தீர்மானிக்க முடியாது. நூங்கள் சமாதானத்துக்கான ஊக்கிகள். அவ்வளவுதான்!

பங்குபற்றியோர்: சமாதானம் இப்ப யாருடைய கைகள்ள இருக்கு? எங்க இருக்கு?

என்.ஜீ.ஓ: உண்மையில நாங்கள் அதை வடிவா, விரிவா, சுருக்கமா சொல்லுறதெண்டா சமாதானம், பீஸ் (Peace) பல பக்கேஜ்களில்ல (package) இருக்கு. இதை நீங்கள் தெளிவா விளங்கிக் கொள்ள வேணும்.

பங்குபற்றியோர்: சரி, நீங்கள் நினைக்கிற சமாதானம் என்ன? அது வந்தா என்ன நடக்கும்?

என்.ஜீ.ஓ: நாங்கள் நினைக்கிற சமாதானம் என்ற ஒன்று இல்லை. நீங்கள் நினைக்கிறதுதான் சமாதானம். ஆனா, இந்த சமாதானம் வந்தால் நன்மைகள் பல வரும். முக்கியமாக நவீன யுகத்தால் நீங்கள் சூழப்படுவீங்கள். 'நுட்பியல் அவத்தை' உங்களை ஆட்கொள்ளும். அதில பரவசம்தான் விரவி இருக்கும். அதில வீடு பற்றிய நினைப்போ, நாடு பற்றிய நினைப்போ தன்னைப் பற்றிய நினைப்போ ஒன்றும் இருக்காது. எல்லாற்ற வீட்டிலயும் ஒரு மைக்கிறோ ஜெற்றும் அன்ரனா செற்றும் இருக்கும். அதில ஏறி இருந்தா துன்பங்கள், கவலைகள் எல்லாம் பறந்து போயிடும். உழைக்கவே தேவையில்லை. பொத்தானை அமுக்க அமுக்க தேவையானது எல்லாம் கிடைக்கும். இறப்பு என்றதே இல்லை. அதில ஏறி இருந்தா அலுங்காமல் குலுங் காமல் மேலபோய் காற்றோட காற்றாய் கலந்து கரைந்துபோகலாம்.

*எல்லோரும் 'ஆ' என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருவன் மட்டும் கத்துகிறான்.*

பங்குபற்றியவர்: இவங்கள் எங்கட சுயத்த இல்லாமல் செய்யிறதுக்கான அலுவல்கள் பாக்கிறாங்கள். அது, இது என்று பித்தலாடுறாங்கள். பேக்காட்டுறாங்கள். *(கோபத்துடன் வெளியேறிச் செல்கிறார்)*

என்.ஜீ.ஓ.: கையெழுத்த வைச்சிட்டுப் போங்கோ........!

*பங்குபற்றியோர் சற்றுப் பதற்றம் அடைகிறார்கள். நடத்தியவர்களும் பதற்றம் அடைகிறார்கள்.*

என்.ஜீ.ஓ.: இதுகளைப் பற்றி என்ன நினைக்கிறியள்?

*மக்கள் விழிபிதுங்கி நிற்கிறார்கள். அவள் எழுந்து தன் கதை சொல்கிறாள்.*

அவள்: இனி ஒரு போர் வரக்கூடாது. இந்தப் போரால நான் என்ர புருஷனை இழந்தன். கடவுக்குப் போய் கொஞ்சம் பிந்தி வந்ததுக்காக அடிச்சு சாக்காட்டிப்போட்டாங்கள். புருஷன்ர சடங்கு செய்ய முதலே ஊரைவிட்டு வெளிக்கிடவேண்டி வந்திட்டுது. வீடில்லை, சொந்தங்கள் எல்லாம் சிதறிப்போச்சு. இருக்க இடமில்லை. எட்டுத்தரம் குடிசைகள் அமைச்சு பிடுங்கி இருக்கிறம். ஒண்டுக்குடித்தனம் நடத்தி வெறுத் துப்போச்சு. இரண்டு பொம்பிளப்பிள்ளைகளோட நான் படுகிற கஸ்ரம் சொல்லி மாறாது. ஒரு பிள்ளை வருத் தக்காறப் பிள்ளை கடலை நம்பி வாழ்ந்த எங்களுக்கு வேற ஒரு தொழிலும் தெரியாது. பிள்ளைகளை வளர்க்க வழி தெரியாமல் தடுமாறுறம். தரையில கிடந்து வதங்கிறம். எங்களுக்கு ஏற்பட்ட நிலமை வேற ஒருத்தருக்கும் வரக்கூடாது. நாங்கள் சொந்த இடங்களில நிம்மதியா இருக்கிற காலம் வரவேணும். இதத்தான் நான் இந்த இடத்தில சொல்லலாம். இனியொரு போர் வராமல் பார்த்துக்கொள்ளுங்கோ.

ஏன்.ஜீ.ஓ: நாங்கள் அதுக்காகத்தான் முயற்சிக்கிறம். சுரி, இனிக்காணும். நாங்கள் இவ்வளவத்தோட நிறுத்துவம்.

*மெல்ல நழுவிச் செல்கிறார்கள். மக்கள் அவளை அணுகிக் கதைக்கிறார்கள். கூட்டம் கலைகிறது.*

மக்கள் I: உங்கட கதையைக் கேட்க அழுகை வந்தது, இப்ப இருக்கிற அமைதி நிரந்தர அமைதியாய் வரவேணும். இனி என்ன நடக்குமோ?

*மக்கள் வெளியேறிச் செல்கிறார்கள். வீதியில் பல இறந்த உடல்கள் காணப்படுகின்றன.*

அவள்: யார் இவையள்? ஏன் செத்துக் கிடக்கினம்?

மக்கள்: இவை, யாரெண்டு தெரியாது. சமாதானத்திற்காக காத்துக் கிடக்கிற காலத்தில செத்துக் கிடக்கினம்.

*அவள் பிணத்தைக் கடந்து வீடு வருகிறாள். பிள்ளைகள் மேடைக்கு வருகிறார்கள். அவள் பிள்ளைகளிடம் வரு கிறாள்.*

பிள்ளை I: அம்மா, நீங்கள் கூட்டத்திற்குப் போனாப்பிறகு தங்கச்சிக்கு வருத்தம் கூடி கஸ்ரப்பட்டனாங்கள். மருந்து, சாப்பாடு வாங்க வேணும்.

அவள்: கையில காதில கிடந்ததுகள் எல்லாத்தையும் வித்து இவ்வளவு நாளும் சீவிச்சிட்டம். இனி எப்பிடி சீவியத்தைக் கொண்டு போகப்போறம்?

*இவ்வேளை குடும்பப் படத்தில் இருந்த பாட்டி மேடைக்குள் வருகிறாள். அவளிடம் இவள் கேட்கிறாள்.*

அவள்: என்னண்டு நான் சீவியத்தைக் கொண்டு போகப்போறன்? வழியொண்டு சொல்லுங்கோ?

பாட்டி: மனதைத் தளர விடாதை. சீவிக்க வழியிருக்கு. நீ உழைச்சுப் பிள்ளையளைக் காப்பாற்றலாம்.

*பாட்டி அவளை அழைத்துச் சென்று வேலை ஒன்றில் சேர்த்துவிடுகிறாள். அவள் உடல் வருத்தி வேலை செய்கிறாள். அங்கு அவளது உடல் வனப்பின் மீது சிலரது கண்கள் மொய்க்கின்றன. அவள் வேலை செய்து உழைத்த காசில் பிள்ளைக்கு மருந்து, சாப்பாடு வாங்கிச் சென்று கொடுக்கிறாள். அவளது உடலை மொய்க்கும் கண்கள் மலைபோல உயர்கின்றன. ஊராரின் ஏளனமும் பழிச்சொல்லும் மலையாகிறது. இவள் ஒடுங்கிப் போகிறாள். பிள்ளைகளும் வேதனைப்படுகின்றனர்.*

ஊரார் 1: உடம்பக்காட்டி ஆம்பிளையள அலைக்களிக்கிறாள்.

ஊரார் 2: புருஷன தொலைச்சிட்டு தனியச் சீவிக்கிறாள்.

ஊரார் 1: அடிக்கடி வெளிக்கிட்டுப் போறாள். என்ன தொழில் செய்யிறாளோ?!

ஊரார் 2: (பிள்ளைகளைப் பார்த்து) தேப்பனைக் கொண்டதுகள்.

*அவளது உடலை மொய்க்கும் கண்களின் சொந்தக்காரர்கள் நாக்கைத் தொங்கப்போட்டு, ருசிச்சு ருசிச்சு சப்புக் கொட்டுகிறார்கள். அவள் வேதனையில் துவளுகிறாள். பின், பிள்ளைகளின் வேதனை கண்டு ஆவேசமாக எழுந்து கொள்கிறாள்.*

அவள்: புருஷன் இல்லாம என்ர இந்த உடம்போட பிள்ளைகளை வளர்க்க முடியாது. நான் என்ர பிள்ளைகளை வளர்க்க என்ன செய்வன்? தலைக்கு மேல ஊராரின்ர பழிச்சொல் கிடக்கு. நான் வாழ எனக்கொரு வழி சொல்லுங்கோ?

பாட்டி, நான் வாழ எனக்கொரு வழிசொல்லுங்கோ?

*பாட்டி உள் நுழைந்து*

பாட்டி: நிதானமாய் இரு. அமைதியாய் இரு. இத்தனைக்கும் மத்தியிலதான் நீ வாழவேணும். இதுதான் யதார்த்தம். பொறுமையாய் இரு.

அவள்: நான் எப்பிடிப் பொறுமையாய் இருக்கிறது? அநீதி உயர்ந்து நிற்கும் இந்த மலைக்கு முன்னால என்ர இந்த உடம்போட வாழமுடியாது. என்னைச் சுற்றி துன்பங்கள்தான் நிறைய இருக்கு. எனக்கு ஆறுதலுக்கு ஒன்றுமில்லை.

பாட்டி: உனக்கு ஆறுதலுக்கு நாங்கள் இருக்கிறம்.

*மீண்டும் வேலை செய்ய ஆரம்பிக்கிறாள். பாட்டி துணைக்கு இருக்கிறாள். ஊராரின் பழிச்சொல் மலையாக உயர்ந்து செல்கிறது. அவள் ஆவேசப்படுகிறாள்.*

அவள்: நான் பிள்ளைகளைக் காப்பாற்றுறதுக்காக இந்த உடலை விட்டு, பேய் உரு எடுப்பன்.

பாட்டி: பட்டு நொந்துதான் வரவேணும் என்றால் என்ன செய்ய? உன்ர இஷ்ரம் போலச் செய்.

*அவள் தனக்குள் மீண்டும் மீண்டும் சொல்லியபடி பேய் உரு எடுப்பதற்கான தியானத்தில் இருக்கிறாள் போலும். இப்போதும் சப்புக் கொட்டுவோர் மலைபோல மேடையில் நிற்பார்கள். அவள் பேயுரு எடுத்து மேடைக்கு வருகிறாள். குடும்பத்திற்காக தட்டந்தனிய உடல் வருத்தி உழைத்தால் பேயுருத்தானே மிஞ்சும்.*

பேயுரு: என்ர பிள்ளைகளைக் காப்பாற்றுவதற்காக நான் பேயுருக் கொண்டேன்.

விடுப்பு கதைத்து சப்புக்கொட்டும்

மலை: பேய்.. பேய்! வருகுது!

பேய் வருகுது பேய்..!

பேய்! பேய்! பேய்..!

பேய்.. பேய்! பேய்!

பேய்யுருவோடு பிள்ளைகளிடம் செல்கிறாள்.

பிள்ளைகள்: ஏன் அம்மா! எங்களுக்காக உழைச்சு உழைச்சு உடம்ப உருக்கி இந்த உருவத்தை எடுத்திருக்கிறாய்? உன்ன உன்ர பழைய உருவத்தில பார்க்க ஆசையா இருக்கு.

அவள்: நான் இந்த உருவத்தில் இருந்தால்தான் நிம்மதியா உங்களுக்குச் சேவை செய்ய முடியும். வாங்கோ பிள்ளைகள்.

பிள்ளைகள்: எங்களுக்கு இந்த உருவம் வேண்டாம். உன்ர பழைய உருவம்தான் வேணும்.

*பேய் உருவம் பிள்ளைக்கு அருகில் செல்கிறது. பிள்ளைகள் விலகிச் செல்கிறார்கள். அவளுக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் இடைவெளியொன்று ஏற்படுகிறது. தாய் மிகுந்த கவலையுடன் செய்வதறியாது நிற்கிறாள். அவளது மனம் குமுறுகிறது.*

அவள்: பிள்ளைகளுக்காக நான் தேய்ந்து பேயுரு எடுக்க, பிள்ளைகள் என்னை வெறுத்து ஒதுக்குதுகள். நானேன் இப்படியொரு பாவியாப் பிறந்தன்? நானேன் பெண்ணாப் பிறந்தன்? எனக்கு இந்தப் பெண்ணுருவம் வேண்டாம்.

பாட்டி: நிதானம் இழக்காத பிள்ளை. நாளடைவில எல்லாரும் சரிவரும்.

அவள்: எனக்கு இந்தப் பெண்ணுருவம் வேண்டாம். நான் ஆணுருவம் எடுப்பன். நான் ஆணுருவம் எடுப்பன். *(பாட்டியின் மடியில் கிடந்து கத்துகிறாள்)*

பாட்டி: யதார்த்தத்தில இருந்து தப்பிக்கொள்ளப் பாக்கிறாய். உன்ர விருப்பத்தின்படி ஆண் உருவத்தை எடுத்துப்பார். உனக்குத் தெளிவு கிடைக்கும்.

பேயுரு: நான் என்ர பெண்ணுருவத்தை விட்டு ஆண் உருவத்தை எடுத்துக் கொள்ளுவன். என்ர உடல் ஆணுருவாக மாறட்டும்!

*அவள் விருப்பப்படி பேயுரு விலக ஆணுருவாக மாறுகிறாள். உடலுக்குப் பொருத்தமான ஆத்மா இல்லைப்போலும். ஆண் உடலில் உள்ள அவள் பிள்ளைகளிடம் செல்கிறாள். பிள்ளைகள் ஆணுருவை வாசலியே தடுத்து திருப்பி அனுப்பிவிடுகிறார்கள்.*

ஆணுரு: நான் என் பிள்ளைகளைக் காப்பாற்ற ஆணுருக் கொண்டேன். *(தனக்குள் சொல்லிக் கொள்கிறாள்)* *(பிள்ளைகளிடம் வந்து)* வாங்கோ!

பிள்ளை 1: யார் நீங்கள்? அம்மா இல்லை போயிட்டுப் பிறகு வாங்கோ!

ஆணுரு: நான் உங்கட! *(தடுமாறுகிறார்)*

பிள்ளை 2: அம்மா இல்லை. போயிட்டுப் பிறகு வாங்கோ.

ஆணுரு: பிறகு வாறன்.

*செல்கிறாள். தனக்குள் பேசிக்கொள்கிறாள் போலும். தன்பலமும் பலவீனமும் அறியாது ஒவ்வொன்றில் இருந்தும் தப்பித்துக் கொள்வதற்காக வேதனைப்படுகின்ற ஒவ்வொரு பெண்ணினதும் நினைப்பில் இருக்கின்ற விடயங்கள் இங்கு காட்சியாகின்றன. இத்தனை நினைவுகளின பின் அவள் தன் உடலையும் ஆத்மாவையும் இணைத்து நிற்கும் தோற்றத்தைப் புரிந்து கொண்டு தன்முன் உள்ள சவால்களை எதிர்கொள்ளத் தயாராகிறாள்.*

ஆணுரு: என்ர ஆத்மா தங்கியிருப்பதற்குரிய உடல் இல்லை இது. என்ர ஆத்மா ஆண் உருவைக் கைவிட்டு என் பழைய பெண் உருவை எடுக்கட்டும். என் உயிர் ஆண் உருவில் இருந்து பிரிந்து என் பெண் ணுருவுக்குச் செல்லட்டும். நான் என் உடலோடும் என் ஆத்மாவோடும் வாழும் வழியொன்றை தேடவேணும். நான் என்ர பிள்ளைகளைக் காக்க என் உடலோடும் என் ஆத்மாவோடும் மீண்டாக வேண்டும். என் பேயுருவில் இருந்து மீள்வேன். என் பழைய வனப்பைப் பெறுவேன்.

பாட்டி: நல்ல முடிவு. உன்ர உடலை நீ ஏற்றுக்கொள். உன்ர உயிரை நீ புரிஞ்சுகொள். நீ நீயாக வாழவேணும். நீ வேறொன்றாக வாழ ஏலாது. நீ நீயாக வாழ்ந்தால்தான் உன்னை நோக்கி வாற சவால்களை எதிர் கொள்ள முடியும். அப்போதுதான் நீ சிறப்பாய் வாழ்வாய்.

பாட்டி வாழ்த்திச் செல்கிறாள். அவள் தன் பழைய உருவைப் பெற்று பிள்ளைகளிடம் செல்கிறாள். பிள்ளைகள் மிக நெருக்கமாக ஓடிவருகிறார்கள்.

பிள்ளை 1: அம்மா வாறா, எங்கட அம்மா திரும்பி வந்திட்டா!!

பிள்ளை 2: எங்களுக்கு இப்ப சந்தோஷமா இருக்கம்மா!

அவர்களது சந்தோஷத்தைக் குலைப்பதான அறிவித்தலொன்றைத் தாங்கியபடி கட்டியக்காரனொருவன் வருகிறான்.

கட்டியக்காரன்: இதுவரை மக்கள் குடியிருப்புக்கு மறுக்கப்பட்டிருந்த உயர் பாதுகாப்புப் பிரதேசத்தின் சில பகுதிகளுக்குள் மக்கள் மீளக்குடியேற முடியும். அந்தப் பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து வேறு பிரதேசங்களில் வாழும் மக்கள் மீளத் தங்கள் இடங்களில் வாழமுடியும். உடன் தங்கள் சொந்த இடங்களுக்கு செல்ல வேண்டும். அவ்வாறு செல்லாதவர்களுக்கு உதவிகள், இதர படிகள் உடன் நிறுத்தப்படும். இது; அரச கட்டளை.

இந்தக் கட்டளை கேட்டு அதிர்ந்து போகிறாள்.

அவள்: எத்தினை இடங்கள்; பூனை குட்டியக் காவுறது போல காவித்திரிஞ்சிட்டம். உதவிகளுக்காக ஆமிக்காரண்ட இடத்துக்குள்ள போய் இருக்க வேண்டி இருக்கு. ஆமிக்காரண்ட இடத்துக்குள்ள பொம்பிள்ளைப் பிள்ளையளோட தனிய இருக்கப் போறன்! என்ன நடக்குமோ? நெருக்குவாரம் இல்லாத வாழ்க்கை எப்ப வரும்? அதற்குரிய தடைகள் எப்ப நீங்கும்? பெருமூச்சு.........!

எழுந்து செல்கிறார்கள். சொந்த இடங்களில் மக்கள் குடியேறும் காட்சி நடக்கிறது. சொந்த இடத்தில இருந்த வீடுகள் ஒன்றும் இல்லை. குடிசைகளிலும் என்.ஜீ.ஓ. பிளாஸ்ரிக் கூடாரங்களில் வாழ்க்கை தொடர்கிறது.

மக்கள் இராணுவத்தின் பிடிக்குள் உள்ள உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இருக்கிறார்கள். ஆண்கள் இல்லாத வீடுகளுக்குள் இராணுவ வீரர்கள் சிலர் அடிக்கடி வந்து போகிறார்கள். பெண்கள் வெளியில் நடமாடப் பயத்தில் வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கிறார்கள். இராணுவ வீரர்கள் சிலர் அவளும் பிள்ளைகளும் தங்கியிருந்த வீட்டுக்கு வருகிறார்கள். இரவுவேளை காம உணர்வு மேலோங்க நாக்கைத் தொங்கவிட்டபடி வீட்டின் கதவை ஒரு இராணுவ வீரன் மெல்லத் திறக்கிறான். மற்றவன் தாயின் சேலை பற்ற முயல்கிறான். தாய் முதலில் பயப்படுகிறாள். பின் சுதாரித்து ஆவேசம் கொள்கிறாள். போர்க் கோலம் பூணுகிறாள். இவள் சத்தம் கேட்டு அயலவர்கள் வெளியே வர இராணுவத்தினர் ஓடிவிடுகிறார்கள்.

அவள்: டேய்! டேய்!.

பாடல்: வீணிலையாயினும் நீ உணராய் அடப்போடா
எழும் மாதுள வாயிரம் கோபவெங் கோலமும் காணாய்
சுடும் தீயினில் மூழ்கிய தீயென நாம் உயர்ந்தோமே
தினம் சாவதையும் விட வாழ்வதில் மூழ்கி நின்றோமே

- நா.சிவசிதம்பரம்

கோபம் ஆவேசமாகிறது. அவள் தன் கணவன் கடன் முடிக்க தடைகள் உடைத்துச் செல்லப் புறப்படுகிறாள். அதற்காக கடலுக்குச் செல்ல போடப்பட்ட தடைகள் உடைத்து போகவும் துணிந்து நிற்கிறாள். பின்னணியில் தாள வாத்தியங்களின் இசை உக்கிரமடைகிறது. வழிவெட்டு நடக்கிறது. இளநீர் வைத்து வாளால் வெட்டிச் செல்கிறார்கள். மேடையின் பின்பகுதியில் உள்ள கடலுக்கு முன் இருந்த தடைகள் அகற்றப்படுகின்றன. அவளுக்கு முன் இப்போ வெள்ளைச் சேலை ஒன்று பிடிக்கப்படுகின்றது. அவள் அதைக் கிழித்து முன்னகர்கிறாள். தலைவிரி கோலமாக கடலைநோக்கி ஆடிச் செல்கிறாள். சுற்றி நின்ற தூர்க்கையின் கோலங்கள் ஆவேசமாக ஆடுகின்றன. அவள் கடலுக்குள் மூழ்கி எழும்புகிறாள். கடலில் எங்கோ தொலைவில் அவள் கணவன் தோன்றுகிறான்.

கணவன்: நீ தைரியமாக இருக்க உனக்கு என்ன வேணும்?

அவள்: நேர் கொண்ட பார்வை
நிமிரும் குணம் எனக்குள்
வேர் கொண்டெழும் ஆற்றல்
இடர் வெல்லும் அஞ்சா நெஞ்சு

கணவன்: அது உனக்குள் இருக்கு.

*கணவன் கடலுள் கலந்து மறைந்து விடுகிறான். அவள் சாந்தமாகி கடலில் இருந்து வெளியே வருகிறாள். இடர் வெல்ல அவள் பெற்ற பல்லாற்றல் அவளின் வாழ்வுக்குப் பயன்பெறுகிறது போலும்.*

பாடல்: போர் தந்த வாழ்விழிவைப்
போக்கும் திறன் முறைசெய்

நேர் கொண்ட பார்வை உந்தன்
நிமிரும் குணம் உன் சொந்தம்

ஊர் உந்தன் உறவும் உந்தன்
உன் மனதின் நிலை உயர

வேர் கொண்டெழுக உந்தன்
விழுதும் வளர்க இன்றே!

- நா.சிவசிதம்பரம்

*பாடல் மெல்ல அசைய அவள் நடுவில் பலகைகளுடன் நிக்கிறாள். இரண்டு பிள்ளைகளும் அவளுடன் நிக்கிறார் கள். இது போரின் பின்னான பல்லாற்றல்.*

அவள்: இது எங்கட குடும்பப்படம்.

*திரை மெல்ல மூடிக்கொள்கிறது.*

- முற்றும் -

## செயல்திறன் அரங்க இயக்கத்தின் திரை நீக்கம் இந்தியப் பயணத்தின் ஒளிப்படத் தொகுப்பு விவரங்கள்:

1. மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற கருத்தரங்கில் பேராசிரியர் முத்தையா உரையாற்றுகிறார்.
2. சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் அரசுவை அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடும் குழுவினர்.
3. பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் முன்பாக செயல்திறன் அரங்க இயக்கத்தினர்.
4. செல்திறன் அரங்க இயக்கத்தினரால் வழங்கப்பட்ட கூத்தரங்கம் இதழ்களை பேராசிரியர் ஆறுமுகம் ஆர்வத்துடன் பார்வையிடுகிறார்.
5. சென்னைப்பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் செயல்திறன் அரங்க இயக்க நிறைவேற்று இயக்குனர் கருத்துரை வழங்குகின்றார்.
6. புதிய காற்று மாத இதழ் அலுவலகத்திற்குச் சென்று எழுத்தாளர்களுடனும் கலையார்வலர்களுடனும் கலந்துரையாடிய பின்னர் எடுக்கப்பட்ட படம்.
7. பாண்டிச்சேரி அமைக்கப்பட்டுள்ள ஏரோவில் கிரா மத்தில் குழுவினர். பின்னணியில் தியான மண்டபம்
8. கலைஞர்களுக்காக தமிழக அரசால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள குடியிருப்புத் திட்டத்தில் உள்ள ஒரு வீடு.
9. மதுரை பாத்திமா கல்லூரியில் இடம்பெற்ற களப்பயிற்சியில் உரையாற்றும் தே.தேவானந்த்.
10. பேராசிரியர் குணசேகரனுடன் குழுவினர்.
11. மதுரைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் சுந்தர்காளி மற்றும் கலைஞர்களுடன் கலந்துரையாடல்.
12. முனைவர் ராஜு அவர்களுடனான கலந்துரையாடலில்...
13. கட்டைக்கூத்துச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டதொரு கருத்தரங்கு.
14. பேராசிரியர் முத்தையா மற்றும் குழுவினர் கலந்துரையாடலில்.....
15. பத்திரிகையாளரும் கலைஞருமான அண்ணாமலையுடன் குழுவினர்.
16. கலைஞர் முருகபூபதி மற்றும் செயல்திறன் அரங்க இயக்க நிறைவேற்று இயக்குனர்.
17. பெண்களுக்கான அரங்கின் தீவிர செயற்பாட்டாளரான மங்கை அவர்களுடன்.......
18. முனைவர் சுந்தர் காளி, ராஜாமஹ்மூது, மருது மற்றும் குழுவினருடன் கலந்துரையாடல்.
19. கவிஞர் இன்குலாப்புடன் சந்திப்பு.
20. கட்டைக்கூத்துக் கலைஞர்களுடன்.......... □

கூத்தரங்கம் இதழுக்கான கட்டுரைகள், ஆய்வுகள், ஆக்கங்கள், செய்திகள், படங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. உங்கள் பகுதிகளில் இடம்பெறும் நாடகங்கள் ஆற்றுகைகள் பற்றிய செய்திகளையோ படங்களையோ விமர்சனங்களையோ எமக்கு அனுப்பி வைக்கலாம். அவை தரம்கண்டு கூத்தரங்கத்தில் பிரசுரமாகும். நாடகங்களின் பிரதிகளை அனுப்பி வைத்தால் அவையும் பிரசுரிக்கப்படும். பாரம்பரிய ஆற்றுகைகள் பற்றிய ஆய்வுகள் மற்றும் ஈழத்து நாடகச் செல்நெறி பற்றிய ஆய்வுகள் பெரிதும் வரவேற்கப்படுகின்றன.






















செயல்திறன் அரங்க
இயக்கத்தினரின் இந்தியப்
பயண ஒளிப்படத்
தொகுப்பு (விவரம் 43ஆம் பக்கத்தில்)